Not for sale

மே - ஜூன் 2013

தமிழாக்கம்

# The Herald

## of Christ's Kingdom



## ஜெபம்

விழித்திருந்து ஜெபியுங்கள் • ஜெபத்தின் வல்லமை

எங்களுக்கு ஜெபிக்க கற்றுத் தாரும் • ஆண்டவரின் ஜெப வாழ்க்கை

ஜெபத்தில் காணப்பட்ட வேறுபாடுகள்

நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும் ? • சுயநலமற்ற ஜெபம்

ஜெபம்

# ஆதியிலே



வெளிப்படுத்த முடியாததும், வார்த்தைகளினால் சொல்ல முடியாததுமான ஆத்துமாவின் உண்மையான விருப்பமானது ஜெபம் என்று கூறப்படுகிறது. கிறிஸ்தவர்களால் அதிகபட்சயாக மகிழக்கூடிய சிறப்புரிமைகளிலும், ஆசீர்வாதங்களிலும் இது ஒன்றாகும். கிறிஸ்துவின் சீஷர்களுக்கு கிடைக்கப் பெற்ற ஒரு வல்லமையான கருவியாகவும் இருக்கிறது. இதன் வழியாக இந்த அண்டசராசரத்தையும் சிருஷ்டித்த நம்முடைய பரலோக தந்தையிடம் இரவிலோ பகலிலோ, நேரடியாகவும் உடனடியாகவும் அவரோடு தொடர்பு பெறுகிறோம்.

இந்த ஜெபத்தின் வழியாக சேனைகளின் கர்த்தரிடம் நம்முடைய துதிகள் மற்றும் நன்றியறிதல்கள், நம்முடைய பயபக்தி மற்றும் நம்பிக்கைகள் மற்றும் நம்முடைய தேவைகள் மற்றும் விண்ணப்பங்கள் ஒவ்வொன்றாக முன்வைப்பதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது. நம்முடைய உண்மையான விண்ணப்பங்களையும், துதிகளையும் கேட்பதற்கு அவர் எப்பொழுதும் செவிகளை சாய்த்துக் கொண்டிருக்கிறார். நம்முடைய ஜெபங்கள் சரியான முறையில் காணப்பட்டால், சுகந்த வாசனையாக அவரிடத்தில் அது ஏறெடுக்கப்படும். (சங். 141:2)

ஜெபம், தேவனோடு இரண்டு வழிகளில் சம்பாஷிக்கக்கூடிய அடிப்படையாக இருக்கிறது. ஜெபத்தின் வழியாக நம்முடைய ஆழமான விருப்பங்களையும் சிந்தனைகளையும் வெளிப்படுத்தலாம். அடுத்து, ஜெபத்தின் வழியாக மனித புரிந்துகொள்ளுதலுக்கு மிகவும் அப்பாற்பட்ட பெலத்தினாலும் ஆறுதலினாலும் நாம் தேற்றப்படுகிறோம். ஜீவ கிரீடத்தை பெற்றுக் கொள்வதற்கான தேவனுடைய சகல நன்மைகளையும், உதவிகளையும் ஆவிக்குரிய வழிநடத்துதலையும் ஜெபமே ஒரு புதிய சிருஷ்டிக்குக் கொடுக்கக்கூடியதாய் இருக்கிறது. மேலும் பரலோகத்தோடு நேரடியான தொடர்பு ஏற்படுத்திக் கொள்ள இந்த ஜெபம் உதவுகிறது.

ஜெபத்தோடு தொடர்பு கொண்டிருக்கும் ஆசீர்வாதங்களையும், பொறுப்புகளையும் இந்த ஹெரால்டு பிரதி மையப்படுத்துகிறது. ஜெபம் என்றால் என்ன என்றும், அது எவ்வாறு பயன்படுத்தப்பட வேண்டும் என்றும் விவரிக்கிறது. இப்படிப்பட்ட ஜெபத்தை நம்முடைய ஆண்டவராம் இயேசு தாவீது மற்றும் எசேக்கியா எவ்வாறு பயன்படுத்தினார்கள் என்று மீண்டும் விவரிக்கிறது. மேலும் யூதாசைப்போல் மற்றவர்களால் எவ்வாறு புறக்கணிக்கப்பட்டது என்றும் காட்டப்படுகிறது. நம்முடைய பரலோகத் தந்தையிடம் உறுதியானதும் நெருக்கமானதும் வெற்றிகரமான தொடர்பை கொள்வதற்கு நம்முடைய ஜெப வாழ்க்கை எவ்வாறு பலப்படுத்துகிறது என்று காட்டப்படுகிறது.

வெற்றிகரமான கிறிஸ்தவ வாழ்க்கையின் முக்கியத்துவத்திற்கு விழித்திருப்பதும் ஜெபிப்பதும் எவ்வளவு அவசியமானது என்று "விழித்திருந்து ஜெபியுங்கள்" என்ற கட்டுரையோடு இப்பிரதி துவங்குகிறது. எசேக்கியேல் மற்றும் தாவீதின் வாழ்க்கையில் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்களை, "ஜெபத்தின் வல்லமை" என்ற தலைப்பு கண்ணோக்குகிறது.

"ஆண்டவரே எங்களுக்கு ஜெபிக்க கற்றுத்தாரும்" (லூக். 11:1) என்று சீஷர்கள் இயேசுவினிடத்தில் கேட்டதற்கு அவர் கற்றுக் கொடுத்த மாதிரி ஜெபத்தை "எங்களுக்கு ஜெபிக்க கற்றுத் தாரும்" என்ற தலைப்பில் மீண்டும் "நம்முடைய ஆண்டவரின் ஜெபவாழ்க்கைக்கு" என்ற தலைப்பு இயேசுவின் ஜெப ஜீவியத்தை ஆராய்ந்து நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஆர்வமாக பின்பற்றக்கூடிய காரியங்கள் என்னென்ன என்பதை குறிப்பிடுகின்றது. "ஜெபத்தில் காணப்பட்ட வேறுபாடுகள்" என்ற தலைப்பு (இயேசுவின் பூமிக்குரிய ஊழியத்தின் கடைசி வாரத்தின்போது ஏற்பட்ட இடுக்கமான சோதனைகளை எதிர்நோக்கின இயேசு, பேதுரு மற்றும் யூதாஸ் எவ்வாறாக ஜெபத்தின் சிறப்புரிமையை பயன்படுத்தினார்கள் என்றும், புறக்கணித்தார்கள் என்றும் காட்டப்படுகிறது.)

"நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும்" என்ற தலைப்பு நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்றும், எதற்காக ஜெபிக்கக்கூடாது என்றும் பல வசனங்களில் ஆராய்ந்து நமக்கு முன் வைக்கிறது. இறுதியாக, "சுயநலமற்ற ஜெபம்" என்ற தலைப்பு, யோவான் 17-ம் அதிகாரத்தில் ஏறெடுக்கப்பட்ட இயேசுவின் அருமையான ஜெபத்தையும், அதில் நாம் பற்றிக் கொள்வதற்கு சில ஆவிக்குரிய பாடங்களையும் கருத்தில் கொள்கிறது.

இந்த பிரதி நாம் ஒவ்வொருவருடைய ஜெப வாழ்க்கையையும் ஊக்குவித்து பெலப்படுத்தும் என்றும் நம்புகின்றோம்.

**மே-ஜூன் 2013**


**விழித்திருந்து ஜெபியுங்கள்** 2
ஜெபமும் நம்முடைய அனுபவங்களும்

**ஜெபத்தின் வல்லமை** 7
எசேக்கியா மற்றும் தாவீது

**எங்களுக்கு ஜெபிக்க கற்றுத் தாரும்** 12
மாதிரி ஜெபம்

**ஆண்டவரின் ஜெப வாழ்க்கை** 19
இயேசுவின் மாதிரி

**ஜெபத்தில் காணப்பட்ட வேறுபாடுகள்** 23
இயேசு பேதுரு மற்றும் யூதாஸ்

**நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும்?** 28
சகோதரர்காக ஏறெடுக்கப்படும் ஜெபங்கள்

**சுயநலமற்ற ஜெபம்** 37
யோவான் 17-ம் அதிகாரத்தில் இயேசுவின் ஜெபம்

**தீர்க்கதரிசனத்தில் இன்று** 42



ஜெபம் மற்றும் நம்முடைய அனுபவங்கள்

# விழித்திருந்து ஜெபியுங்கள்

"நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்." (சங்கீதம் 51:10)

**David Stein**

இந்த சுவிசேஷ யுகத்தில், கிறிஸ்தவர்கள் செல்லும் இடுக்கமான பாதை, சோதனைகளும், அபாயங்களும் நிறைந்ததாக இருக்கிறது. அதற்கேற்றபடி நம்முடைய பரலோகப் பிதாவும், ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவும் நித்தமும் நமக்கு உதவியாக அநேக கருவிகளை வழங்குகிறார்கள். இதில், ஜெபத்தின் சிறப்புரிமையே மிக முக்கியமானது. நம்முடைய அழைப்பையும் தெரிந்து கொள்ளுதலையும் உறுதிபடுத்திக் கொள்வதற்கு தேவனோடு வைத்திருக்கக்கூடிய தொடர்ச்சியான ஐக்கியம் மிக அவசியம். நாம் தேவனோடு கொண்டிருக்கும் ஐக்கியத்தின் விவரங்களையும் அனுபவங்களையும் கூர்ந்து கவனிப்பது மற்றொரு முக்கியமான தேவையாக அனுமதிக்கப்படுகிறது. மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால், தேவன் நம்மை வழிநடத்தக்கூடிய விதங்களையும், நாம் சந்திக்கக்கூடிய எதிர்பாராத அபாயங்களுக்கு எப்பொழுதும் விழித்திருக்க வேண்டும்.

கெத்செமனே தோட்டத்தில் இயேசுவின் சீஷர்களின் செயல்கள் மற்றும் அதற்குபின் பேதுருவின் தோல்விகளும் இதற்கு ஏற்ற மாதிரிகளாகக் காணப்படுகிறது. "நீங்கள் சோதனைக்குட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்; ஆவி உற்சாகமுள்ளதுதான், மாம்சமோ பலவீனமுள்ளது" (மத். 26:41) என்று இயேசு கூறினார். (இதற்கு இணையான பகுதியை மாற். 14:38-ல் காணலாம்).

உருக்கமான தனி ஜெபத்தை முடித்த பின் இயேசு தம்முடைய சீஷர்களிடத்தில் திரும்பிவந்தபோது, அவர்களின் மிக முக்கியமான அந்த இரவில், அயர்ந்த நித்திரை செய்கிறவர்களாக அவர்களை இயேசு கண்டார்! ஆயினும், மாம்சம் பலவீனமாய் இருப்பதை அறிந்ததினாலும், அவர்களின் புரிந்து கொள்ளுதல் இன்னும் ஆழமாக இராததினாலும், இயேசு அவர்களுக்காக பரிதாபப்பட்டார். இவைகளை நம்முடைய ஆவிக்குரிய நன்மைகளுக்காக நாம் பதிவு செய்துள்ளோம். அங்கு அப்போஸ்தலர்கள் விழித்திருந்து ஜெபித்திருக்க வேண்டும். அதேபோல எதிர்பாராத நேரத்தில் விசேஷித்த சோதனைகளை நாம் எதிர்நோக்க வேண்டும் என்று அறிந்தவர்களாக நம்முடைய இடுக்கமான சோதனையின் நேரங்களில் மட்டுமல்ல, நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையின் மற்ற காலங்களிலும் நாம் விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். இந்த ஒரு சூழ்நிலையை இயேசு குறிப்பிடுகிறார். "அக்காலத்தை நீங்கள் அறியாதபடியால் எச்சரிக்கையாயிருங்கள், விழித்திருந்து ஜெபம்பண்ணுங்கள்." (மாற். 13:33)

இந்த சூழ்நிலைக்கு இசைவாக இயேசு தம்முடைய வருகையின் அடையாளங்களையும் அதை தொடரும் உபத்திரவங்களையும் குறித்து சம்பாஷித்தார். ஆயினும் இயேசு இந்த சுவிசேஷ யுகம் முழுவதிலும் தம்முடைய வருங்கால சீஷர்களை தங்களுடைய விசுவாசத்தில் நிலைத்து நிற்கும்படியாக தங்களுடைய தனிப்பட்ட சோதனைகளில் நிலைத்து நிற்க விழித்திருந்து ஜெபிக்க ஆயத்தப்படும்படி இயேசு ஊக்குவிப்பது இங்கு தெளிவாக காணப்படுகிறது. விசேஷமாக இந்த யுகத்தின் முடிவில் வாழ்ந்து கொண்டிருக்கும் நமக்கு இவை மிக முக்கியமான வசனங்கள் மூலமாக குறிப்பான கட்டளைகளும், வேதாகமத்தில் காணப்படும் பல முக்கியமான பாத்திரங்களின் நிழலான அனுபவங்களும், நமக்கு படிப்பினையாகவும், எச்சரிப்புகளாகவும் கொடுக்கப்படுகிறது. பவுல் எழுதினதுபோல, "இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது. இப்படியிருக்க, தன்னை நிற்கிறவனென்று எண்ணுகிறவன் விழாதபடிக்கு எச்சரிக்கையாயிருக்கக்கடவன்." (1 கொரி. 10:11, 12)

தேவனுடைய ஆவி நம்முடைய வாழ்க்கையில் வழிநடத்தக்கூடிய விதங்களையும், இந்த இடுக்கமான வழியில் திடீரென்று ஏற்படும் சோதனைகளை எதிர்க்கவுமே விழித்திருப்பதற்கான முக்கிய நோக்கமாய் இருக்கிறது. இவைகளை நாம் அசட்டை செய்தால் நம்முடைய அழைப்பின் மதிப்பை அறியாமல் இருப்பதற்கு ஒரு அடையாளமாகக் காணப்படும். இந்த அசதியான மனநிலை, இன்னும் அதிகமான சோதனைக்குள் நம்மை உட்படுத்தும்.

**விழிப்புணர்வு**

"நீ வெட்கப்படாத ஊழியக்காரனாயும் சத்திய வசனத்தை நிதானமாய்ப் பகுத்துப் போதிக்கிறவனாயும் உன்னைத் தேவனுக்கு முன்பாக உத்தமனாக நிறுத்தும்படி ஜாக்கிரதையாயிரு" (2 தீமோ. 2:15) என்று அப். பவுல் தீமோத்தேயுவுக்கு அறிவுரை கூறுகிறார். மேலும், "ஆகையால், பிரியமானவர்களே, இவைகள் வரக் காத்திருக்கிற நீங்கள் கறையற்றவர்களும் பிழையில்லாதவர்களுமாய் சமாதானத்தோடே அவர் சந்நிதியில் காணப்படும்படி ஜாக்கிரதையாயிருங்கள்." (2 பேது. 3:14) என்று அப். பேதுரு கூறுகின்றார்.

தேவனுடைய அங்கீகரிப்பை நாம் எவ்வளவாக மதிக்கிறோமோ, அவ்வளவாக நாம் விழிப்புணர்வோடு இருக்கிறோம் என்பதை அறிந்து கொள்ளலாம். நித்தமும் நம்முடைய மாம்ச பெலவீனங்களை ஆராய்ந்து பார்க்க வேண்டும். "நீங்கள் விசுவாசமுள்ளவர்களோவென்று உங்களை நீங்களே சோதித்து அறியுங்கள்; உங்களை நீங்களே பரீட்சித்துப் பாருங்கள். இயேசுகிறிஸ்து உங்களுக்குள் இருக்கிறாரென்று உங்களை நீங்களே அறியீர்களா? நீங்கள் பரீட்சைக்கு நில்லாதவர்களாயிருந்தால் அறியீர்கள்." (2 கொரி. 13:5)

**புத்தியுள்ள மற்றும் புத்தியில்லாத கன்னிகைகள்**

நாம் கொண்டிருக்கும் விழிப்புணர்வு மங்கிப்போகும் பட்சத்தில் அந்த காரியம் கெத்செமனே தோட்டத்தில் ஆழ்ந்த நித்திரையிலிருந்த அப்போஸ்தலர்களின் மனநிலைக்கு உருவகமாக ஒப்பிடலாம். மணவாளன் வர தாமதித்தபோது, புத்தியுள்ளவர்கள் மற்றும் புத்தியில்லாத கன்னிகைகளும் நித்திரையடைந்தார்கள் என்ற உவமை நமக்கு நினைவுப்படுத்துகிறது. இந்த உவமை சபையை பொருத்தவரைக்கும் வரலாற்று சம்பவங்களுக்குப் பொருத்திப் பார்க்கப்படுவதினால் அதிலிருந்து குணநலன்களுக்கு ஏதுவான பாடங்களை நாம் கற்றுக் கொள்ளலாம்.

முதலாவது, நாம் அபூர்ணராக இருப்பதினால், அவ்வப்போது நாம் விழித்திருக்கக்கூடிய காரியங்களில் தொய்வு அடைகிறோம். ஆனால் நம்முடைய கிறிஸ்தவ குணநலன்களை "பொன், வெள்ளி, விலையேறப்பெற்ற கற்கள்" (1 கொரி. 3:12) போன்றவைகளால் கட்டுவதற்கு விருப்பப்பட்டு விழித்திருக்கும் பட்சத்தில் நொடிப்பொழுது சோர்வடைந்தாலும் உடனடியாக அவைகளை விட்டு உணர்வடைந்து மீண்டும் விழித்திருப்பதற்கு ஆயத்தப்படலாம்.

இரண்டாவதாக, தோல்விகள் நம்மை சோர்வடைவதற்கு அனுமதிக்கக்கூடாது. நம்முடைய ஆண்டவரின் பூமிக்குரிய ஊழியத்தின் இறுதி இராத்திரியில் பேதுருவின் விசுவாசம் மிகப்பெரிய அளவில் சரிந்து நொறுங்கினதை நினைவில் கொள்ளலாம். தோட்டத்தில் நித்திரை அடைந்தது முதலாவது அறிகுறியாக மட்டுமே காணப்பட்டது. ஆனால், சாயங்காலமானபோது அவர் இயேசுவை மூன்றுமுறை மறுதலித்து அவருக்குள் இருந்த விசுவாசமும் நம்பிக்கையும் மிகப்பெரிய அளவில் இடறல் அடைந்தது. "மனங்கசந்து அழுதார்" (மாற். 14:72) என்று மாற்கு கூறுகிறார்.

ஆனால், நம்முடைய ஆண்டவராம் இயேசு அவரை சரியாக புரிந்து கொண்டவராய் பேதுருவுக்கு இரக்கம் பாராட்டினார். நம்மை சீர் பொருந்துவதற்கு இயேசு எப்பொழுதும் விருப்பமுள்ளவராகவும், திராணியுள்ளவராகவும் இருக்கிறார். பேதுருவின் காரியத்தை பொருத்தவரையில் பேதுருவின் மேல் வைத்திருந்த நம்பிக்கைக்கு இயேசு உறுதியளித்திருந்தார். யோவா. 21:15-17 வசனங்களில் இயேசு அன்பை குறித்து பேதுருவிடம் பேசினார். மேலும் பேதுரு அவரை நேசித்தாரா என்று மூன்று முறை கேள்வி எழுப்பினார். ஒவ்வொரு முறையும் பேதுரு ஆழ்ந்த வேதனையோடு தான் இயேசுவை

நேசிப்பதாகக் கூறினார். ஒவ்வொரு முறையும் "என் ஆடுகளை மேய்ப்பாயாக" என்று நம்முடைய ஆண்டவர் பேதுருவிடம் கேட்டதை கவனித்துப் பாருங்கள். இவ்வளவு பெரிய பொறுப்பை பேதுருவிடம் கொடுப்பதின் மூலம் இயேசு அவர் மேல் வைத்திருந்த நம்பிக்கையை தெளிவாக வெளிப்படுத்தினார். தோல்வியடைந்ததினால் பேதுரு ஒருபோதும் புறக்கணிக்கப்படவில்லை. ஆனால் ஆண்டவரின் அன்பு மற்றும் நம்பிக்கையினால் அரவணைக்கப்பட்டார். நம்முடைய இருதயங்களும் நேர்மையாகவும், முழுமையாகவும் தேவனிடத்தில் காணப்பட்டால் இக்காரியம் நம்மிடத்திலும் செயல்படுத்தப்படும்.

**விழித்திருந்து ஜெபியுங்கள்**

விழித்திருக்க வேண்டும் என்று நாம் வலியுறுத்துவதினால், "விழித்திருந்து ஜெபியுங்கள்" என்பதே நம்முடைய பாடமாய் இருக்கிறது. உண்மையில், உணர்வோடு விழித்திருப்பவர்கள் தொடர்ந்து ஜெபத்தில் தரித்திருக்க வேண்டும். இயேசு அந்த இரவில் கெத்செமனே தோட்டத்தில் தம்முடைய சொந்த அறிவுரையை தாமே பின்பற்றினார். பரிபூரண மனுஷனாகிய இயேசுவே இவைகளை செய்வதற்கு அவசியப்பட்டிருந்தால், நாம் எந்தளவிற்கு செய்ய வேண்டும்! ஒருவேளை, நம்முடைய கெத்செமனே அனுபவங்களில், நாம் ஜெபிக்க வேண்டும் என்று நமக்கு சொல்லிக் கொடுக்காமல் விட்டிருக்கலாம். இப்படிப்பட்ட கடுமையான அனுபவித்தல் நாம் இயல்பாக தேவனிடத்தில் உதவிக்காக மண்டியிடுவோம்.

ஆயினும் ஒரு கெத்செமனே அனுபவம் இரண்டு பகுதிகளை உள்ளடக்கி இருக்கிறது. முதலில் புயலுக்கு முன் அமைதி காணப்படுகிறது. அதற்குப்பின் மிகத் தீவிரமாக புயல் எழும்புகிறது. வரக்கூடிய காரியங்கள் என்னவென்று சீஷர்கள் தெளிவாக அறிந்திருந்தால் கேள்விக்கிடமின்றி பலமான இயேசுவின் ஆதாரத்தின் கீழ் அவர்கள் உடனடியாக எழும்பி வந்திருப்பார்கள். ஆனால் இயேசுவின் வார்த்தைகளை கவனமாகக் கேட்காமல் அவரிடத்தில் நெருங்கியிராததினால் வரக்கூடிய சம்பவங்களைக் குறித்து உணர்வதற்கு ஏற்ற மனநிலையை பெறாமல் இருந்தது அவருடைய முக்கிய பிரச்சனையாகக் காணப்படுகிறது.

இயேசு பேதுருவை முன் எச்சரிப்பதற்கு எவ்வளவோ முயற்சித்தார். "பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான்." (லூக். 22:31)

"இயேசு பேதுருவுக்கு வரக்கூடிய கடுமையான அனுபவங்களைக் குறித்து முன் அறிவித்து எச்சரித்திருந்தாலும் பேதுரு எந்தவிதமான பயத்தையோ திகிலையோ உணரவில்லை. ஆயினும் அவர் விழித்திருந்து ஜெபிக்க வேண்டிய விஷயத்தில் குறைவுள்ளவராகக் காணப்பட்டார். மேலும் அவருக்குள் இருந்த தன்நம்பிக்கையானது குறித்த காலத்தில் தோல்வியடையும்படி அவரை வழிநடத்தியது." (R5563)

வரக்கூடிய கடுமையான சோதனைகளுக்கு நம்மை நாம் ஆயத்தப்படுத்திக் கொள்வதற்கு தேவன் மிக அன்பாக புயலுக்கு முன் மிக நிசப்தமான அமைதியை நமக்கு அனுமதிப்பார். ஆனால் நாம் அதை கூர்ந்து கவனிக்க வேண்டும். நித்தமும் விழித்திருந்து ஜெபிக்கக்கூடிய பழக்கத்தை நம்முடைய வாழ்க்கையில் பழகினால் நம்மை சுற்றி கேட்கக்கூடிய தேவனுடைய வார்த்தைகளுக்கு நாம் முழுமையாக செவிக்கொடுப்பவர்களாக இருப்போம். இயேசு மற்றும் அப்போஸ்தலர்களின் உபதேசங்களைப் படிப்பதினால் மட்டுமல்ல, நித்தமும் வேதாகமத்தைப் படிப்பதினால் மட்டுமல்ல, நம்முடைய அனுபவங்களில் சேர்க்கக்கூடிய குரல்களின் வழியாகவும், அமைதியின் வழியாகவும் தேவனுடைய எச்சரிப்பை நாம் உணர்ந்து கொள்ளலாம்.

நாம் விழித்திருந்து ஜெபிப்பதற்கு நம்முடைய சகோதர ஐக்கியத்தில் பரிமாறப்படக்கூடிய சத்தியங்களுக்கு நாம் மிகவும் கவனம் செலுத்தக்கூடியவர்களாக இருக்கிறோம். நம்முடைய தனிப்பட்ட வாழ்க்கைக்கு தேவையான கட்டளைகளை பெரும்பாலும் நம்முடைய சகோதரர்கள் வழியாகவே பெறுகிறோம். அவர்கள் பேசும் சில வார்த்தைகளினால் நம்முடைய ஆவிக்குரிய சிந்தனைக்கு தேவையான தூண்டுகோலும் கிடைக்கலாம். ஆகவே நாம் எந்த சகோதர சகோதிரிகளின் வார்த்தைகளையும், உலகத்தாரின் வார்த்தைகளையும் புறக்

கணிக்கக்கூடாது. ஏனெனில், தேவன் ஒரு கழுதையின் வழியாக தம்முடைய தீர்க்கதரிசியாகிய பிலேயாமிடம் பேசினார். (எண். 22:22-31) தேவனுடைய அர்ப்பணிக்கப்பட்ட பிள்ளைகளுக்கு எவ்வழிகளிலிருந்தும் தேவனுடைய எச்சரிப்பைப் பெறுவதற்கு வாய்ப்புகள் இருப்பதினால், எப்பக்கத்திலிருந்தும் வரக்கூடிய குரலைக் கேட்பதற்கு நாம் எப்போதும் விழித்திருக்க வேண்டும். நம்மை பயமுறுத்தும் மாம்ச பெலவீனத்திற்கு நாம் குருடாக்கப்பட்டிருக்கும் பொழுது தேவன் இப்படிப்பட்ட வழிகளின் மூலமாக நம்மை எச்சரிப்பார்.

கெத்செமனே தோட்டத்தில், இயேசுவை பிடிக்கவந்த கூட்டம், சீஷர்களை சுற்றி வளைத்தபோது அவர்கள் திகைத்துப் போனார்கள். "அப்பொழுது, இயேசு அவர்களை நோக்கி: மேய்ப்பனை வெட்டுவேன், ஆடுகள் சிதறடிக்கப்படும், என்று எழுதியிருக்கிறபடி, இந்த இராத்திரியிலே நீங்களெல்லாரும் என்னிமித்தம் இடறலடைவீர்கள்" (மாற். 14:27) என்று இயேசு முன்னதாக அறிவித்திருந்த போதிலும் தங்களுடைய ஆண்டவர் பிடிபட்ட பின்பு தாங்கள் அனைவரும் சிதறடிக்கப் படுவார்கள் என்பதை சீஷர்கள் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை.

சகோதரர்களே, இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் நாம் அகப்பட்டுக் கொண்டால் நாம் என்ன செய்வோம்? வசனங்களில் காணப்படும் தீர்க்கதரிசனங்கள் மட்டும் நிழல்களில் சபையின் இறுதி அங்கத்தினர்கள் இரத்த சாட்சிகளாக மரிப்பார்கள் என்பதை நாம் அறிந்திருக்கிறோம். அவர்களும் தங்களுடைய கெத்செமனே அனுபவங்களைப் பெறுவார்கள். அப்பொழுது நாம் ஓடி ஒளிந்து கொள்வோமா? அல்லது இப்படிப்பட்ட அனுபவங்களுக்குள் நுழைந்து சத்தியத்தின் பகைஞருக்கு எதிர்த்து நிற்கும்படியாக பரிசுத்த ஆவியின் வல்லமையில் நம்பிக்கையோடு நிலைத்து நிற்பதற்கு விழித்திருந்து ஜெபிப்போமா? இந்த அனுபவங்களுக்குள் நாம் பிரவேசிப்பதற்கு முன்னதாகவே நம்முடைய ஆவிக்குரிய சிந்தையின் பழக்கங்களை வளர்ச்சியடைய செய்வது மிக அவசியமாய் இருக்கிறது.

விழித்திருந்து ஜெபிக்கும்பொழுது நம்முடைய இருதயங்களை கவ்விக் கொண்டிருக்கும் பயங்கள் தளர்ச்சியடையும். நாம் தேவனோடும் ஆண்டவராம் இயேசுவோடும் கொண்டிருக்கக்கூடிய நெருக்கமான உறவும் அவர்களோடு நடக்கக்கூடிய நடையும் நம்முடைய வாழ்க்கையின் ஒவ்வொரு கட்டங்களிலும் தேவனுடைய மேற்கொள்ளுதலை நிரூபிக்கிறது. இந்த நிரூபணங்கள் நம்முடைய வாழ்க்கையில் படிப்படியாக வளர்ச்சியடைய வேண்டும். முதலாவது ஆவிக்குரிய வரங்களுக்காக தேவனிடத்தில் ஜெபிக்கிறோம். அதற்குப்பின் விழித்திருக்கும் பொழுது தேவன் நம்முடைய ஜெபங்களுக்கு கிருபையாக பதிலளிப்பதைக் காண்கிறோம். நமக்குள் கிறிஸ்துவின் குணலட்சணங்கள் வளர்ச்சியடைவதற்கு உதவிகளை நாடுகிறோம். மீண்டுமாக இந்த குணங்களில் வளர்ச்சியடைவதற்கு தேவன் நமக்கு கிருபையாக இன்னும் அதிகமான இக்கட்டான அனுபவங்களை அனுமதிக்கிறார். இப்படியாக இச்செயல்பாடுகளில் ஜெபமும் விழித்திருப்பதும் ஒன்றோடொன்று இசைவாக செல்வதைக் காணலாம்.

காலப்போக்கில் மிகுதியான உபத்திரவத்தின் காலம் வரும்பொழுது நம்முடைய வாழ்க்கையில் முடிவுக்கட்ட அனுபவங்களை சந்திக்க நேரிடுகையில் நம்முடைய இறுதி சுவாசம் வரைக்கும் நம்முடைய சோதனையின் இறுதிகட்டம் வரைக்கும் கிடைக்கக்கூடிய தைரியத்தை நாம் முன்னதாகவே யேகோவா தேவனின் வழிநடத்துதலின் மேல் நம்பிக்கையில் வளர்ச்சியடைந்தவர்களாகக் காணப்பட வேண்டும்.

**சீஷகைகள்**

துவக்கத்தில் பேதுரு தம்முடைய விசுவாசத்தில் அடைந்த தோல்வியைக் குறித்தும், நம்முடைய ஆண்டவர் கையாண்ட விதத்தைக் குறித்தும் சுருக்கமாகப் பார்த்தோம். அதுபோல, அவ்வப்பொழுது ஆண்டவரால் நாமும் சுத்திகரிக்கப்பட வேண்டியது மிக அவசியமாய் இருக்கிறது. தெய்வீக சித்தத்தை பற்றிய அறிவில் நாளுக்குநாள் நாம் தேர்ச்சி பெற்றால் அவருடைய சித்தத்திற்கு நாம் அதிகமதிகமாக கணக்கு கொடுக்க வேண்டும் என்று உறுதிபடுகிறது. இப்படியாக அரைகுறையாக தேவ சித்தத்தை உணர்ந்து, வழிவிலகிப்போகக்கூடியவர்களிடத்தில் தேவன் மிகக் கூர்மையாக (sharply) செயல்படுகிறார்.

ஆனால் இப்படிப்பட்ட காரியங்கள் நம்மை சோர்வடைவதற்கு அனுமதிக்கக்கூடாது. ஏனெனில் நாம் சோர்வடைவதற்கு அல்ல, மாறாக நம்முடைய தவறான வழிகளை திருத்திக் கொண்டு தேவன் நம்மேல் கொண்டிருக்கும் அன்பை நடைமுறைப்படுத்தி நமக்குள் அவர் நிறைவேற்ற வேண்டிய அவருடைய சித்தங்களை நிறைவேற்ற வேண்டும்.

"அன்றியும்: என் மகனே, கர்த்தருடைய சிட்சையை அற்பமாக எண்ணாதே, அவரால் கடிந்துகொள்ளப்படும்போது சோர்ந்துபோகாதே. கர்த்தர் எவனிடத்தில் அன்புகூருகிறாரோ அவனை அவர் சிட்சித்து, தாம் சேர்த்துக்கொள்ளுகிற எந்த மகனையும் தண்டிக்கிறார் என்று பிள்ளைகளுக்குச் சொல்லுகிறதுபோல உங்களுக்குச் சொல்லியிருக்கிற புத்திமதியை மறந்தீர்கள். நீங்கள் சிட்சையைச் சகிக்கிறவர்களாயிருந்தால் தேவன் உங்களைப் புத்திரராக எண்ணி நடத்துகிறார்; தகப்பன் சிட்சியாத புத்திரனுண்டோ? எல்லாருக்கும் கிடைக்கும் சிட்சை உங்களுக்குக் கிடையாதிருந்தால் நீங்கள் புத்திரராயிராமல் வேசிப்பிள்ளைகளாயிருப்பீர்களே." (எபி. 12:5-8)

"அன்றியும், நம்முடைய சரீரத்தின் தகப்பன்மார்கள் நம்மைச் சிட்சிக்கும்போது, அவர்களுக்கு நாம் அஞ்சி நடந்திருக்க, நாம் பிழைக்கத்தக்கதாக ஆவிகளின் பிதாவுக்கு வெகு அதிகமாய் அடங்கி நடக்கவேண்டுமல்லவா? அவர்கள் தங்களுக்கு நலமென்றுதோன்றினபடி கொஞ்சக்காலம் சிட்சித்தார்கள்; இவரோ தம்முடைய பரிசுத்தத்துக்கு நாம் பங்குள்ளவர்களாகும்பொருட்டு நம்முடைய பிரயோஜனத்துக்காகவே நம்மைச் சிட்சிக்கிறார். எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்." (எபி. 12:9-11)

"ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்." (எபி. 12:12-13)

தேவன் நம்மை சிட்சிக்கும் பொழுது விழித்திருந்து ஜெபிக்க வேண்டும். இக்காரியத்தில் நாம் தேவனோடு இணைந்து அநேகக் காரியங்களை நடப்பிக்கலாம். மற்றவர்களை வளர்ச்சிக்குரிய பாதையில் நடத்தக்கூடிய கருத்துகளை திறந்த மனதோடு முன் வைக்க வேண்டும். நம்முடைய சகோதரர்கள் வழியாக தேவன் நடப்பிக்கும் கிரியைகள் நம்முடைய வளர்ச்சிக்கு உதவியாக இருக்கும் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். "இரும்பை இரும்பு கருக்கிடும்; அப்படியே மனுஷனும் தன் சிநேகிதனுடைய முகத்தைக் கருக்கிடுகிறான்." (நீதி. 27:17) "ஒருவன் மூடரின் பாட்டைக் கேட்பதிலும், ஞானியின் கடிந்துகொள்ளுதலைக் கேட்பது நலம். " (பிரச. 7:5)

சுருக்கமாக சொல்லப்போனால், விழித்திருந்து ஜெபிக்கக்கூடிய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கை நமக்கு முன் இருக்கும் சோதனைகளிலிருந்து நம்மை நித்தம் பாதுகாக்கக்கூடியதாய் இருக்கிறது. திடீரென்று ஒரு கெத்செமனே அனுபவத்திற்குள் சிக்கும் பொழுது, அவைகளினால் நாம் அதிருப்தி அடையமாட்டோம். வாழ்க்கையின் எப்பக்கத்திலிருந்தும், எவ்வழிகளிலிருந்தும் தேவனுடைய சத்தத்தையும், இயேசுவினுடைய சத்தத்தையும் உணர்ந்து கொள்வதற்கு நாம் முழு கவனத்துடன் இருக்க வேண்டும். கடுமையான சூழ்நிலைகளிலும் நம்முடைய சகோதரர்கள் நமக்கு அளிக்கும் உதவிகளை மனதார ஏற்றுக் கொள்வோம். மிகப்பெரிய பரிசாகிய தெய்வீக சுபாவத்தை நமக்கு தருவதற்கு உண்மையாக வாஞ்சிக்கும் நம்முடைய அன்பான பரலோகத் தந்தையினிடமிருந்து வரக்கூடிய சிட்சைகளை சந்தோஷத்துடன் வரவேற்போம்.

"பயப்படாதே சிறுமந்தையே, உங்களுக்கு ராஜ்யத்தைக் கொடுக்க உங்கள் பிதா பிரியமாயிருக்கிறார்." (லூக். 12:32)

எசேக்கியா மற்றும் தாவீது

# ஜெபத்தின் வல்லமை



"உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்;" (2 இராஜா 20:5)

**David Christiansen**

### ஜீவனுக்குரிய எசேக்கியாவின் ஜெபம்

யூதாவை ஆட்சி செய்த இராஜாவாகிய எசேக்கியாவின் 14-ம் வருடத்தில் மரணத்திற்குரிய வியாதியினால் தாக்கப்பட்டார். கிறிஸ்தவர்களுக்கு இவருடைய ஜெபத்தில் பல பாடங்கள் உள்ளது.

"அந்நாட்களில் எசேக்கியா வியாதிப்பட்டு மரணத்துக்கு ஏதுவாயிருந்தான்; அப்பொழுது ஆமோத்சின் குமாரனாகிய ஏசாயா என்னும் தீர்க்கதரிசி அவனிடத்தில் வந்து, அவனை நோக்கி: நீர் உமது வீட்டுக்காரியத்தை ஒழுங்குப்படுத்தும், நீர் பிழைக்கமாட்டீர், மரித்துப்போவீர் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றான். அப்பொழுது எசேக்கியா தன் முகத்தைச் சுவர்ப்புறமாகத் திருப்பிக்கொண்டு, கர்த்தரை நோக்கி: ஆ கர்த்தாவே, நான் உமக்கு முன்பாக உண்மையும் மன உத்தமமுமாய் நடந்து, உமது பார்வைக்கு நலமானதைச் செய்தேன் என்பதை நினைத்தருளும் என்று விண்ணப்பம்பண்ணி, எசேக்கியா மிகவும் அழுதான்." (ஏசா. 38:1-3)

தேவன் ஏசாயாவிடம், "நீ திரும்பிப்போய், என் ஜனத்தின் அதிபதியாகிய எசேக்கியாவை நோக்கி: உன் தகப்பனாகிய தாவீதின் தேவனாயிருக்கிற கர்த்தர் சொல்லுகிறது என்னவென்றால்: உன் விண்ணப்பத்தைக் கேட்டேன், உன் கண்ணீரைக் கண்டேன்; இதோ, நான் உன்னைக் குணமாக்குவேன்; மூன்றாம் நாளிலே நீ கர்த்தருடைய ஆலயத்துக்குப் போவாய். உன் நாட்களோடே பதினைந்து வருஷங்களைக் கூட்டுவேன்; உன்னையும் இந்த நகரத்தையும் அசீரியா ராஜாவின் கைக்குத் தப்புவித்து, என்னிமித்தமும் என் தாசனாகிய தாவீதினிமித்தமும் இந்த நகரத்துக்கு ஆதரவாய் இருப்பேன் என்று சொல் என்றார்." (2 இரா. 20:5, 6; ஏசா. 38:1-6)

எசேக்கியா இராஜா மரிக்கப் போவதினால், அவருடைய வீட்டுக் காரியங்களை ஒழுங்கு செய்யும்படி ஏசாயா கூறினார். அந்நேரத்தில் எசேக்கியாவுக்கு பிள்ளைகள் இல்லாதிருந்ததினால் அந்த பொறுப்புகளை ஒப்புவிப்பதற்கு ஒருவரும் இருக்கவில்லை. எசேக்கியா இராஜாவுக்கு பிள்ளைகள் இல்லாததினாலும் அவருடைய வீட்டையும் ஆட்சியையும் பொறுப்பாக நடத்த தனக்கு சொந்த வாரிசு இல்லாததினாலும் அவர் மிகவும் கவலைப்பட்டதாக யூத வரலாற்று ஆசிரியர் பிலேவியஸ் ஜோசபஸ் (Flavius Josephus) குறிப்பிடுகிறார்.

அவருடைய வாழ்நாள் நீடித்திருந்ததினிமித்தம் எசேக்கியா இராஜா மனாசே என்ற குமாரனை இறுதியில் பெற்றெடுத்தார். அவர் யூத இராஜாக்களில் மிக மோசமான ஒரு இராஜாவாக ஆட்சி புரிந்தார். எசேக்கியா தன்னுடைய வாழ்நாள் நீடித்திருப்பதற்கு கேட்கவில்லை என்றால் மனாசேயை போல ஒரு கொடூரமான இராஜாவை, யூதா பெற்றிருக்காது. இப்படியாக எசேக்கியாவின் ஜெபத்திற்குண்டான வல்லமையானது - எருசலேமை பாதுகாப்பதற்கு பதினைந்து வருடங்கள் தன்னுடைய ஆயுசு நாட்களோடு பெற்றுக் கொண்டார். ஆனால், தேவனுடைய சித்தமல்லாத காரியத்திற்காக ஜெபிப்பதற்கு உண்டான விளைவுகளைக் காணலாம். இதில் நமக்கு ஒரு முக்கியமான பாடம் அமைந்துள்ளது. நாம் எதற்காக ஜெபிக்கிறோம் என்பதைக் குறித்து மிகக் கவனமாக இருக்க வேண்டும். மேலும், நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சிக்கு ஏதுவான சிறந்த காரியங்களை எப்போதும் நம்முடைய பரலோக பிதா மனதில் வைத்திருக்கிறார் என்பதை நம்பி இயேசுவின் மாதிரியைப் பின்பற்ற வேண்டும்.

"பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது என்று ஜெபம்பண்ணினார்." (லூக். 22:42) தேவனுடைய ஞானம் மிகவும் மேன்மையானது என்பதை இயேசு அறிந்திருந்தார். ஆனால், தன்னுடைய ஆழ்ந்த வேதனையின் நேரத்தில் எசேக்கியா இராஜா இந்த

உண்மையை மறந்து விட்டதாக தோன்றுகிறது. பல வருடங்களாக யூதாவை கவனித்து கண்காணித்த தேவன் எசேக்கியா மரித்து போயிருந்தாலும் அந்த சூழ் நிலைகளில் மேற்கொண்டு அந்த ஆட்சிமுறைகளை நன்மைக்கு ஏதுவாக நடத்தியிருப்பார். நாம் எவ்வளவு நன்மையான காரியங்களைச் சிந்தித்தாலும் இறுதியில் நன்மை தரக்கூடிய காரியங்களை நடத்துவார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். "அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர் களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோ. 8:28; 26 மற்றும் 27-ஐ காண்க.)

இரண்டாவது பாடமாக, நமக்கு என்ன மோசமான காரியங்கள் நேரிட்டாலும், அந்த சோதனைகளை எதிர்நோக்குவதற்கான உதவிகளை மட்டுமே நாம் பரலோகப்பிதாவிடம் விண்ணப்பிக்க வேண்டும். மாறாக அந்த சூழ்நிலைகளை மாற்றவும், சோதனைகளிலிருந்து வெளியேறவும் ஜெபிக்கக்கூடாது. நம்முடைய பிரச்சனைகளுக்கு தீர்வு காணும்படியாக தேவனிடத்தில் விண்ணப்பிக்கும்பொழுது, நம்முடைய வருங்காலத்தில் ஒரு மனாசே வருவாரா இல்லையா என்பதை நாம் எப்பொழுதும் அறிந்து கொள்ளமுடியாது.

எசேக்கியா அவருடைய ஜெபத்தில் எந்த காரியத்தைக் குறித்தும் விண்ணப்பங்களை ஏறெடுக்காத போதிலும் தேவன் அவருக்கு 15 வருடத்தை அவருடைய வாழ்க்கையில் கூட்டிக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது - ஏதோ எசேக்கியா தேவனிடம் இக்காரியங்களுக்காக விண்ணப்பித்ததுபோல. இதன் காரணமாக 2 இரா. 20-ம் வசனத்தில் பதிவு செய்யப்பட்ட அவருடைய ஜெபம் முழுமையாக காணப்படவில்லை. எசேக்கியாவின் முழுமையான ஜெபம் ஏசாயா 38:9-20 வசனங்களில் தீர்க்கதரிசன நடையில் வெளிப்படுத்தப்பட்டு இருக்கிறது. உண்மையில் அந்த ஜெபத்திற்கு இரண்டு பகுதிகள் உண்டு. முதலில் எசேக்கியா தன்னுடைய ஆழ்ந்த வருத்தத்தை தேவனோடு பகிர்ந்து கொள்கிறார். (9-14) அதற்கு பின் இந்த மரணத்திற்கு ஏதுவான வியாதியிலிருந்து தன்னை விடுவித்ததற்காக முழு இருதயத்தோடு நன்றிகளை ஏறெடுத்தார். (15-20)

எசேக்கியா தன்னுடைய மரணத்தின் ஆழ்ந்த வேதனைகள் குறித்து 12 மற்றும் 13-ம் வசனங்களை பேசினபின், "நான் கொள்ளையிடவும் சூறையாடவும், மதில்களில்லாமல் கிடக்கிறகிராமங்களுள்ள தேசத்துக்கு விரோதமாய்ப்போவேன்; நிர்விசாரமாய்ச் சுகத்தோடே குடியிருக்கிறவர்களின்மேல் வருவேன்; அவர்கள் எல்லாரும் மதில்களில்லாமல் குடியிருக்கிறார்கள்; அவர்களுக்குத் தாழ்ப்பாளும் இல்லை, கதவுகளும் இல்லை என்பாய். சேபா தேசத்தாரும், தேதான் தேசத்தாரும், தர்ஷீசின் வர்த்தகரும் அதினுடைய பாலசிங்கங்களான அனைவரும் உன்னை நோக்கி: நீ கொள்ளையிட அல்லவோ வருகிறாயென்றும், நீ சூறையாடி, வெள்ளியையும் பொன்னையும் ஆஸ்தியையும் எடுத்துக்கொள்ளுகிறதற்கும், ஆடுகளையும் மாடுகளையும் பிடிக்கிறதற்கும், மிகவும் கொள்ளையிடுகிறதற்கும் அல்லவோ உன்னுடைய கூட்டத்தைக் கூட்டினாயென்றும் சொல்லுவார்கள்" என்று கூறினார். இந்த சூழ்நிலைகளை நாம் பார்க்கும்பொழுது எசேக்கியா தன்னுடைய ஜீவன் நீடித்திருப்பதற்காக விண்ணப்பித்தார் என்பதை நாம் அறிந்து கொள்ளலாம். தேவனும் அவருடைய விண்ணப்பத்திற்கு பதிலளித்தார். இன்றைய கிறிஸ்தவர்களுக்கு ஒரு சிறப்பான பாடம் உள்ளது. இதை கருத்தில் கொண்டு இயேசு, "உங்கள் இருதயம் கலங்காதிருப்பதாக; தேவனிடத்தில் விசுவாசமாயிருங்கள், என்னிடத்திலும் விசுவாசமாயிருங்கள்" (யோவா. 14:1) என்று கூறினார். தேவன் மேல் நம்பிக்கை வைப்பதற்கு எந்தவிதமான நிபந்தனைகளையும் இயேசு முன் வைக்கவில்லை. நாம் உபத்திரவப்பட்டாலும் சரி அல்லது மரித்தாலும் சரி நாம் தேவன் மேல் நம்பிக்கையாயிருக்க வேண்டும். நம்முடைய கடுமையான சோதனைகளில் பரலோக தந்தையை நோக்கி விண்ணப்பிக்க வேண்டும். ஆனால் நம்முடைய பிதா இந்த சூழ்நிலைகளை எவ்வாறு நடத்துவார் என்பதை குறித்து நாம் ஒருபோதும் கவலைப்படக்கூடாது.

ஆயினும் நாம் மாம்சத்தில் இருப்பதினால் சோதனைகள் நம்முடைய ஆவிக்குரிய மனதிற்குரிய அல்லது உணர்வுகளில் அழுத்தங்களை ஏற்படுத்தினால் சில நேரங்களில் அதிகமாகக் கவலைப்படுகிறோம். அழுத்தம் சோதனையின் ஒரு பகுதியாய் இருக்கிறது. அதை மேற்கொள்ளுவதற்கு தேவனிடத்தில் மிக எளிமையாக விண்ணப்பிக்கலாம். இதுவே தேவனுடைய ஏற்பாட்டின் மிகச் சிறப்பான

அம்சமாகும். எசேக்கியாவைப்போல நாமும் நம்முடைய சோதனைகளை தேவனுக்கு முன்பாக வைத்து அதிலிருந்து தப்பித்துக் கொள்ளும் வழிகளுக்காக விண்ணப்பிக்கலாம். நாம் எப்பொழுது தேவனை கூப்பிட்டாலும் அவர் நம்முடைய சோதனைகளை எதிர்நோக்குவதற்கு நிச்சயமாக பலனளிப்பார் என்று நாம் அறிந்திருக்கிறோம்.

**"இதோ, சமாதானத்துக்குப் பதிலாக மகா கசப்பு வந்திருந்தது,"** (ஏசா. 38:17) என்று எசேக்கியா நிறைவு செய்கிறார். அவருக்கு அனுமதிக்கப்பட்ட சோதனைகள் அவருடைய நன்மைக்காக அனுமதிக்கப்பட்டிருந்ததை உணர்ந்தார். தேவனால் அனுமதிக்கப்பட்ட பாடுகளை அனுபவித்து இயேசுவின் கீழ்ப்படிதலைக் கற்றுக் கொண்டார் என்று வாசிக்கிறோம். (எபி. 5:8) எசேக்கியா ஒரு நீதியுள்ள இராஜா என்று நமக்கு சொல்லப்படுகிறது. "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக். 5:16) எசேக்கியாவின் ஜெபத்தில் எப்படிப்பட்ட வல்லமை செயல்பட்டது!

**எசேக்கியாவின் ஜெபத்திலிருந்து கிடைக்கும் முடிவுரைகள்**

தேவனிடத்திலிருந்து பதினைந்து வருடங்களை கூடுதலாக ஆயுசு நாட்களைப் பெற்றதின் மூலம் எசேக்கியாவின் ஜெபத்திற்குரிய வல்லமை காட்டப்படுகிறது. எருசலேம், அசீரியா சேனைகளிடமிருந்து மீட்கப்பட்டு எசேக்கியாவின் மீதியுள்ள நாட்கள் "சமாதானத்தோடும், சத்தியத்தோடும்" காணப்பட்டது. (ஏசா. 39:8) ஆயினும் ஒரு தவறான காரியத்திற்கு எசேக்கியா ஜெபித்ததினால் அதற்கு பின் நடந்த காரியங்களையும் நாம் காணலாம். அவருடைய வீட்டின் காரியங்களை ஒழுங்கு செய்யும்படி ஏசாயா தீர்க்கதரிசி எசேக்கியாவிடம் சொன்னார். மாறாக, இவருக்குப்பின் ஒரு இராஜாவை ஆயத்தப்படுத்துவதற்காக தனக்கு ஒரு குமாரன் வேண்டும் என்று ஜெபிக்க சொல்லவில்லை. எசேக்கியாவின் வாழ்க்கை நீடித்ததினால் ஒரு துன்மார்க்கமான இராஜாவை பெற்றெடுத்த தந்தையானார். அதிர்ஷ்டவசமாக தன்னுடைய தவறினால், யூதாவுக்கு ஏற்படும் பிரச்சனையைக் காணாதபடிக்கு எசேக்கியா மரித்துப் போனார்.

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு பின் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் எசேக்கியா ஜெபத்தில் செய்த தவறிலிருந்து பாடங்களைக் கற்றுக் கொள்கிறோம். நாம் ஜெபிக்கக்கூடிய காரியங்கள் என்னதென்று மிகக் கவனமாக அறிந்து கொள்ள வேண்டும். சோதனையின் மத்தியில் நாம் அகப்படும் பொழுது, நம்முடைய சூழ்நிலைகளை ஏற்றுக் கொண்டவர்களாக உதவிக்காகவும், ஆறுதலுக்காகவும், வழிநடத்துதலுக்காகவும் நாம் ஜெபிக்கிறோம். நம்முடைய சோதனைகளில் நம்மை தாழ்த்தி அநேக பாடங்களைக் கற்றுக் கொள்வதற்கு உதவியாக இருக்கிறது என்பதை அறிந்திருக்கிறோம். ஆகையால் நம்முடைய சோதனைகளுக்காக நாம் நன்றியுள்ளவர்களாக இருக்க வேண்டும். உண்மையில் நம்முடைய கசப்பான அனுபவங்கள் நம்முடைய நன்மைக்காகவே அனுமதிக்கப்படுகிறது. (ஏசா. 38:17-ஐ ஒப்பிட்டு பார்க்கவும்),

**இஸ்ரயேலின் மீட்புக்காக எசேக்கியாவின் ஜெபம் (2இரா.19:14-37)**

அசீரிய சேனைகள் எருசலேமை நெருங்கிய போது வழக்கத்திற்கு மாறான யுக்திகளை பயன்படுத்தியது. அவர்கள் நேரடியாக போர் செய்யாமல், யூதா தங்களை சரணடைவதற்கு ஏதுவாக பயமுறுத்திக் கொண்டிருந்தார்கள். குறிப்பிட்ட நேரத்தில் சனகெரிப் இராஜாவின் சேனைகளில் இருக்கும் ரப்சாக்கே என்ற பிரதானியினிடத்திலிருந்து இராஜாவாகிய எசேக்கியா ஒரு நிருபத்தைப் பெற்றார். அந்த நிருபத்தில் எசேக்கியாவை மிகவும் அவமதித்ததோடில்லாமல், தேவனைக் குறித்தும் தூஷணமான காரியங்கள் எழுதப்பட்டிருந்தது.

இராஜாவாக எசேக்கியா அந்த நிருபத்தை வாசித்தபோது திகைத்துப்போனார். "இதோ, அசீரியா ராஜாக்கள் சகல தேசங்களையும் சங்கரித்த செய்தியை நீ கேட்டிருக்கிறாயே, நீ தப்புவாயோ?" (2 இரா. 19:11) எல்லாவற்றிற்கும் மேலாக இந்த பயமுறுத்தல் சத்தியத்தின் அடிப்படையில் காணப்பட்டது. என்ன செய்ய வேண்டுமோ, அதை துல்லியமாக எசேக்கியா செய்தார்-ஜெபித்தார். அவர் அந்த நிருபத்தை எடுத்து, கர்த்தருக்கு முன்பாக விரித்து வைத்தார். (வசனம்-14) சில நேரங்களில், "தேவனே எனக்கு உதவி செய்யும்" என்று நாம் சொல்லுவோம். நம்முடைய ஆழமான உபத்திரவங்களையும், வேதனைகளையும் தேவனோடு பகிர்ந்து கொள்வதற்கு அவர்

விரும்புகிறார். இவைகள் என்ன என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். ஆயினும் அவரிடம் வந்து சகல விவரங்களையும் அவரோடு பகிர்ந்து கொள்வதை அவர் எதிர்பார்க்கிறார்-எல்லா காரியங்களிலும் அவரோடு நெருக்கமாய் இருப்பதற்கு எதிர்பார்க்கிறார். இயேசு முழு இரவிலும், தன்னுடைய காரியங்களை தேவனுக்கு முன்பாக வைத்தார் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். (லூக். 6:12-ம் வசனத்தை காண்க) நிச்சயமாக, "பிதாவே எனக்கு உதவி செய்யும்" என்று அவர் கேட்டிருப்பார். சகல காரியங்களையும் பிதா அறிந்திருந்தார். ஆயினும், எல்லா காரியங்களையும் விவரமாக தேவனுக்கு முன் வைப்பதற்கு இயேசு ஒரு முழு இரவை செலவழித்தார். எசேக்கியா மற்றும் இயேசு செய்ததைப்போல நாமும் செய்ய வேண்டாமா?

எசேக்கியா தன்னுடைய ஜெபத்தில் தன்னுடைய ஜனங்களின் விடுதலைக்காக விண்ணப்பித்தார். "இப்போதும் எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே தேவனாகிய கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படிக்கு, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் என்று விண்ணப்பம்பண்ணினான்." (2 இரா. 19:19) தன்னுடைய துன்மார்க்கமான தந்தை இராஜாவாகிய ஆகாசிடம் சீரழிந்த ஜனங்களை எசேக்கியா வெளியேற்றினார். அவர் விக்கிரகங்களை நொறுக்கி தேவனுடைய பிரமாணங்களைக் கைக்கொண்டார். "அவன் கர்த்தரை விட்டுப் பின்வாங்காமல் அவரைச் சார்ந்திருந்து, கர்த்தர் மோசேக்குக் கற்பித்த அவருடைய கற்பனைகளைக் கைக்கொண்டு நடந்தான்." (2 இரா. 18:4, 6; 2 நாளா. 30) எசேக்கியா தேவனையும் நேசித்தார். இஸ்ரயேலையும், யூதாவையும் நேசித்தார். ஜனங்கள் மீண்டுமாக தேவனிடத்தில் திரும்ப வேண்டும் என்று அவர் நன்கு அறிந்திருந்தார்.

எருசலேமில் தனித்துவிடப்பட்ட மீதியான யூத ஜனங்களின் விடுதலைக்காக எசேக்கியாவின் ஜெபம் மிக அவசிமா என்று ஒருவர் ஆச்சரியப்படலாம். எல்லாவற்றிற்கும் மேலாக தேவன் தம்முடைய ஜனங்களை அசீரியருடைய சேனைகளின் கீழ் முழுமையாக அனுமதித்திருக்க மாட்டாரே! எனினும், "உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக" (மத். 6:10) என்று கிறிஸ்தவர்களுக்கு குறிப்பாக இயேசு கற்றுக் கொடுத்தார். கிறிஸ்தவர்களாகிய நாம் தேவனுடைய இராஜ்யத்திற்காக ஜெபித்தாலும் சரி, ஜெபிக்காவிட்டாலும் சரி அது நிச்சயமாக வரும். ஆனாலும், தேவனுடைய பார்வையில் நன்மையான காரியங்களுக்காகவும் அவர் முன்னதாகவே வாக்குத்தத்தம் செய்த காரியங்களுக்காகவும் ஜெபிப்பது நலமாயிருக்கிறது. ஆகவே, அன்று ஜெபித்தது எசேக்கியாவுக்கு நன்மையான காரியமாக இருந்தது போல, இன்று நாம் ஜெபிப்பதும் நன்மையான காரியமாகும். நம்முடைய சொந்த சித்தங்களை விட்டுக் கொடுத்து தேவனோடு நெருங்கிய உறவு கொண்டு பலனடைவதற்கு உதவியாக இருக்கிறது. இதுவே ஜெபத்தின் வல்லமையாகும். எசேக்கியாவின் ஜெபத்தில் மற்றொரு ஆர்வமூட்டும் காரியம் காணப்படுகிறது. "இப்போதும் எங்கள் தேவனாகிய கர்த்தாவே, நீர் ஒருவரே தேவனாகிய கர்த்தர் என்று பூமியின் ராஜ்யங்கள் எல்லாம் அறியும்படிக்கு, எங்களை அவன் கைக்கு நீங்கலாக்கி இரட்சியும் என்று விண்ணப்பம்பண்ணினான்." (2 இரா. 19:19) இஸ்ரயேலின் உண்மையான தேவனே, ஜீவனுள்ள ஒரே தேவன் என்று, மீதி இருக்கக்கூடிய உலகத்தார் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே எசேக்கியாவின் பிரதான விருப்பமாய் இருப்பதை இங்கு காணலாம்.

அவருடைய வார்த்தைகளில் ஒரு வல்லமையைக் காணலாம். "எருசலேமின் சமாதானத்துக்காக ஜெபியுங்கள்" ஏனெனில், "உன்னை நேசிக்கிறவர்கள் சுகித்திருப்பார்களாக" (சங். 122:6) ஜெபத்தின் வல்லமை இராஜ்யத்தில் வெளிப்படும்போது, விசுவாச வீரர்களின் பதிவு செய்யப்பட்ட ஜெபங்களிலிருந்து நாம் இன்று கற்றுக் கொள்ளக்கூடிய அதே பாடங்களை இந்த மனுக்குலமும் கற்றுக் கொள்வார்கள். "நீர் ஒருவரே மெய்யான தேவன்" என்பதை இந்த முழு உலகமும் அறிந்து கொள்ளும்.

**மன்னிப்பைக் கோரி விண்ணப்பிக்கப்பட்ட தாவீதின் ஜெபம் (சங்.51)**

தேவனுடைய இருதயத்திற்கு நெருக்கமாக இருந்த இராஜாவாகிய தாவீது ஒரு காலத்தில் ஒரு கோர்வையான சம்பவங்களில் இரண்டு புதிய பாவங்களைச் செய்தார். (1 சாமு. 13:14; அப். 13:22) நாத்தானியேலினால் தாவீதுக்கு அவருடைய குற்றங்கள் வெளிப்படுத்தப்பட்டபோது, தாவீது மனம் வருந்தி ஜெபித்தார். (சங். 51) தேவனுக்கு முன்பாக

சகல காரியங்களையும் மறைக்காமல் அறிக்கையிட்டார்.

"தேவனே நான் தவறு செய்துவிட்டேன், என்னை மன்னியும்" என்றும் கூட தாவீது ஜெபித்திருக்கலாம். அதற்கு பதிலாக, அவர் தம்முடைய உள்ளத்திலிருந்து மன்னிப்புக்காக ஏங்கினதைக் காணலாம். மேலும், தேவனோடு கொண்டிருந்த உறவை அவர் இனி புதுப்பிக்க வேண்டும் என்பதையும் விரும்பினார். தாவீது மனம் திரும்ப வேண்டும் என்ற அவருடைய நோக்கமானது இந்த ஜெபத்தை மிக வலிமையாக மாற்றியது.

தாவீது சரியான குறிப்பை முதல் வசனத்தில் முன் வைக்கிறார். "தேவனே, உமது கிருபையின்படி எனக்கு இரங்கும், உமது மிகுந்த இரக்கங்களின்படி என் மீறுதல்கள் நீங்க என்னைச் சுத்திகரியும்." (சங். 51:1). "என் அக்கிரமம் நீங்க என்னை முற்றிலும் கழுவி, என் பாவமற என்னைச் சுத்திகரியும். என் மீறுதல்களை நான் அறிந்திருக்கிறேன்; என் பாவம் எப்பொழுதும் எனக்கு முன்பாக நிற்கிறது" (சங். 51:2, 3) என்று கூறுகிறார். தம்முடைய பாவங்கள் எவ்வளவு அழுக்கானது என்பதை தாவீது உணர்ந்து, தன்னை சுத்திகரிப்பதற்கு தேவனிடம் உதவியை நாடினார். முதல் காரியமாக அவர் தம்முடைய எல்லா குற்றங்களையும் ஒப்புக் கொண்டார். நாமும் பழைய காரியங்களிலிருந்து புதிய மாற்றங்களைப் பெறுவதற்கு நம்முடைய தவறுகளை முதலில் உணர வேண்டும். "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவா. 1:9) வசனத்திலும் காணலாம்.

"நீர் என்னை ஈசோப்பினால் சுத்திகரியும், அப்பொழுது நான் சுத்தமாவேன்; என்னைக் கழுவியருளும், அப்பொழுது நான் உறைந்த மழையிலும் வெண்மையாவேன்" (சங். 51:7) என்று தாவீது கூறுகிறார். "மரித்த சரீரம், ஒரு மனுஷனுடைய எலும்பு அல்லது கல்லறைக்குச் சென்ற ஒரு மனுஷனை சுத்திகரிப்பது போன்ற அசுத்தமான மனுஷரை சுத்திகரிப்பதற்கு பயன்படுத்தக்கூடிய ஈசோப்பைக் குறித்து தாவீது பேசுகிறார். (எண். 19:16-19) இப்படிப்பட்ட தன்னுடைய அசுத்தமான பாவங்களிலிருந்து தன்னை சுத்திகரிக்கும்படிக்கு தாவீது பரிசுத்தமுள்ள தேவனிடத்தில் விண்ணப்பித்தார். தாவீது தன்னை குறித்து எவ்வளவு ஆழமாக உணர்ந்தார் என்பதையும், அவர் தேவனோடு கொண்டிருந்த ஐக்கியத்தைப புதுப்பிப்பதற்கு எவ்வளவு வாஞ்சையாக இருந்தார் என்றும் நமக்கு தெளிவாகக் காட்டப்படுகிறது.

யாத். 12:22, 23 வசனங்களில் இந்த ஈசோப்பைக் குறித்து காணலாம். பஸ்கா ஆட்டின் இரத்தம், வாசலின் நிலைக்கால்களில் இந்த ஈசோப்பைக் கொண்டு தெளிக்கப்பட்டது.

பிதாவாகிய தேவன் இஸ்ரயேலர்களை எகிப்தைவிட்டு அழைத்து வந்தபோது, அவர்களின் முதற்பேறானவர்களைப் பாதுகாத்ததினிமித்தம், தேவன் கொண்டிருந்த அந்த நெருக்கமான உறவை தாவீது ஒருபோதும் இழப்பதற்கு துணியவில்லை. அதற்காக, "தேவனே, சுத்த இருதயத்தை என்னிலே சிருஷ்டியும், நிலைவரமான ஆவியை என் உள்ளத்திலே புதுப்பியும்" (சங். 51:10) என்று தேவனை நோக்கி தாவீது மன்றாடினார். மேலும், அவர் தன்னைத்தான் மாற்றிக் கொள்வதற்கு இயலாதவர் என்று அறிக்கையிட்டார், "நான் நிச்சயமாக மாறுவேன், என்று நான் உறுதியளிக்கிறேன்" என்று அவர் ஒருபோதும் கூறவில்லை. தேவனுடைய கிருபையை தொடர்ந்து பெற்றுக் கொள்வதற்கு பரிசுத்தமான இருதயத்தை தனக்குள் சிருஷ்டிக்கும்படி தேவனிடத்தில் வேண்டிக் கொண்டார். தாவீது தண்டிக்கப்பட்டபோதிலும், அவர் தேவனிடத்திலிருந்து கிருபை பெற்றதாக தாவீதின் எழுத்துக்களில் காணலாம்,

**சாரம்**

ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன் வாழந்த தேவனுடைய இந்த இரண்டு மனுஷருடைய ஜெபங்களின் வல்லமையானது, பல நூற்றாண்டுகளுக்குப் பின்னும் இன்று காணப்படும் கிறிஸ்தவர்களின் வளர்ச்சிக்கு ஏதுவான பாடங்களை தருகிறது. தங்களுடைய பாவங்களை அறிக்கையிட்டு, தங்களைத் தாழ்த்தி தேவனிடத்தில் கிருபைக்காக விண்ணப்பித்து, தேவனுடைய இஸ்ரயேலர்களுக்கான ஆசீர்வாதங்களுக்காக ஜெபித்து, தொடர்ந்து தேவனோடு நல்லுறவை கொள்வதற்காக ஏங்கி தேவனை துதித்து மகிமைப்படுத்தினதினால், எசேக்கியா மற்றும் தாவீதின் ஜெபங்கள் முழு வல்லமை பெற்றது. இப்படிப்பட்ட நோக்கத்தை நாமும் பெற்றிருந்தால், நம்முடைய ஜெபங்களும் அதிகமான

மாதிரி ஜெபம்

# எங்களுக்கு ஜெபிக்க கற்றுத்தாரும்



"அவர் ஒரு இடத்தில் ஜெபம்பண்ணி முடித்தபின்பு, அவருடைய சீஷரில் ஒருவன் அவரை நோக்கி: ஆண்டவரே, யோவான் தன் சீஷருக்கு ஜெபம்பண்ணப் போதித்ததுபோல, நீரும் எங்களுக்குப் போதிக்கவேண்டும் என்றான்." (லூக். 11:1)

**Mark Grillo**

யோவான் சுவிசேஷத்தின் 7-ம் அதிகாரத்தில் பதிவுகள் காணும்படி இயேசுவுக்கு எதிராக சதி ஆலோசனை செய்த பரிசேயர்கள் அவரை இழுத்துவரும்படி ஆள் அனுப்பினார்கள். அவர்கள் வெறுமையாய் திரும்பிவந்தபோது, "இவர்கள் அவர்களை நோக்கி: நீங்கள் அவனை ஏன் கொண்டுவரவில்லை" என்று கேட்டார்கள். (யோவா. 7:45) "சேவகர் பிரதியுத்தரமாக: அந்த மனுஷன் பேசுகிறதுபோல ஒருவனும் ஒருக்காலும் பேசினதில்லை என்றார்கள்." (யோவா. 7:46)

மனுஷர் இதுவரையில் காணாத பல அற்புதமான காரியங்களை இயேசு செய்திருந்தாலும், அழைக்கப்பெறாத சேவகர்கள் அக்காலத்தில் வாழ்ந்த ஆவிக்குரிய தலைவர்களுக்கும் இயேசுவின் குணங்கள் மற்றும் அவருடைய திறமைகளுக்கும் உள்ள வலுமையுள்ள வேறுபாட்டைக் குறித்து உண்மையான சாட்சியை தைரியமாக அறிவித்தார்கள்.

இயேசு முழு விழிப்புணர்வோடும் நம்பிக்கையோடும் இந்த உலக போக்குக்கு எதிராக தம்முடைய வாழ்க்கையை பயணித்தார். தேவனையும், தேவனுடைய திட்டங்களையும் அவரோடுகூட இந்த உலகத்தின் சிருஷ்டிப்புக்காக செய்த உதவிகளை புரிந்து கொண்டதினால் பெற்ற அதிகாரத்தில் பேசினார். அனைவரும் பொறாமை கொள்ளக்கூடிய அளவுக்கு அவர் பரலோகப்பிதாவிடம் பெற்ற ஐக்கியத்தினால் முழு ஆறுதலையும் நம்பிக்கையையும் பெற்றிருந்தார்.

ஆகவே, "ஆண்டவரே எங்களுக்கு ஜெபிக்க கற்றுத்தாரும்" என்று இயேசுவின் சீஷர்கள் அவரிடம் வேண்டிக்கொண்டார்கள். இயேசு, தம்முடைய சிருஷ்டிகரோடு பெற்றிருந்த உண்மையான ஐக்கியத்தை தாங்களும் பெற வேண்டும் என்று சீஷர்கள் விரும்பினார்கள். இயேசு ஜெபித்த பொழுது, அவருடைய சிந்தனைகளும் உணர்வுகளும் சுற்றியிருப்பவர்கள் புரிந்து கொள்ளும் அளவிற்கு பிதாவின் எண்ணங்களோடு பிண்ணி பிணைந்திருப்பதை அவர்கள் நன்கு உணர்ந்தார்கள். அவர் எப்பொழுதும் ஜெபித்து முடித்தபின் முழுமையான புத்துணர்வைப் பெற்ற திருப்தியான மனநிலையோடு மிக சந்தோஷமாக வந்தார். இப்படிப்பட்ட பிதாவின் ஐக்கியத்தைப் பெற வேண்டும் என்று சீஷர்கள் விரும்பினார்கள்.

ஆகவே, யேகோவா தேவனோடு முழுமையான ஐக்கியம் பெறுவதற்கான சூத்திரத்தை இயேசு அவர்களோடு பகிர்ந்து கொண்டார், "அதற்கு அவர்: நீங்கள் ஜெபம்பண்ணும்போது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக; உம்முடைய ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக; எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை அன்றன்றும் எங்களுக்குத் தாரும்; எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்; நாங்களும் எங்களிடத்தில் கடன்பட்ட எவனுக்கும் மன்னிக்கிறோமே; எங்களைச் சோதனைக்குட்படப்பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும், என்று சொல்லுங்கள் என்றார்." (லூக். 11:2-4)

ஒரு தந்தை குமாரனுக்கு எழுதின கடிதத்தைப் பற்றி ஒரு கதை உண்டு. "எனக்கு அதிகமான நேரம் கிடைத்திருந்தால், நான் இன்னும் குறுகிய நிருபத்தை எழுதியிருப்பேன்." சுருக்கமாய் எழுதுவது ஒரு சிறந்த திறமை என்று இவ்வாக்கியம் கருதுகிறது. மிகச் சுருக்கமாகவும், எளிமையாகவும், நேரடியாகவும் செய்திகளை தேவனிடத்தில் முன் வைப்பதற்கு நம்முடைய ஆண்டவர் அருமையான ஒரு மாதிரி ஜெபத்தை கற்றுக் கொடுத்தார்.

இந்த மாதிரி ஜெபம் சுருக்கமாக இருப்பதினால் அதில் குறைவுகள் உண்டு என்ற தவறான சிந்தனைக்கு நம்மை அனுமதிக்கக்கூடாது. ஐந்து வரிகள் மற்றும் வார்த்தைகளைக் கொண்ட இந்த மாதிரி ஜெபம் மிக முழுமையாகவும், சுருக்கமாகவும் இருக்கிறது. பலனுள்ள ஒரு ஜெபத்திற்குத் தேவையான சகல மூலக்கூறுகளும் இதில் உள்ளடக்கப்பட்டிருக்கிறது.

**"எங்கள் பிதாவே"**

"பரலோகத்திலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக" என்று இந்த ஜெபம் துவங்குகிறது. இவ்வளவு குறுகிய வார்த்தைகளுக்குள் எவ்வளவு பெரிதான காரியங்கள் கூறப்பட்டுள்ளது!

"எங்கள் பிதாவே" என்ற வார்த்தை, நாம் அந்த குடும்பத்தின் அங்கத்தினர்கள் என்று வலியுறுத்துகிறது. இயேசு, என்னுடைய பிதா என்று கூறாமல், நம்முடைய பிதா என்று கூறினார். ஆகவே, நாம் அவருடைய புத்திர சுவிகாரத்தைப் பெற்று, யேகோவா தேவனோடு ஒரு தனித்துவமான ஐக்கியத்தைப் பெற்றிருக்கிறோம் என்பதை நமக்கு நினைப்பூட்டுகிறது, நாம் அவருக்கு விசேஷித்தவர்கள். நாம் அவருடைய ஊழியக்காரருடைய வீடாய் இராமல், அவருடைய புத்திரர்களாய் இருக்கிறோம். பிள்ளைகள் தந்தையை அழைப்பது போல, நாம் அவரை பிதா என்று அழைத்து, எப்போதும் கிருபாசனத்தண்டைக்கு தைரியமாய்ச் செல்ல உரிமை பெற்றிருக்கிறோம்.

"அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனைபேர்களோ, அத்தனைபேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி, அவர்களுக்கு அதிகாரங் கொடுத்தார்." (யோவா. 1:12) "மேலும் நீங்கள் புத்திரராயிருக்கிறபடியினால், அப்பா, பிதாவே! என்று கூப்பிடத்தக்கதாகத் தேவன் தமது குமாரனுடைய ஆவியை உங்கள் இருதயங்களில் அனுப்பினார்." (கலா. 4:6) "ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங் கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்." (எபி. 4:16)

நாம் ஜெபிக்கும் பொழுது, நம்முடைய சகோதரர்களை நினைவுகூற வேண்டும். தேவனுடைய சிங்காசனத்திற்கு ஒரு ஊழியக்காரராக அல்ல, அவருடைய புத்திரராக தைரியமாக செல்ல வேண்டும்.

**"பரலோகத்தில் செய்யப்படுவதுபோல"**

பரலோகத்தில் செய்யப்படும் காரியங்களில் நம்முடைய பிதாவாகிய தேவனுடைய வல்லமையின் மகத்துவங்களைக் குறித்து, நாம் அறிந்திருக்கிறோம். மேலும், அவர் நம்மைவிட மிக உன்னதமானவர் என்பதையும் உணர்ந்திருக்கிறோம். அவருடைய நோக்கம் நம்முடையதைக் காட்டிலும் உயர்ந்தது. "பூமியைப்பார்க்கிலும் வானங்கள் எப்படி உயர்ந்திருக்கிறதோ, அப்படியே உங்கள் வழிகளைப்பார்க்கிலும் என் வழிகளும், உங்கள் நினைவுகளைப் பார்க்கிலும் என் நினைவுகளும் உயர்ந்திருக்கிறது." (ஏசா. 55:9)

நான் எபேசியர் 6-ம் அதிகாரம் வாசிக்கையில், பள்ளிக்குச் சென்ற சிறுவயதில் உயரமான இடத்தில் அமர்ந்து கண்ட கால்பந்தாட்டம் என் நினைவுக்கு வரும். ஏனெனில், என்னுடைய மாமா, விளையாட்டு வீரர்கள் ஆடும் ஆட்டங்களை அங்கிருந்து கவனிப்பார். அவர் அங்கிருக்கும் பயிற்சி அளிப்பவர்களோடு தொடர்பு கொண்டு, அங்கு ஆடக்கூடியவர்கள் வெற்றி பெரும்படியாக ஆடுவதற்கு அநேக வழிமுறைகளை அறிவிப்பார். இக்காரியங்களை அறிந்து கொள்வதற்கு முன் இச்செயல்கள் எனக்கு விசித்திரமாய் தோன்றியது.

அதேபோல, நம்முடைய பரலோக தந்தையும், "வானத்துக்கும் பூமிக்கும் உள்ள வித்தியாசத்தைப்போல... நம்முடைய சிந்தைகளுக்கும் அவருடைய சிந்தைகளுக்கும் வித்தியாசம் காணப்படுகிறது." நம்முடைய சிந்திக்கும் திறனைக் காட்டிலும் ஆழமாகவும், தெளிவாகவும் தேவன் ஒரு காரியத்தைக் காணமுடியும். நாம் ஜெபத்தில் அவரோடுகூட தொடர்பு கொண்டு நம்மை வழிநடத்துவதற்கு முழுமையாக ஒப்புக் கொடுத்தால், நாம் வெற்றி பெறும்படி நம்மை

நிச்சயமாக வழிநடத்தக்கூடியவராக இருக்கிறார். நாம் போருக்கு ஆயத்தப்படும்போது, அப். பவுலின் ஆலோசனைகளை கட்டாயமாக நாம் கடைப்பிடிக்க வேண்டும்.

"ஆகையால், தீங்குநாளிலே அவைகளை நீங்கள் எதிர்க்கவும், சகலத்தையும் செய்துமுடித்தவர்களாய் நிற்கவும் திராணியுள்ளவர்களாகும்படிக்கு, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள். சத்தியம் என்னும் கச்சையை உங்கள் அரையில் கட்டினவர்களாயும், நீதியென்னும் மார்க்கவசத்தைத் தரித்தவர்களாயும், சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சையைக் கால்களிலே தொடுத்தவர்களாயும்; பொல்லாங்கன் எய்யும் அக்கினியாஸ்திரங் களையெல்லாம் அவித்துப்போடத்தக்கதாய், எல்லாவற்றிற்கும் மேலாக விசுவாசமென்னும் கேடகத்தைப் பிடித்துக்கொண்டவர்களாயும் நில்லுங்கள். இரட்சணியமென்னும் தலைச்சீராவை யும், தேவவசனமாகிய ஆவியின் பட்டயத்தையும் எடுத்துக்கொள்ளுங்கள்." (எபே. 6:13-17)

அதற்குபின், பரலோகத்திலிருக்கும் தேவனோடு தொடர்பு கொண்டு, நம்முடைய கிறிஸ்தவ நடைக்கு தேவைப்படும் மேன்மையான நோக்கங்களைப் பெற்றுக் கொள்ள வேண்டும். "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி, அதன்பொருட்டு மிகுந்த மனஉறுதியோடும் சகல பரிசுத்தவான்களுக்காகவும் பண்ணும் வேண்டுதலோடும் விழித்துக்கொண்டிருங்கள்." (எபே. 6:18)

நாம் ஜெபிக்கும் பொழுது, நாம் நினைவில் கொள்ள வேண்டியவைகள்:

* தேவன் பெரிய அளவில் காரியங்களைப் பார்க்கிறார்.

* அவருடைய ஆழ்ந்த கண்ணோக்கங் களையும். ஞானத்தையும் தேட வேண்டும்.

* சகல காரியங்களிலும், அவர் மேற்கொள்ளுகிறார் என்று நம்ப வேண்டும்.

**"உமது நாமம் பரிசுத்தப்படுவதாக!"**

தேவன் நமக்கு எவ்வளவு விசேஷித்தவர் என்று இங்கு நாம் குறிப்பிடுகிறோம். நாம் அவரிடத்தில் வைத்திருக்கும் பயபக்தியையும், கனத்தையும் மரியாதையையும் வெளிப்படுத்துகிறோம். நம்முடைய வழிகளைக் காட்டிலும் அவருடைய வழிகள் உயர்ந்தது என்று ஏற்றுக் கொண்டவர்களாக மற்ற எல்லா நாமங்களைக் காட்டிலும் அவர் பரிசுத்தமுள்ளவர் என்பதை நாம் உணர்கிறோம். "கர்த்தருடைய நாமத்திற்குரிய மகிமையை அவருக்குச் செலுத்துங்கள்; பரிசுத்த அலங்காரத்துடனே கர்த்தரைத் தொழுதுகொள்ளுங்கள்." (சங். 29:2)

சர்வ சிருஷ்டியையும் வடிவமைத்தவருக்கு முன் நிற்கக்கூடிய சிறப்புரிமையின் முக்கியத்துவத்தை நாம் நன்கு உணர்ந்திருப்பதே, ஜெபத்தின் மிக முக்கியமான பகுதியாகும். சிறிய அனுபவத்திலிருந்து, மிகப் பெரிய பால்வீதி மண்டலங்களை மிக நேர்த்தியாக சிருஷ்டித்த மகா உன்னதமான சிருஷ்டிகர் என்று தேவனை நாம் அறிக்கையிடுகிறோம்.

"நாம் தேவனைப்பற்றி சிந்திக்கும் பொழுது, நம்முடைய மனதில் நம்மை குறித்து என்னென்ன காரியங்கள் தோன்றுகிறது என்பது மிக முக்கியம். மனித வரலாற்றில் எந்த மனுஷனும் மதத்திற்கு மேலாக எழும்பினதில்லை. மேலும் மனிதனுடைய ஆவிக்குரிய வரலாற்றில் எந்த மதமும் தேவனைக் குறித்த அளவில் மிகச் சிறந்தவர்களாக செயலாற்றவில்லை" என்று A.W. Tozer எழுதுகிறார்.

கடுமையான ஒழுக்கமுடையவரும் நம்முடைய வெற்றிகளையும் தோல்விகளையும் துல்லியமாக கணக்கிட்டு, நாம் அதிகமாக தோல்வியடையும்போது. நம்மை புறக்கணிக்கக்கூடியவராக தேவன் இருக்கிறார் என்று எண்ணுகிறோமா அல்லது அன்பாகவும் ஆதரவாகவும் தம்முடைய பிள்ளைகள் வெற்றியடைய விரும்பி சகல உச்சிதமான நன்மைகளை செய்யக்கூடிய தேவனாக இருக்கிறார் என்று எண்ணுகிறோமா?

நாம் ஜெபிக்கும் பொழுது நினைவில் கொள்ள வேண்டியவைகள்:

* இன்று நம்முடைய பரலோக பிதாவிடம் என்ன பேச வேண்டும் என்பதை முதலில் நாம் சிந்தித்து, நாம் எவ்வாறு அவரிடத்தில் அணுக வேண்டும் என்று முன்னதாகவே யோசிக்க வேண்டும்.

* தேவன் பரிபூரணமாக பரிசுத்தர் என்று அறிந்திருக்க வேண்டும். தேவன் சர்வ வல்லமையுள்ளவர் என்பதை நன்கு உணர்ந்திருக்க வேண்டும்.

**"உம்முடைய இராஜியம் . . . பூமியிலேயும் செய்யப் படுவதாக"**

ஜெபத்தின் இந்த பகுதியானது, நமக்குள் இருக்கும் வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட இராஜ்யத்தைக் குறித்த விசுவாசத்தையும், அதின் மேல் நாம் கொண்டுள்ள வாஞ்சையையும் காட்டுகிறது. நம்முடைய சகோதரர் மேல் உள்ள பொதுவான ஆர்வத்தையும் நம்முடைய பிதாவின் ஒப்புரவாக்குதலின் வேலைகளில் நமக்கு இருக்கும் விருப்பங்களைக் காட்டுகிறது.

"முதலாவது தேவனுடைய ராஜ்யத்தையும் அவருடைய நீதியையும் தேடுங்கள், அப்பொழுது இவைகளெல்லாம் உங்களுக்குக் கூடக் கொடுக்கப்படும்." (மத் 6:33) இப்படியாக சொல்லப்பட்டிருந்தாலும், "என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின் படி ஆகக்கடவது" என்று ஜெபிக்கிறோம். இந்த பூமியில் அவருடைய சித்தம் செய்வதற்கு நம்மை நாம் அர்ப்பணித்திருக்கிறோம். நாம் நம்முடைய சொந்த விருப்பங்களையும் ------ விட்டுக் கொடுத்து சர்வசிருஷ்டியும் தேவனுடைய சித்தத்திற்கு இசைந்திருக்க வாஞ்சிக்கிறோம்.

நாம் ஜெபிக்கும் போது நினைவில் கொள்ள வேண்டியவைகள்: * இப்பொழுது நாம் தேவனுடைய இராஜ்யத்தின் ஸ்தானாபதிகளாக அவருடைய வழிநடத்துதலை தேடுகிறோம். * இராஜ்யத்திற்கு முன்னுரிமை கொடுக்கிறோம்.

**"எங்களுடைய அன்றாட உணவை எங்களுக்குத் தாரும்"**

மனுஷன் உயிர் வாழ்வதற்குத் தேவையான அடிப்படை தேவைகளை தேவன் கொடுத்திருக்கிறார். அதேபோல, கிறிஸ்தவர்களுக்கும் இருக்கக்கூடிய புது சிருஷ்டிக்கும் அடிப்படை தேவைகள் உண்டாகவே, "எங்கள் அனுதின உணவை எங்களுக்குத் தாரும்" என்ற நம்முடைய ஜெபம். இரண்டு கோணத்தில் ஏறெடுக்கப்படும் விண்ணப்ப மாய் இருக்கிறது. நம்முடைய சரீரத்திற்கு உண்டான தற்காலிகமான உணவுக்காகவும், புது சிருஷ்டிக்குத் தேவையான ஆவிக்குரிய உணவுக்காகவும் நாம் தேவனையே சார்ந்திருக்கிறோம் என்ற இந்த எளிமையான சொற்றொடர் காட்டுகிறது. தேவைக்கு அதிகமான காரியங்கள் கேட்பது இந்த ஜெபத்தின் பொருளல்ல. ஏனெனில், நாம் நாளைக்கான காரியத்தைக்கூட கேட்பதில்லை. ஆகவே ஒவ்வொரு நாளிலும் தேவன் நமக்கு கையளிக்கக்கூடிய சகல நன்மைகளினால் நாம் முழுமையாக திருப்தியடைந்து அவைகளுக்கு நன்றியுள்ளவர்களாக இருப்பதற்கு இவ்வார்த்தைகள் நமக்கு நினைவூட்டுகிறது. தேவன் நமக்கு கையளிக்கும் காரியங்களைக் குறித்து எப்பொழுதும் முறுமுறுக்கக்கூடாது. மாறாக தேவன் நமக்கு அனுமதிக்கும் அனுபவங்களின் நம்முடைய சிறந்த வளர்ச்சியை வடிவமைத்திருக்கிறார் என்பதை நினைவில் கொள்ள வேண்டும். ஆகவே, "நமக்குள் இருக்கும் விசுவாசம், என்னவந்தாலும் அவர் மேல் உறுதியான நம்பிக்கை வைக்கும்."

"அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த் தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம்." (ரோம. 8:28) தேவன் நமக்கு நித்தமும் கொடுக்கக்கூடிய போஜனங்களையும், கிருபைகளையும் வாக்களித்திருக்கிறார். இவைகளுக்கு அப்பாற்பட்டு பெறக்கூடிய அந்த காரியமும் நம்முடைய எதிர்பார்ப்புகளுக்கு மேலானது.

நம்முடைய ஜெப வாழ்க்கையைப் பொருத்தவரை அது பிரச்சனைகளை மையப்படுத்தி. வாக்குத்தத்தங்களை மையப்படுத்தியிருக்க வேண்டும் என்று “chipingram” ஊக்குவிக்கிறார். அவர் தொடர்ந்து பேசுகையில் நாம் விரும்பக்கூடிய காரியங்களை நடப்பிப்பதற்கு தேவனை அழைப்பதற்கு முயற்சிக்கக்கூடாது என்று கூறுகிறார்.

நமக்கு இஃன்னின்ன காரியங்கள் தேவை என்று தேவன் உணர்ந்திருக்கிறார். சில காரியங்கள் நம்முடைய இருதயங்களை அழுத்துவதினால் அவைகளை அவருடைய கவனத்திற்கு முன் வைக்க விரும்பினாலும், அவர் விரும்பக்கூடிய இலக்குகளையும் சித்தங்களையுமே நாம் நிறைவேற்ற முயற்சிக்க வேண்டும்.

நம்முடைய ஜெபத்தில் நாம் நினைவில் கொள்ள வேண்டியவைகள்:

* நன்றி உள்ளவர்களாய் இருக்க வேண்டும்.

* எல்லா பிரச்சனைகளையும் அவருக்கு முன் வைக்க வேண்டும். நம்முடைய ஜெபங்கள், பிரச்சனைகளை மையப்படுத்தாமல், வாக்குத்தத்தங்களை மையப்படுத்த வேண்டும்.

* அவருடைய திட்டத்தைக் குறித்த கேள்விகளை அவரோடு பகிர்ந்து அதற்கான பதில்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

**"எங்களுடைய கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறது போல, எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும்"**

"அடுத்து நாம் தேவனுடைய ஒரு நீதியின் கோட்பாட்டை அறிந்து கொள்கிறோம், நமக்கு எதிராக குற்றம் புரியக்கூடிய அயாரணரிடத்தில் நாம் வெளிப்படுத்தும் தெய்வீக இரக்கத்தின் அளவின்படியே கிறிஸ்துவின் வழியாக தேவனுடைய இரக்கத்தைப் பெற முடியும் என்பதை நாம் உணர வேண்டும். தேவனோடு பேரம் பேசுவதற்கு ஒப்பிடலாம். மற்றவர்களிடத்தில் நாம் காண்பிக்கக்கூடிய இரக்கத்தை நாம் தேவனிடத்தில் உரிமையோடு பெற்றுக் கொள்ளலாம். எவ்வளவு அருமையான சிந்தனை? இந்த கோட்பாடு முழுமையாக புரிந்து கொள்ளப்பட்டால், வார்த்தைகளினாலும், கிரியைகளினாலும், சிந்தனைகளினாலும், சகல மனுஷரிடத்திலும் விசேஷமாக தேவனுடைய ஜனங்கள் ஒருவரோடொருவர் எவ்வளவு அன்பாகவும், கனிவாகவும் நடந்து கொள்வார்கள்." (R2005)

தேவனிடத்தில் மன்னிப்பைக் கேட்கும் பொழுது, நாம் பாவத்திற்கு எதிரானவர்கள் என்று உறுதிபடுகிறது. நித்தமும் பரிபூரண நிலையிலிருந்து நாம் அடிக்கடி விழுந்து கொண்டிருப்பதை நாம் புரிந்து கொண்டிருக்கிறோம் என்று தேவனிடத்தில் சொல்லப்படுகிறது. மேலும் கிறிஸ்துவின் நீதியின் சால்வை நம்மை அவசியமாக மூட வேண்டும் என்றும் காட்டுகிறது. நாம் உண்மையாக ஜெபிக்கும் போது, நம்முடைய இருதயங்களில் உள்ள ஆழமான சிந்தனைகளை கவனிக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். நாம் மற்றவர்களுக்கு மன்னிப்பளித்து தேவனிடத்தில் நம்முடைய பாவங்களுக்காக மன்னிப்பைக் கேட்கும் பொழுது, நாம் நம்முடைய பரலோக தந்தையைப் போல் மாறுவதற்கு முயற்சிப்பதை வெளிப்படுத்துகிறோம்.

பூமிக்குரிய பிள்ளைகள் தங்களுடைய பெற்றோர்களைப் பார்த்து நடக்க விரும்புவதுபோல, ஆவிக்குரிய பிள்ளைகளாகிய நாம் நம்முடைய பரலோக பிதாவைப்போல் இருக்க விரும்ப அவசியமாய் இருக்கிறது. சர்வவல்லமையான தேவன் கொடுக்கக்கூடிய மன்னிப்பின் அளவை நாம் பார்க்கும்போது, அந்த அளவை எட்டிப்பிடிப்பதற்கு நம்முடைய வாழ்க்கையில் அதிகமான முயற்சிகள் எடுக்க வேண்டியவர்களாய் இருக்கிறோம். "நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல்வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்." (ரோ. 5:8) "ஆதலால், நீங்கள் பிரியமான பிள்ளைகளைப்போலத் தேவனைப் பின்பற்றுகிறவர்களாகி," (எபே. 5:1)

நாம் ஜெபிக்கும் பொழுது நினைவில் கொள்ள வேண்டியவைகள்: * நம்முடைய பாவங்களை முழுமையாக உணர வேண்டும். தேவன் கொடுக்கும் மன்னிப்பில் இளைப்பாற வேண்டும். * நமக்கெதிராக குற்றம் புரிந்தவர்களை மன்னிப்பதற்குத் தேவையான பலத்தை தேட வேண்டும்.

**"எங்களை சோதனைக்குட்படுத்தாதேயும், எங்களை தீமையிலிருந்து இரட்சித்தருளும்."**

"எங்களை சோதனையில் கைவிடாதிரும்" என்று Emphatic Diaglott கூறுகிறது. இந்த மனித நிலையில் ஆவிக்குரிய வளர்ச்சியைப் பெறுவதற்கு சோதனைகளே நம்மை நடத்துகிறது. ஆனால் தேவன் நம்மை சோதிப்பதில்லை. மனுஷன்

தன்னுடைய சுயபலவீனத்தினாலும், பாவத்தினாலும் சோதிக்கப்படுகிறான். இப்படிப்பட்ட மாம்சத்திற்குரிய ஈர்ப்புகளுக்கு எதிராக போர் செய்வதே நம்முடைய வேலையாய் இருக்கிறது. முடிவுபரியந்தம் தேவைப்படும்போதெல்லாம் போதுமான கிருபையைக் கொடுப்பேன் என்று பிதா வாக்களித்திருக்கிறார்.

"மனுஷருக்கு நேரிடுகிற சோதனையேயல்லாமல் வேறே சோதனை உங்களுக்கு நேரிடவில்லை. தேவன் உண்மையுள்ளவராயிருக்கிறார்; உங்கள் திராணிக்கு மேலாக நீங்கள் சோதிக்கப்படுகிறதற்கு அவர் இடங்கொடாமல், சோதனையைத் தாங்கத்தக்கதாக, சோதனையோடுகூட அதற்குத் தப்பிக்கொள்ளும்படியான போக்கையும் உண்டாக்குவார்." (1 கொரி 10:13)

மாதிரி ஜெபத்தில் இந்த முடிவானது, - அவர் வாக்குத்தத்தம் பண்ணின இராஜ்யத்தின் மேல் மட்டும் அல்ல, அவருடைய அன்பான வழிநடத்துதலின் மேலும் நாம் விசுவாசம் வைத்திருக்கிறோம் என்பதை காட்டுகிறது. இந்நேரத்தில் இந்த உலகத்தை சாத்தான் ஆட்சி செய்து கொண்டிருக்கிறான் என்பதை புரிந்து கொண்டவர்களாய் தேவைப்படும்போது அவருடைய வழிநடத்துதலை நாம் அறிந்து கொள்கிறோம். தீமையினின்று இரட்சித்துக் கொள்வதற்கான ஜெபத்தின் மூலம் நாம் விழித்திருந்து கவனமாய் போர் செய்ய அறிந்திருக்கிறோம்.

"ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு." (எபே. 6:12) "நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமானசித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." (ரோ. 12:2) நம்முடைய கஷ்டமான சோதனைகளிலிருந்து ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் பரலோகத்திலுள்ள நம்முடைய தேவனுக்கு சுகந்த வாசனையாக இருக்கிறது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும்.

நாம் ஜெபிக்கும் பொழுது நினைவில் கொள்ள வேண்டியவைகள்: * "உன் சுயபுத்தியின்மேல் சாயாமல், உன் முழு இருதயத்தோடும் கர்த்தரில் நம்பிக்கையாயிருந்து..."

**அவரை அறிந்து கொள்ளுதல்**

"உன் வழிகளிலெல்லாம் அவரை நினைத்துக்கொள்; அப்பொழுது அவர் உன் பாதைகளைச் செவ்வைப்படுத்துவார்." (நீதி. 3:6) புத்தியுள்ள, புத்தியில்லாத இரண்டு கன்னிகைகளைக் குறித்து நாம் பார்க்கும்போது, எண்ணெய் இல்லாமல் விளக்கு எரியாததுபோலவும், மின்சாரம் இல்லாமல் விளக்கு எரியாததுபோலவும், தேவனுடைய பரிசுத்த ஆவியின் வல்லமையின் தொடர்பில்லாமல் கிறிஸ்துவுக்குள் புது சிருஷ்டி பிரகாசிப்பிக்காது. நம்முடைய பூமிக்குரிய வாழ்க்கை வழியாக பயணிப்பதற்கு அவருடைய பரிசுத்த ஆவி நமக்கு மிக அவசியமாய் இருக்கிறது. இதற்கு ஜெபம் ஒரே வழியாகும்.

இறுதியாக சகோதரர்களே, பாவமான மாம்சத்தோடே தேவன் எவ்விதத் தொடர்பும் வைத்துக் கொள்ள முடியாது என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். இயேசு கிறிஸ்துவின் ஈடுபலியின் மேல் நாம் வைத்திருக்கும் விசுவாசத்தினாலே ஜெபத்தின் வழியாக பிதாவாகிய யேகோவா தேவனுக்கு முன் நாம் நிற்கமுடியாது.

இவ்வார்த்தைகளை வழக்கமாக ஒப்புவித்த தினிமித்தம், நம்முடைய ஜெபம் வல்லமையுள்ளதாக இருக்காது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். இது ஜெபத்திற்கான ஒரு மாதிரி அல்லது ஒரு சூத்திரம் என்று எடுத்துக் கொள்ளலாம். இதே வார்த்தைகளைக் கொண்டு நாம் ஜெபிக்க வேண்டும் என்று அல்ல, மாறாக இவைகளை கருத்தில் கொண்டு நம்முடைய ஜெபங்களை ஏறெடுக்க வேண்டும். இயேசு கற்பித்த இந்த ஜெபத்தை மாதிரியாக வைத்து நம்முடைய சொந்த வாழ்க்கையில் தேவனை துதித்து நம்முடைய

அனுபவங்களையும், தேவைகளையும், விண்ணப்பங் களையும் முன் வைக்கலாம்.

லூக்கா சுவிசேஷத்தில் அதற்கு பின் வரக்கூடிய அதிகாரங்களில், இயேசு ஒரு உவமையில் (பரிசேயன் ஆயக்காரன்), ஜெபத்தை பற்றி மேலும் சில காரியங்களைக் கற்றுக் கொடுத்தார். இந்த இருவர் ஏறெடுத்த ஜெபத்தின் வேறுபாடுகளைக் கண்டு, எப்படி ஜெபிப்பது? எப்படி ஜெபிக்கக்கூடாது? என்பதை கற்றுக் கொள்கிறோம். அந்த உவமையில் ஜெபித்த பரிசேயன் மற்றவர்களின் பார்வைக்கு தன்னுடைய நீதியுள்ள கிரியைகளின் மேல் நம்பிக்கை கொண்டவனாக இறுமாப்போடு தன்னை மிக உயர்வாக எண்ணி ஜெபித்தான். இதற்கு மாறாக அந்த ஆயக்காரன் தேவனை அண்ணாந்து பார்க்கவும் துணியாமல், தன்னை மிகவும் தாழ்த்தி, தன்னுடைய அபாத்திரமான நிலையை வெளிப்படுத்தி, தேவனுடைய இரக்கத்திற்காக மன்றாடினான். நாமும் கூட தேவனிடத்தில் நெருங்குகையில், அந்த ஆயக்காரனைப்போல நம்மை முழுமையாக தாழ்த்துவோம்.

நம்முடைய ஜெபத்தில் நாம் கற்றுக் கொள்ள வேண்டிய நோக்கங்களில் நாம் தக்க வைக்க வேண்டிய வரம்புகளைக் குறித்து அப். யாக்கோபு விவரிக்கிறார். நம்முடைய சகல விருப்பங்களையும், விண்ணப்பங்களையும் தேவனுடைய சித்தத்திற்கு முழுமையாக கையளிக்க வேண்டும். "நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந்தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப்போலிருக்கிறதே. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்லவேண்டும்" (யாக். 4:14, 15) என்று அவர் கூறுகிறார்.

சகோதரரே, நம்முடைய ஜெப வாழ்க்கையையும், ஜெபங்களையும் குறித்து சிந்திப்போம். நம்முடைய ஜெபங்களில் வீண் வார்த்தைகளை பயன்படுத்தாதபடி எச்சரிக்கையாயிருக்க வேண்டும். ஜெபிக்கக்கூடிய நம்முடைய நேரங்களுக்கு முன்னதாகவே அதற்கான முன் திட்டங்களை செய்யக்கடவோம். நம்முடைய ஜெப வாழ்க்கை உறுதியானதும், முக்கியமானதும், வல்லமையுள்ளதாகவும் இருக்கக்கடவது. "நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும் பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக். 5:16)

இயேசுவின் மாதிரி

# ஆண்டவரின் ஜெப வாழ்க்கை



"அவரோ வனாந்தரத்தில் தனித்துப்போய், ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார்." (லூக். 5:16)

Robert Brand

ஜெபத்திற்காக முழு வாழ்க்கையை அர்ப்பணித்த சிறந்த மாதிரியை தேவனுடைய குமாரனாக இருக்கும் இயேசு நமக்கு கையளிக்கிறார். பரலோக தந்தைக்குக் கீழ்ப்படிந்து தங்களையே அர்ப்பணிப்பதற்கு ஆண்டவரின் ஜனங்கள் பரிசுத்த ஆவியைப் பெற்றிருக்கிறார்கள். இயேசு இந்த பரிசுத்த ஆவியை "அளவில்லாமல்" பெற்றிருந்தார். (யோவா. 3:34) இப்படியாக, நாம் எப்பொழுது ஜெபிக்க வேண்டும் என்றும், எதற்காக ஜெபிக்க வேண்டும் என்பதற்கு அவருடைய வாழ்க்கை சிறந்த முன்மாதிரியாக வைக்கப்படுகிறது.

புதிய ஏற்பாட்டில் ஆண்டவரின் ஜெபங்கள் பதிவு செய்யப்பட்டிருந்தாலும், அவரின் அனைத்து ஜெபங்களும் காணப்படுகிறதில்லை. இயேசுவின் வாழ்க்கையில் ஜெபம் ஒரு நிலையான பகுதியாக காணப்பட்டது. நம்மை நாம் சோதித்து அறிவதற்கும், கிறிஸ்துவுக்குள்ளாக வளர்ச்சியடைவதற்கும் பதிவு செய்யப்பட்ட இயேசுவின் ஜெபங்கள் நமக்கு மிகப் பிரயோஜனமாய் இருக்கிறது.

**இயேசு தனிமையில் ஜெபித்தார்**

இயேசு தனிமையிலும், பொது இடங்களிலும், மற்றவர்களோடும், மற்றவர்களுக்காகவும் சில முக்கியமான முடிவுகளை எடுக்கும் முன்னும் தொடர்ச்சியாகவும், இடைவிடாமலும் ஜெபித்தார் என்று சுவிசேஷங்கள் குறிப்பிடுகிறது. அவருடைய ஜெபங்களுக்கு எப்பொழுதும் அவர் பதில்களை எதிர்பார்க்கவில்லை. ஏனெனில், அவருடைய அனுபவங்களில் தேவனுடைய சித்தம் நிறைவேறுவதை அவர் விரும்பினார். இதில் அவருடைய கடைசி நாட்களும், அவருடைய கடைசி மணி நேரங்களும் அடங்கும்.

இயேசு ஜெபிப்பதற்காக அனைவரையும் விட்டு தனியே சென்றார். "அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம்பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார்." (மத். 14:23) மாற்கும் இதே கருத்தை நமக்கு முன் வைக்கிறார். "அவர் அதிகாலையில், இருட்டோடே எழுந்து புறப்பட்டு, வனாந்தரமான ஓரிடத்திற்குப்போய், அங்கே ஜெபம்பண்ணினார்." (மாற். 1:35) இயேசு தனிமையான இடத்தை நோக்கி சென்றதாக மத்தேயு கூறுகின்றார். நித்திரையை விட்டு அதிகாலையில் ஜெபிப்பதற்காக தனியே சென்றதாக மாற்கு கூறுகின்றார். இவ்விரண்டு காரியங்களையும் செய்வதற்கு விசேஷித்த முயற்சி தேவை. ஆகவே தனிமையில் ஜெபிப்பதற்கான முக்கிய காரணங்கள் இருக்க வேண்டும்.

இயேசு தாமே இதற்கான ஒரு பகுதி பதிலை மத்தேயுவில் எச்சரிப்பாக வழங்குகிறார். "அன்றியும் நீ ஜெபம்பண்ணும்போது மாயக்காரரைப்போலிருக்க வேண்டாம்; மனுஷர் காணும்படியாக அவர்கள் ஜெப ஆலயங்களிலும் வீதிகளின் சந்திகளிலும் நின்று ஜெபம் பண்ண விரும்புகிறார்கள்; அவர்கள் தங்கள் பலனை அடைந்து தீர்ந்ததென்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்." (மத். 6:5, 6)

பொதுவான இடங்களில் ஜெபிக்கக்கூடிய ஜெபங்கள் நியாயமாகக் காணப்பட்டாலும், கிறிஸ்துவுக்குள் நம்முடைய வாழ்க்கையில் தனி ஜெபம் அவசியம் என்பதற்கு காரணங்கள் உண்டு. தனி ஜெபத்தில் நம்முடைய நோக்கங்கள் மட்டுமே பரலோக பிதாவினிடத்தில் ஏறெடுக்கப்பட்டு மற்றெல்லா காரியங்கள் நீக்கப்படுகிறது. அந்தரங்கமான ஜெபங்கள் அந்தரங்கமாகவே இருக்க வேண்டும். மற்றொரு வார்த்தைகளில் சொல்லப்போனால் நாம் தனித்து ஜெபிக்கக்கூடிய

தருணங்களைப் பற்றி மற்ற ஒருவரும் அறியாதிருக்க வேண்டும். இல்லாவிட்டால் நம்முடைய தனி ஜெபம் உண்மையான அந்தரங்கமான ஜெபமாய் இராது.

பொதுவாக அமைதியான சூழ்நிலையில் தனித்து ஜெபிக்கையில் நம்முடைய ஜெபத்தின் நோக்கங்கள் மிக சரியாக மையப்படுத்துவதற்கு வாய்ப்புண்டு. திசை திருப்பப்படுதல் குறைந்து. முழு கவனமும் தேவனுடைய ஐக்கியத்தில் நிலைத்து நிற்கும்.

நம்முடைய முழுமனதோடு அவர் செய்த நன்மைகளுக்காக நன்றிகளை ஏறெடுப்பது, அவருடைய திட்டங்களைக் குறித்த விண்ணப்பங்கள் எல்லாவற்றுக்கும் மேலாக நம்முடைய பாவங்களுக்குண்டான மன்னிப்பை நாம் மனதார கேட்கலாம்.

**அவருடைய பொதுவான ஜெபங்கள்**

நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தில் பொதுவான இடங்களில் ஏறெடுக்கப்பட்ட ஜெபங்கள் அவருடைய ஊழியத்தின் ஒரு பகுதியாய் இருந்தது. மேலும் இவைகள் நம்முடைய ஜெப வாழ்க்கையில் ஒரு அற்புதமான மாதிரியாக முன் வைக்கலாம். வெளிப்படையாகவோ, அமைதியாகவோ உணவுக்கு முன் ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் ஒருவேளை நாம் தேவனோடு அடிக்கடி தொடர்பு கொள்ள ஒரு வாய்ப்பாக இருக்கலாம். "அப்பொழுது அவர் ஜனங்களைத் தரையிலே பந்தியிருக்கக் கட்டளையிட்டு, அந்த ஏழு அப்பங்களையும் எடுத்து, ஸ்தோத்திரம் பண்ணி, பிட்டு, அவர்களுக்குப் பரிமாறும்படி சீஷர்களிடத்தில் கொடுத்தார்; அவர்கள் ஜனங்களுக்குப் பரிமாறினார்கள்." (மாற். 8:6) நம்முடைய இயேசுவின் வார்த்தைகள் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. புதிய ஏற்பாட்டில் தற்காலிக உணவுக்காக தேவனிடத்தில் நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்து ஏறெடுக்கக்கூடிய நன்றியுள்ள ஜெபங்கள் இப்பகுதியில் மட்டுமே காணப்படுகிறது. (நன்றியறிதலான ஜெபம்) நம்முடைய நினைவு கூருதலில் அடையாளங்களுக்காகவே ஏறெடுக்கப்படுகிறது என்று நாம் கருதுகிறோம் - மத். 26:26 காண்க - இது தற்காலிக உணவுக்கான ஆசிர்வாதமாக இருக்கவில்லை. மாறாக அந்த அடையாளங்கள் போஜனத்தை காட்டிலும் பரிசுத்தமான அடையாளங்களை எடுத்துக்காட்ட பயன்பட்டது.

பொதுவாக தேவனிடத்தில் ஆவிக்குரிய காரியங்களைக் குறித்து நாம் தொடர்பு கொள்ள வேண்டும் என்று எண்ணலாம். ஆனாலும் நாம் பெறக்கூடிய ஒவ்வொரு தற்காலிகமான போஷிப்புக்காக நன்றிகளை ஏறெடுப்பது நமக்கு மிக அவசியமானது. இது இயேசுவின் மாதிரியைப் பின்பற்றக்கூடிய காரியமாகும். நம்முடைய அடிப்படை தேவைகளுக்கு ஏற்ற சகலகாரியங்களையும் தேவனே ஏற்பாடு செய்கிறார் என்பதை நாம் உணர்ந்து, அவைகளினால் நாம் பெறக்கூடிய பலத்தை ஆண்டவரின் பணிக்காக பயன்படுத்த வேண்டும். உணவுக்காக ஏறெடுக்கப்படும் ஜெபங்களைப் பற்றி வேதாகமத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள சில மாதிரிகள் மிக சுருக்கமாக இந்த குறிப்பையே நமக்கு வலியுறுத்துகிறது. இது நம்முடைய ஜெபங்களில் வரிசையாக ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்களில் ஒன்றாக இருப்பதற்கு அவசியம் இல்லை.

மிக முக்கியமாக நம்முடைய ஆண்டவர் பொதுவான இடத்தில் ஏறெடுத்த ஜெபம், மரித்த லாசருவை எழுப்பும் முன் பதிவு செய்யப்பட்டிருப்பதை நாம் காணலாம். "அப்பொழுது மரித்தவன் வைக்கப்பட்ட இடத்திலிருந்த கல்லை எடுத்துப் போட்டார்கள். இயேசு தம்முடைய கண்களை ஏறெடுத்து: பிதாவே, நீர் எனக்குச் செவிகொடுத்தபடியினால் உம்மை ஸ்தோத்தரிக்கிறேன். நீர் எப்பொழுதும் எனக்குச் செவிகொடுக்கிறீர் என்று நான் அறிந்திருக்கிறேன்; ஆனாலும் நீர் என்னை அனுப்பினதைச் சூழ்ந்துநிற்கும் ஜனங்கள் விசுவாசிக்கும்படியாக அவர்கள்நிமித்தம் இதைச் சொன்னேன் என்றார்." (யோவா. 11:41, 42)

இந்த தொகுப்பில், ஒரு பொதுவான ஜெபத்தை மட்டுமல்ல, பொதுவான இடங்களில் சத்தமாக ஜெபிக்கக்கூடிய முக்கியமான காரணத்தையும் இயேசு நமக்கு வலியுறுத்துகிறார். நம்முடைய வாழ்க்கையில் தேவனைப்பற்றிய முக்கியத்துவங்கள் மற்றவர்களுக்கு முன்பாக வெளிப்படுத்துவதற்கு வாய்ப்புகளைப் பெறலாம். இம்மாதிரியான ஜெபங்கள் இரண்டு வகையில் சாட்சியாக அமைகிறது;

கிறிஸ்தவர்களின் ஆவிக்குரிய வாழ்க்கையின் முக்கியத்துவங்கள் வெளிப்படுவதை அவிசுவாசிகளாகிய நல்ல ஜனங்கள் கேட்டறியலாம். மற்றும், உண்மையான கிறிஸ்தவர்களுக்கு வெட்கப்படாமல் சுவிசேஷத்தை அறிவிப்பதற்கு இது ஒரு எடுத்துக்காட்டாக வெளிப்படலாம். "கிறிஸ்துவின் சுவிசேஷத்தைக் குறித்து நான் வெட்கப்படேன்; முன்பு யூதரிலும் பின்பு கிரேக்கரிலும் விசுவாசிக்கிறவனெவனோ அவனுக்கு இரட்சிப்பு உண்டாவதற்கு அது தேவபெலனாயிருக்கிறது." (ரோ. 1:16)

**முக்கியமான முடிவுகள் ஏறெடுக்கப்படும் முன் ஏறெடுக்கப்படும் ஜெபம்**

நம்முடைய ஆண்டவராம் இயேசுவும், ஒரு முக்கியமான முடிவை எடுப்பதற்கு முன் இராமுழுவதும் ஜெபித்தார் என்று வாசிக்கிறோம். "அந்நாட்களிலே, அவர் ஜெபம்பண்ணும்படி ஒரு மலையின்மேல் ஏறி, இராமுழுவதும் தேவனை நோக்கி: ஜெபம்பண்ணிக்கொண்டிருந்தார். பொழுது விடிந்தபோது, அவர் தம்முடைய சீஷர்களை வரவழைத்து, அவர்களில் பன்னிரண்டுபேரைத் தெரிந்து கொண்டு, அவர்களுக்கு அப்போஸ்தலர் என்று பேரிட்டார்." (லூக். 6:12, 13)

இந்த வசனத்திற்குப்பின் அப்போஸ்தலரின் நாமங்களை வரிசையாகக் காணலாம். வழக்கம்போல, எந்த இடையூறும் இன்றி தேவனோடு நெருங்கி ஐக்கியப்பட்டு ஜெபிப்பதற்கு ஒரு தனிப்பட்ட இடத்தை இயேசு தேடி சென்றார். இயேசு இராமுழுவதும் ஜெபித்தாலும், அவர் தேவனுடைய திட்டத்தை மட்டுமே செயல்படுத்தினார். ஏனெனில், இயேசுவுக்காக பரலோகத்தின் தந்தையே அப்போஸ்தலர்களை உண்மையாக தேர்வு செய்தார் என்று நாம் அறிந்திருக்கிறோம். (யோவா. 17:12)

எவ்வளவு அற்புதமான இந்த மாதிரி ஜெபம் நமக்கு ஒரு முக்கிய கருத்தை கற்பிக்கிறது! மிக முக்கியமான முடிவுகளை எடுப்பதற்கு முன் அமைதியான சூழ்நிலையில் நாம் தேவனோடு ஐக்கியப்படுவது எவ்வளவு அவசியம். இயேசுவைப்போல நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய சித்தத்தை மட்டுமே செய்வதற்கு இப்படிப்பட்ட தனி ஜெபம் மிக அவசியம் என்று வலியுறுத்தப்படுகிறது. அதாவது, தேவனுடைய சித்தம் செய்வதே நம்முடைய முழு வாஞ்சை என்று நம்முடைய தனி ஜெபங்கள் வெளிப்படுத்த வேண்டும்.

**ஆண்டவரின் வழிநடத்துதலை நிதானித்தல்**

சில சகோதரர்கள், தேவையற்ற பாரங்களைச் சுமந்து கொண்டு தேவன் நம்மை வழிநடத்துகிறாரா இல்லையா என்பதை நிதானிப்பதற்கு தொடர்ச்சியாக முயற்சிப்பார்கள். உண்மையில், நம்முடைய அனுபவங்களை தேவன் மேற்கொள்கிறாரா என்பதை பரிசுத்தமுள்ள சிந்தையில் யூகிப்பதின் மூலமே அனுமானிக்க முடியும். தேவனுடைய வழிநடத்து தலை குறித்த நம்முடைய அனுமானங்களை மற்றவர்களிடத்தில் வெளிப்படுத்தும் பொழுது தேவனுடைய தெய்வீக நன்மைகளை தவறாக காட்டக்கூடிய அபாயத்தில் அகப்படுகிறோம். நம்முடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில், ரோ. 8:28-ம் வசனத்தில் சொல்லப்பட்ட வாக்குத்தத்தம் தொடர்ந்து மேற்கொள்ளுவதைக் காணலாம். ஆகவே நம்முடைய அனுபவங்களை மிக கவனமாக சிந்தித்து, அதை சரியாக மதிப்பிட்டு, தெய்வீக வழிநடத்துதலை தொடர்ந்து கொண்டிருப்பதற்கு உத்தரவாதம் அளிக்க வேண்டும். சில விதிவிலக்கான காரியங்களில் மட்டுமே, மற்ற விசுவாசிகளிடத்தில் நாம் இந்த உபத்திரவத்தை வெளிப்படுத்த வேண்டும்.

இயேசுவைப் போல, நாம் ஜெபிக்கக்கூடிய எல்லாவற்றையும் பெறுவதில்லை. இயேசு தம்முடைய பலியின் மரணத்திற்கு சில மணி நேரங்களுக்கு முன் "பிதாவே, உமக்குச் சித்தமானால் இந்தப் பாத்திரம் என்னைவிட்டு நீங்கும்படி செய்யும்; ஆயினும் என்னுடைய சித்தத்தின்படியல்ல, உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" (லூக். 22:42) என்று ஜெபித்ததாக வாசிக்கின்றோம். இங்கு நாம் பின்பற்ற வேண்டிய மற்றொரு மாதிரியை இயேசு நமக்கு முன் வைக்கிறார். நம்முடைய எல்லா உணர்வுகளையும் ஜெபத்தின் மூலம் வெளிப்படையாக தேவனிடத்தில் ஏறெடுக்க வேண்டும். ஆனால் இறுதியில் எல்லாவற்றையும் அவர் சித்தத்திற்கு ஒப்புக் கொடுக்க வேண்டும். "உம்முடைய சித்தத்தின்படியே ஆகக்கடவது" என்ற நம்முடைய ஆண்டவரின் வார்த்தைகளை நம்முடைய ஜெபத்திலும்

நினைத்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய நோக்கங்களை மட்டுமே நிறைவேற்றும் பட்சத்தில் நாம் எதிர் நோக்கக்கூடிய விளைவுகளைக் காட்டிலும் மிக உன்னதமான பலன்களை தேவன் கையளிப்பார் என்ற உத்திரவாதத்தைப் பெறலாம்.

**நம்முடைய சிறந்த நேரங்களில் ஜெபங்களை ஏறெடுத்தல்**

இறுதியாக நடைமுறைக்கேற்ற ஒரு கருத்து: எப்பொழுதெல்லாம் வாய்ப்புகள் கிடைக்கிறதோ, அதாவது, மனதும் உடலும் உற்சாகமான நிலையில் இருக்கையில் நாம் ஜெபங்களை ஏறெடுப்பது வரவேற்கத்தக்கது. அநேக சகோதரர்கள், தங்களுடைய எல்லா வேலைகளையும் முடித்த பின்பு, நித்திரைக்கு செல்வதற்கு முன் ஜெபிக்கிறார்கள். அப்பொழுது அவர்களின் உடல் மிகவும் சோர்வடைந்த தாய், உதடுகள் மட்டுமே விண்ணப்பித்து, சரீர நிலையோ அதற்கு உடன்படாமல் பல நேரங்களில் சரிந்து போவதைக் காணலாம். ஆகவே, நம்முடைய ஆவியும் சரீரமும் உற்சாகமான நிலையிலிருக்கும் மாலை நேரங்களில் ஜெபிக்கக்கூடிய பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்ளலாம். அப்பொழுது நாம் அன்றைய தினத்தில் நடந்த எல்லா காரியங்களையும் பசுமையாக நினைவில் கொண்டு, அதற்கேற்ற கிருபைகளையும், மன்னிப்புகளையும் விண்ணப்பிக் கலாம்.

ஜெபத்தில் விசுவாசத்தோடு நிலைத்திருப பதற்கு நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் மாதிரியை தொடர்ந்து கண்ணோக்குவோமாக.

இயேசு, பேதுரு மற்றும் யூதாஸ்

# ஜெபத்தில் காணப்பட்ட வேறுபாடுகள்



"பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக் கூடாதா?" (மத். 26:40)

**Brian Montague**

நம்முடைய ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவின் வழியாக பரலோக தந்தையிடம் சென்று, நாம் உண்மையோடும், விசுவாசத்தோடும் அவருடைய சித்தத்தின்படிவிண்ணப்பங்களை ஏறெடுக்கும் பொழுது, நிச்சயமாக அவர் நம்முடைய ஜெபங்களைக் கேட்டு நாம் மிகுதியான பலன்களை பெருமளவிற்கு பதிலளிப்பார் என்ற மேன்மையான சிறப்புரிமையை விசுவாசிகளாகிய நாம் பெற்றிருப்பதை நன்கு அறிந்திருந்திருக்கிறோம். இக்காரியம் தேவனுடைய ஜனங்களுக்கு ஆறுதல் அளிக்கும் உத்திரவாதமாய் இருக்கிறது. நம்முடைய ஆண்டவரின் சீஷர்கள் எவ்வாறு ஜெபிப்பது என்று கற்றுக் கொடுக்கும்படி கேட்டுக் கொண்டார்கள். இயேசு தொடர்ந்து ஜெபித்துக் கொண்டிருந்த தையும், யோவான் ஸ்நானன் அவருடைய சீஷர்களுக்கு கற்றுத் தந்ததையும் அவர்கள் கண்டார்கள். இவர்கள் மதப்பற்றுள்ள யூதர்களாக ஒழுங்காக சங்கீதங்களை வாசித்து, பரலோக தந்தைக்கு ஆராதனை செலுத்தினாலும், ஜெபத்தின் வல்லமையைக் குறித்து மேலும் ஆழமான காரியங்களைக் கற்றுக் கொள்ள வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார்கள். மேலும் நம்முடைய ஆண்டவரின் ஜெப வாழ்க்கை அவருடைய சீஷர்களுக்கு முன் கவர்ச்சியூட்டும் மாதிரியாக இருந்ததினால் அவர்கள் ஜெபிக்க கற்றுக் கொள்ளுவதற்கு ஆர்வமுள்ளவர்களாகக் காணப்பட்டார்கள். இதன் காரணத்தினால் ஜெபிக்க கற்றுக் கொடுப்பதில் இயேசு மகிழ்ச்சியடைந்தார். (மத். 6:9-13) ஆனால் ஏன்?

தேவனையே சார்ந்து எல்லா பக்தியோடும், கனத்தோடும், நம்பிக்கையோடும், எல்லா விண்ணப்பங்களையும் ஏறெடுத்து, அவரை ஆராதிக்க கிடைக்கப் பெற்றுள்ள வாய்ப்புகளை சீஷர்கள் உணர்ந்து கொள்ள வேண்டும் என்றே இயேசு விரும்பினார். கீழ்ப்படுத்த முடியாத அல்லது சொல்ல முடியாத ஆத்துமாவின் உண்மையான விருப்பமே ஜெபம். நாம் குறைவுள்ளவர்கள் என்பதையும், தேவனுடைய பிள்ளைகளாக மாறுவதற்கு குறைவுள்ள நாம், முழுமையாக தேவனையே சார்ந்திருக்க வேண்டும் என்பதையும், இது காட்டுகிறது. (2 கொரி. 3:5) பிதாவோடு தொடர்பு கொள்ளக்கூடிய ஒரு வாய்ப்பு ஒரு நன்மையான ஆசீர்வாதம் என்று இயேசு புரிந்திருந்தார். இதை மட்டுமல்ல, பிதாவுக்கு ஏற்றவாறு ஜெபித்து ஆவிக்குரிய வளர்ச்சியை அடைய வேண்டிய வழிகளையும் குறித்து நீங்கள் சீஷர்கள் புரிந்து கொள்ள வேண்டும் என்று இயேசு விரும்பினார். அவருடைய வாழ்கையை நாம் பார்க்கும்போது, தம்முடைய பூமிக்குரிய ஊழியத்தை ஜெபத்தோடு துவங்கினார். அவர் தனித்து ஜெபித்தார். அவர் இராமுழுதும் ஜெபித்தார். ஆனால் யோர்தானில் நம்முடைய ஆண்டவர் ஞானஸ்நானம் எடுத்ததைத் தொடர்ந்து அவர் தவறாமல் ஜெபித்தார் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது (லூக். 6:12; 9:18) நம்முடைய ஆண்டவர் ஜெபத்தை எவ்வாறு பயன்படுத்தினார் என்று பார்க்கும் பொழுது, இதை பொருத்த வரைக்கும் அவருடைய சீஷர்களும் ஆண்டவருடைய அடிச்சுவடுகளைப் பின்பற்றியிருப பார்கள் என்பதை புரிந்து கொள்ளலாம். நம்முடைய இடுக்கமான நேரங்களில் மட்டுமே ஒரு அவசரத்திற்கு ஜெபங்களை பயன்படுத்தக்கூடாது. "இடைவிடாமல் ஜெபம் பண்ணுங்கள் என்று 1 தெச. 5:17-ம் வசனம் கூறுகிறது. இது மிக அவசியமானது. நாம் எப்போதும் எல்லாவற்றிற்காகவும் தேவனிடத்தில் நன்றிகளை ஏறெடுத்து ஆராதிப்பதற்குரிய விருப்பத்தை நமக்குள் குறைத்துக் கொண்டால், புத்திர சுவிகாரத்தின் ஆவியை நாம் இழப்பதற்கு நேரிடும். இந்த உலகத்தின் செல்வாக்கினாலோ நம்முடைய மாம்ச பெலவீனத்தினாலோ அல்லது சாத்தான் வைக்கும் தடைகளினாலோ நம்முடைய ஜெப வாழ்க்கை மங்குவதற்கு வாய்ப்புண்டு. ஆகவே பிதாவுக்கும்

நமக்கும் இடையில் வரக்கூடிய எந்தவித தடைகளையும் தவிர்ப்பதற்கு நாம் விழிப்போடு இருக்க வேண்டும்.

யோர்தானில் ஞானஸ்நானம் எடுத்த நம்முடைய ஆண்டவர், தொடர்ந்து ஜெபிக்கக்கூடிய பழக்கத்தைக் கொண்டிருந்தார் என்று வசனங்கள் குறிப்பிடுகிறது. (லூக். 3:21; 5:15, 16) குறிப்பாக அவருடைய இந்த பூமிக்குரிய ஊழியத்தின் இறுதி வாரத்தில் இடைவிடாமல் ஜெபித்தார். இயேசு எருசலேமுக்குள் நுழைந்த அந்த வாரம் ஆர்ப்பரிப்பான ஆரவாரத்தோடு துவங்கியது. (சக. 9:9) அதற்கு பின் அநேக கொடூரமானதும் பயங்கரமுமான காட்சிகள் காணப்பட்டாலும், முடிவு வெற்றிகரமாய் இருந்தது. இந்த இறுதி காலத்தில் நம்முடைய ஆண்டவர் பிசாசினால் ஏற்பட்ட அநேக சோதனைகளை எதிர்க்க வேண்டியதாய் இருந்தது. அவரைப்போல அவருடைய சீஷர்களாகிய பேதுருவும், யூதாசும் இருந்தார்கள். இவ்விருவரும் தேவனிடத்தில் தங்களுடைய விண்ணப்பங்களை எவ்வாறு ஏறெடுக்க வேண்டும் என்று இயேசு முன்னதாகவே கற்றுக் கொடுத்தார். ஆனாலும், இயேசுவின் ஊழியத்தின் கடைசி வாரத்தில் இவர்கள் ஜெபத்தை வெற்றிகரமாக பயன்படுத்தினார்களா? அல்லது பயன்படுத்துவதில் தோல்வியடைந்தார்களா? அல்லது சரியாக பயன்படுத்தி அதனுடைய நன்மைகளைப் பெற்றார்களா? என்பதை நாம் சிந்திப்போம்.

**இயேசுவின் ஜெப வாழ்க்கை**

ஆண்டவரின் பூமிக்குரிய வாழ்க்கையின் இறுதி வாரத்தின் துவக்கத்தில் எல்லா காரியங்களையும் விசுவாசத்தோடு விண்ணப்பித்தால் அவைகளைப் பெற்றுக் கொள்ளலாம் என்று சீஷர்களுக்கு நினைப்பூட்டினார். (மத். 21:22) நமக்கு முன்வைக்கப்படும் தேர்வுகளுக்கு முன் தேவனை நிறுத்தினால், அவர் சரியான பாதைகளில் நம்மை நடத்தி சகல தேவைகளையும் பூர்த்தி செய்கிறவராய் இருப்பார். இந்த ஒரு ஆலோசனை நிச்சயமாக சீஷர்களை கவரக்கூடியதாக இருந்திருக்கும். ஆனால் அவ்வாறு நடந்ததா?

நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின் இறுதி நாள் நீசான் 14-ம் தேதி மாலையில் துவங்கியது. அப்போது மேல் வீட்டில் பஸ்காவுக்காக ஆயத்தம் பண்ணும்படி இயேசு பேதுருவுக்கும் யோவானுக்கும் கட்டளையிட்டார் என்ற வசனங்கள் வெளிப்படுத்துகிறது. (லூக். 12:7-13) சிலுவையில் அறையப்படுவதற்கு முன் எருசலேமில் தம்முடைய சீஷர்களோடு தம்முடைய இறுதி போஜனத்தை ஆண்டவர் புசித்தார். அதற்கு பின் மத். 26:26-29 வசனங்கள் நடந்த சம்பவங்களை அதாவது அப்பம் பிட்டு திராட்சரசத்தை பகிர்ந்து கொண்டு ஜெபத்தோடு அந்த நினைவு கூருதலின் நாளை அனுசரித்ததை விவரிக்கிறது.

அந்த அடையாளங்களை நினைவு கூர்ந்த பின் ஸ்தோத்திர பாடல்களைப் பாடினபின் நம்முடைய ஆண்டவரும் அவருடைய விசுவாசமுள்ள சீஷர்களுக்கும் ஒலிவ மலைக்குச் சென்றார்கள். அங்குள்ள கெத்செமனே தோட்டத்தில் பரலோக பிதாவை நோக்கி இயேசு விண்ணப்பித்தார். ஒருவேளை யோவா. 17-ம் அதிகாரத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள உருக்கமான ஜெபத்தைக்கூட அவர் ஏறெடுத்திருக்கலாம். அவரோடு இருந்த விசுவாசமுள்ள சீஷர்கள் மற்றும் முழு சனப வகுப்பாரும் தீமையானவனிடமிருந்து பாதுகாக்கப்பட்டு அவருடைய மறைவுக்குப்பின் தங்களுடைய பலத்தையும், நீடித்த சகிப்புத்தன்மையையும் தக்கவைத்துக் கொள்ள வேண்டும் என்றும் விரும்பினார். எல்லாவற்றிலும் அவருடைய சித்தத்தை அல்ல, பிதாவின் சித்தத்தையே நிறைவேற்ற முயற்சித்தார்.

ஆண்டவரின் ஊழியத்தின் முடிவு இறுதி மணி நேரங்களில் ஏற்பட்ட இறுதி சோதனைகளிலும், உபத்திரவங்களிலும் சிலுவையில் தொங்கும் வரைக்கும் அமைதியோடு பரலோக பிதாவை நோக்கி விண்ணப்பித்துக் கொண்டிருந்தார். பரலோகத்தில் லோகோஸாக வசித்துக் கொண்டிருந்தவர் மனுஷனாக இந்த பூமியில் பிறந்தார் என்பதை வசனங்கள் தெளிவாகக் காட்டுகிறது. இந்த பூமியின் இறுதி மணி நேரங்களை தம்முடைய பரலோக பிதாவைப் பற்றி தியானித்து, அவரிடத்தில் ஜெபித்துக் கொண்டே எல்லா சோதனைகளையும் மேற்கொண்டு தம்முடைய மனப்பூர்வமான பலியை வெற்றிகரமாக செலுத்தினார்.

முடிவுபரியந்தம் அந்த சோதனையின் முழு இரவிலும் அவருடைய ஜெப வாழ்க்கையே அவரை

தேவனுக்கும் அவரை நிலையாக நிற்கச் செய்ததை நமக்கு நிரூபிக்கிறது. அவர் மரிக்கும் முன், "பிதாவே, என்னுடைய ஆவியை உம்முடைய கரங்களில் ஒப்புவிக்கிறேன்" (லூக். 23:46) என்ற தெய்வீக நம்பிக்கையோடு இறுதி வார்த்தைகளை ஏறெடுத்தார். கூடுதலாக நம்முடைய ஆண்டவரின் சிலுவை மரணத்திற்குப்பின் அவர் பரலோகத்திற்கு ஏறிச் செல்வது மட்டுமல்லாமல், அவருடைய மரணத்தின் வழியாகவும், உயிர்த்தெழுதலின் வழியாகவும், சபைவகுப்பாருக்கும் அதற்குபின் மனுக்குலத்திற்கும் மீட்புக்குரிய விலைக்கிரயத்தை கையளித்தார். இந்த பூமி முழுவதிலும் இயேசு இராஜாவாக ஆட்சி செய்து தம்முடைய ஒப்புரவாக்குதலின் வேலைகளை நடப்பிக்கும்பொழுது, அனைவரும் உணர்ந்து கொள்வார்கள். இப்படியாக, நம்முடைய ஆண்டவருடைய ஜெபவாழ்க்கை எவ்வளவு வெற்றிகரமாய் இருந்தது என்பதை காணலாம். அவருடைய விண்ணப்பங்கள் தேவனால் அங்கீகரிக்கப்பட்டு, அதன் பலனாக அவர் மரணபரியந்தம் விசுவாசம் உள்ளவராக காணப்பட்டதினால், தேவனுடைய வலது பாரிசத்திற்கு உயர்த்தப்பட்டார், இது, சபையின் வளர்ச்சிக்கும் வருங்காலத்தில் கிறிஸ்துவின் கீழ் இந்த உலக மனுக்குலம் ஆசீர்வதிக்கப்படுவதற்கும் வழிவகுத்தது.

**ஜெபம், பேதுருவுக்கு உதவியாக இருந்திருக்கக்கூடும்:**

பேதுருவை பொருத்தவரையில் பெந்தெகொஸ்தே நாளில் அவருடைய வாழ்க்கை துவங்கியதிலிருந்து, குறிப்பாக புறஜாதிகளின் மத்தியில் சிதறியிருக்கும் யூத கிறிஸ்தவர்களுக்கு அவர் எழுதின நிருபங்களை வாசிக்கும் போது உற்சாகமான ஜெப வாழ்க்கையை அவர் கொண்டிருப்பதைக் காணலாம். இப்படியாக ஜெப வாழ்க்கையில் உற்சாகத்தோடு இருக்கும்படி அவர் தேவஜனங்களை ஊக்குவிக்கிறார். ஆயினும், ஆவியின் அபிஷேகத்தைப் பெறுவதற்கு முன் அவர் ஜெபத்தின் வழியாக பிதாவின் வழிநடத்துதலைப் பெற்றார் என்ற எந்தவிதமான ஆவிக்குரிய ஆதாரமும் காணப்படுவதில்லை. மாறாக தெய்வீக ஆலோசனையைக் காட்டிலும் தன்னுடைய சுய பலத்தையும், சித்தத்தையுமே பேதுரு சார்ந்திருந்தார் என்பதை சுவிசேஷங்கள் கூறுகிறது.

மேல் வீட்டறையில் இருந்தபோதே பேதுருவின் பலவீனத்தைக் குறித்து இயேசு நினைவுபடுத்தினார். "பின்னும் கர்த்தர்: சீமோனே, சீமோனே, இதோ, கோதுமையைச் சுளகினால் புடைக்கிறதுபோலச் சாத்தான் உங்களைப் புடைக்கிறதற்கு உத்தரவு கேட்டுக்கொண்டான். நானோ உன் விசுவாசம் ஒழிந்து போகாதபடிக்கு உனக்காக வேண்டிக்கொண்டேன்; நீ குணப்பட்டபின்பு உன் சகோதரரை ஸ்திரப்படுத்து என்றார்." (லூக். 22:31, 32) நம்முடைய ஆண்டவர் பேதுருவிடம் நேரடியாக பேசினாலும், "உனக்காக வேண்டிக் கொள்கிறேன்" என்ற வாக்கியம் அனைத்து சீஷர்களுக்கும் பொருந்தக்கூடியதாக தோன்றுகிறது. எல்லா சீஷர்களும் அவரை விட்டு ஓடிப்போவார்கள் என்பதை ஆண்டவர் அறிந்திருந்தார். ஆகவே சாத்தான் அவர்களை சோதிக்க முயற்சிக்கும்போது, அவர்களின் விசுவாசம் ஒழிந்துபோகாதபடிக்கு அவர்கள் ஜெபித்திருக்க வேண்டும்.

அதை தொடர்ந்து வசனத்தில் (வசனம் 33) காவலிலும், மரணத்திலும் கூட ஆண்டவரைப் பின்பற்றுவதற்கு பேதுரு ஆயத்தமாக இருந்தார் என்பதை உடனடியாக பதிலளித்தார். ஆயினும், "அவர் அவனை நோக்கி: பேதுருவே, இன்றைக்குச் சேவல் கூவுகிறதற்கு முன்னே நீ என்னை அறிந்திருக்கிறதை மூன்றுதரம் மறுதலிப்பாய் என்று உனக்குச் சொல்லுகிறேன் என்றார்." (லூக். 22:34)

உண்மையில் இந்த ஒரு செய்தியை நம்புவதற்கு பேதுருவுக்கு மிக கஷ்டமாக இருந்திருக்கும். ஏனெனில், அவர் ஆண்டவர் மேல் வைத்த ஆழமான அன்பையும், பக்தியையும் பிரதான ஆசாரியனுடைய வேலைக்காரனாகிய மல்கூஸின் காதை அவர் வெட்டினபோது தெளிவாக வெளிப்பட்டது. (யோவா. 18:10) மேலும் இயேசு பிடிப்பட்டபின் எல்லா சீஷர்களும் அவரைவிட்டு ஓடினபோது, பேதுரு மிக அமைதியாக இயேசுவை பின் தொடர்ந்து தன்னுடைய ஆண்டவருக்கு என்ன நடக்குமோ என்று பார்க்கும்படி பிரதான ஆசாரியனுடைய வீட்டிற்கு வந்தார்.

அறியாத நபர்கள் மூன்று பேரிடம் சேவல் கூவுவதற்கு முன் பேதுரு ஆண்டவரை மறுதலிக்கும் வரையில் அந்த உணர்வைப் பெறவில்லை. இயேசு சொல்லிய தீர்க்கதரிசனம் முழுமையாக நிறைவேறினதை எண்ணி இரக்கத்தோடு இயேசு பேதுருவை பார்த்தார். இச்சம்பவங்களுக்குப் பின் பேதுரு மனம் கசந்து அழுதார். (லூக். 22:62) தன்மேல் கொண்டிருந்த சுயநம்பிக்கை எவ்வளவு தவறானது என்பதை பேதுரு அறிந்திருந்தார். இக்கட்டான சூழ்நிலைகளிலும் கடுமையான சோதனைகளிலும் தேவன் அவரை பலப்படுத்தி வழிநடத்துவதற்கு அவர் காத்திருக்க வேண்டும். இதை அவர் செய்யாததினால் அவர் மனம் கசந்து அழ வேண்டியதாய் இருந்தது. ஒருவேளை சோதனைக்கு உட்படாதபடிக்கு ஜெபியுங்கள் என்று இயேசு கெத்செமனே தோட்டத்தில் சொன்ன காரியத்திற்குக் கீழ்ப்படியாமல் போனதற்கும் அவர் மனம் வருந்தியிருக்கலாம். (மத். 26:40, 41)

இந்த வசனங்களை பார்க்கும் பொழுது, கெத்செமனே தோட்டத்திற்குள் பிரவேசித்ததற்குப் பின் எல்லா சீஷர்களும் அமைதியோடு தேவனிடத்தில் தனிமையில் ஜெபிக்க வேண்டும் என்று ஆண்டவர் விரும்பினார் என்பதை காட்டுகிறது. ஆனால் அவர் ஏமாற்றம் அடையும்படியாக பதினொரு பேரும் அயர்ந்த நித்திரை அடைந்திருந்தார்கள். "பின்பு, அவர் சீஷர்களிடத்தில் வந்து, அவர்கள் நித்திரைபண்ணுகிறதைக் கண்டு, பேதுருவை நோக்கி: நீங்கள் ஒரு மணி நேரமாவது என்னோடேகூட விழித்திருக்கக்கூடாதா?" (மத். 26:40) என்றார். அவருடைய சீஷர்கள் பலவீனத்தில் சோர்ந்துபோய் இருப்பதை ஆண்டவர் அறிந்து, "பின்பு அவர் தம்முடைய சீஷர்களிடத்தில் வந்து: இனி நித்திரைபண்ணி இளைப்பாறுங்கள்; இதோ, மனுஷகுமாரன் பாவிகளுடைய கைகளில் ஒப்புக்கொடுக்கப்படுகிற வேளை வந்தது" (மத். 26:45) என்று கூறினார். இந்த ஆவிக்குரிய பதிவுகளின் அடிப்படையில் நம்முடைய ஆண்டவரின் ஊழியத்தின் இறுதி வாரத்தில் பேதுருவின் ஜெப வாழ்க்கை வெற்றிகரமாக இருக்கவில்லை என்பதை காண்கிறோம்.

பேதுரு ஜெபித்திருந்தால் இயேசுவை மறுதலித்த விஷயத்தில் சாத்தானின் தந்திரங்களுக்கு விழித்திருக்கக்கூடும். (எபே. 6:11) ஆயினும் பேதுரு இருதயத்தில் ஒரு நல்ல மனுஷனாக காணப்பட்டார். ஆகவே, இயேசு பேதுருவுக்காக தன்னுடைய தந்தையிடம் ஜெபித்தார். (லூக். 22:31, 32)

### யூதாஸ் ஜெபத்தின் பலன்களை புறக்கணித்தார்

இயேசு தம்முடைய பன்னிரண்டு அப்போஸ்தலரையும் தனியே அழைத்து அப்போஸ்தல ஊழியத்தை அவர்களிடம் ஒப்புவித்தார். (லூக். 6:13) வெளிப்புறமாக நல் நடக்கைகளை காட்டக் கூடியவர்களை ஆண்டவர் அப்போஸ்தலர்களாக தெரிந்து கொண்டார் என்று நாம் எண்ணலாம். அந்த பன்னிருவரில் யூதாசும் ஒருவராய் இருந்தார். இவர்கள் அனைவரும் பிதாவினிடத்தில் ஜெபிக்க கற்றுக் கொடுக்கப்பட்டார்கள். ஆயினும் தன்னுடைய ஜெபங்களில் பிதா தம்முடையவர்களை நடத்தும்படியாக அவர் விண்ணப்பித்ததாக வசனங்கள் காட்டுவதில்லை. அவர் பிதாவினிடத்தில் விண்ணப்பிப்பதைக் காட்டிலும், பணத்துக்கு அதிக முக்கியத்துவத்தை கொடுத்தார் என்று வசனங்கள் தெளிவாக நிரூபிக்கிறது.

இயேசு தம்முடைய சீஷர்களுக்கு யூதாசை நம்பிக்கையுள்ள ஒரு பொக்கிஷதாரராக நியமித்திருந்தார். ஆயினும் யூதாஸ் பணத்தின் மேல் வைத்திருந்த அதிகபட்சமான ஆசையானது அவருக்கு கொடுக்கப்பட்டிருந்த சிறப்புரிமையே ஒரு கண்ணியாக மாறினது. மரியாள் நளதம் என்னும் தைலத்தை விரயம் செய்தாள் என்று யூதாஸ் முறையிட்டதை யோவா. 12:5, 6-ம் வசனத்தில் வாசிக்கலாம். அந்த தைலத்தை விற்று தரித்திரருக்கு கொடுத்திருக்கலாமே என்று யூதாஸ் கூறினான். அவர் தரித்திரரின் மேல் உள்ள அக்கரையில் அல்ல, பணத்தின் மேல் உள்ள ஆசையினால் இப்படி கூறினார் என்றும் வசனங்கள் குறிப்பிடுகிறது. இயேசுவின் ஊழியத்தில் இறுதி வாரத்தின் போது பிரதான ஆசாரியர்களிடம் அவரை காட்டிக் கொடுப்பதற்கு யூதாஸ் ஒப்புக் கொண்டார். முப்பது வெள்ளி காசுகளுக்கு காட்டிக் கொடுக்கும் படியாக உடன்பட்டார். (மத். 26:15) இயேசு

உயிர்த்தெழுந்து சுவிசேஷம் புறஜாதிகளுக்கு அறிவிக்கப்பட்டபோது, "பண ஆசை எல்லா தீமைகளுக்கும் வேராயிருக்கிறது" (1 தீமோ. 6:10) என்ற அப். பவுலின் வார்த்தைகளை யூதாஸ் சரியான மனநிலையில் தேவனோடு தொடர்பு கொண்டிருந்தால் இந்த உணர்வை பெற்றுக் கொண்டிருக்கக்கூடும். மேலும். யூதாஸ் தேவனிடத்திலும் இயேசுவினிடத்திலும் அதிகபட்சமான அன்பை கொண்டிருக்கவில்லை என்பதை வெளிப்படையாக காட்டப்படுகிறது. அவர் அதிகமான அன்பை கொண்டிருந்தால் பண ஆசையினிமித்தம் அவர் சோதிக்கப்படும் போது, தேவனிடத்தில் அவைகளை மேற்கொள்வதற்கு ஜெபித்திருந்திருப்பார்.

உங்களில் ஒருவர் என்னைக் காட்டிக் கொடுப்பார் என்று இயேசு சீஷர்களிடம் சொன்னபோது, (மத். 26:25) யூதாஸ் தன்னுடைய கிரியைகளை மீண்டும் ஒருமுறை சிந்தித்திருக்கலாம். அல்லது உதவியை நாடி ஜெபித்திருக்கலாம். அதற்கு பதிலாக அவர் தன்னுடைய துன்மார்க்கமான கிரியைகளை நடப்பிப்பதற்கு மேல் வீட்டிலிருந்து இறங்கி சென்றார். யூதாசின் சுயநலமான இருதயமானது. இவ்வளவு உன்னதமான ஐக்கியத்தை விட்டு அவரை இயேசுவை காட்டிக் கொடுப்பதற்கு பிரதான ஆசாரியரிடம் இழுத்து சென்றது. குற்றம் இல்லாத இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தேனே என்ற உணர்வை பெறும் பொழுது காலம் கடந்துவிட்டது. அவர் ஜெபத்தின் வழியாக மன்னிப்பை வேண்டுவதற்குப் பதிலாக அவருடைய சுயநலத்தோடு தொடர்ந்து ஜீவிக்க இயலாமல் அந்த வெள்ளி காசுகளை திரும்ப கொடுத்துவிட்டு தற்கொலை செய்து கொண்டார், (மத். 27:4, 5)

பொதுவாக வரம்புக்கு உட்படாத அழுத்தம் மற்றும் விரக்தியினால் ஒருவர் தன்னுடைய ஜீவனை மாய்த்துக் கொள்வதுண்டு. யூதாசை பொருத்த வரைக்கும் குற்றமில்லாத ஆண்டவருடைய இரத்தத்தைக் காட்டிக் கொடுத்தார் என்பதை உணர்ந்தபோது, அவருக்குள் ஆழ்ந்த விரக்தி காணப்பட்டது. இந்த செயலுக்கு முன் அவர் தேவனை நெருங்கி "எங்கள் கடனாளிகளுக்கு நாங்கள் மன்னிக்கிறதுபோல எங்கள் கடன்களை எங்களுக்கு மன்னியும். எங்களைச் சோதனைக்குட்படப் பண்ணாமல், தீமையினின்று எங்களை இரட்சித்துக்கொள்ளும்" (மத். 27:12, 13) என்ற ஆண்டவருடைய வார்த்தையை ஏற்ற ஆலோசனையாக தன்னுடைய விரக்தியுள்ள இருதயத்தில் ஏற்றுக் கொண்டிருந்திருந்தால் அவர் பின்வரும் காரியங்களை நிறைவேற்றாதபடி தன்னை கட்டுப்படுத்தி இருக்கலாம். ஆயினும் யூதாசின் இருதயம் அதிக கேடுள்ளது என்று இயேசு அறிந்திருந்ததினால் அவர் பேதுருவுக்கு ஜெபித்தது போல யூதாசுக்காக ஜெபிக்கவில்லை. மாறாக, "மனுஷகுமாரன் தம்மைக்குறித்து எழுதியிருக்கிறபடியே போகிறார்; ஆகிலும், எந்த மனுஷனால் மனுஷகுமாரன் காட்டிக்கொடுக்கப்படுகிறாரோ, அந்த மனுஷனுக்கு ஐயோ; அந்த மனுஷன் பிறவாதிருந்தானானால் அவனுக்கு நலமாயிருக்கும் என்றார்" (மத். 26:24) என்று இயேசு கூறினார்.

**முடிவுரை**

நம்முடைய கிறிஸ்தவ ஜெப வாழ்க்கைக்கு இயேசு பேதுரு மற்றும் யூதாசின் மாதிரிகள் நிச்சயம் பயனள்ளதாக இருக்கும். நம்முடைய ஆண்டவர் தம்முடைய ஊழியத்தின் போது, தொடர்ந்து ஜெபித்தது போல நாமும் ஜெபிக்க வேண்டும். அவருடைய அர்ப்பணிக்கப்பட்ட வாழ்க்கையில் இந்த ஜெப வாழ்க்கையானது உச்சக்கட்ட விசுவாசத்தை நிரூபித்தது. பேதுருவை போல தெய்வீக உதவியையும், பயத்தையும், வழிநடத்துதலையும் நாடாமல் சுயபலத்தையும் நம்பிக்கையையும் சார்ந்திருக்க கூடாது. ஏனெனில், அவைகள் நம்மை மிகுதியான தோல்விக்கு வழிநடத்தும். இறுதியாக நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையில் ஜெபத்தை ஒரு பெரும் பகுதியாக கொண்டிருந்தால், நம்முடைய இருதயங்களை எல்லா சூழ்நிலைகளிலும் தேவன் நடத்தி மனப்பூர்வமாக நீதியின் கோட்பாடுகளை நாம் மறுதலிப்பதற்கு அவர் நம்மை கைவிடமாட்டார். யூதாசை போல சொந்த இரத்தத்தினால் நம்மை மீட்டவரை காட்டிக் கொடுக்காமல் இருக்க வேண்டும். ஆகவே நாம் பார்க்கும் இந்த மாதிரிகள் நம்முடைய வாழ்க்கையிலும் கூட ஜெபத்தின் முக்கியத்துவங்கள் நம்முடைய குணங்களில் ஆழமாக பதிவு செய்யப்பட்டு, மரணபரியந்தம் விசுவாசமுள்ளவர்களாக சிந்திக்க முயற்சிப்போமாக. (வெளி. 2:10)



# நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும்?

"கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;" (மத். 7:7)

**Peter Karavas**

ஜெபத்தில் நாம் தேவனை துதித்து புகழ்ந்து விண்ணப்பங்களை ஏறெடுக்கலாம். நம்முடைய உடல் நலனுக்காகவும், நல்ல வேலைக்காகவும் அல்லது நம்முடைய சௌகரியத்திற்காக நான்கு சக்கர வாகனங்களை விண்ணப்பிக்கலாமா? அல்லது ஆவிக்குரிய காரியங்களுக்கு மட்டுமே விண்ணப்பித்து பொறுமையை அதிகரிப்பதற்காகவும், பொறமையை மேற்கொள்வதற்காகவும் அல்லது சரியான வார்த்தைகளை பேசுவதற்காகவும் மட்டுமே நாம் ஜெபிக்க வேண்டுமா? நம்முடைய ஜெப வாழ்க்கைக்கு தேவையான ஆலோசனைக்கு கவனமுள்ள ஒரு வேத ஆய்வு நமக்கு உதவியாக இருக்கும்.

**1.உங்கள் எதிராளிகளுக்காக ஜெபியுங்கள். மத்.5:44 லூக்.6:28**

பொதுவாக எதிராளிகளை அழிப்பது அல்லது தண்டிப்பது இயல்பு. ஆனால் இயேசுவோ, "உங்கள் சத்துருக்களைச் சிநேகியுங்கள்; உங்களைப் பகைக்கிறவர்களுக்கு நன்மைசெய்யுங்கள். உங்களைச் சபிக்கிறவர்களை ஆசீர்வதியுங்கள்; உங்களை நிந்திக்கிறவர்களுக்காக ஜெபம்பண்ணுங்கள்" (லூக். 6:27, 28) என்று நமக்கு ஆலோசனை கூறுகிறார். நம்முடைய இயல்பான மனுஷ யோசனைக்கு எதிராக, "உங்களுக்கு நன்மைசெய்கிறவர்களுக்கே நீங்கள் நன்மைசெய்தால், உங்களுக்குப் பலன் என்ன? பாவிகளும் அப்படிச் செய்கிறார்களே. ஆகையால் உங்கள் பிதா இரக்கமுள்ளவராயிருக்கிறதுபோல, நீங்களும் இரக்கமுள்ளவர்களாயிருங்கள்" (லூக். 6:33, 36) என்று இயேசு கூறுகிறார்.

நம்முடைய எதிராளிகளுக்காக எப்படி ஜெபிப்பது? சாத்தானின் வஞ்சகமான கண்ணியிலிருந்து அவர்களை விடுவிக்கவும், சத்தியத்தின் மகிமையை அறியாதபடிக்கு குருடாக்கப்பட்ட அவர்களுடைய கண்கள் ஒளியடையும்படிக்கும் நாம் ஜெபிக்கலாம். ஆயினும், இப்படிப்பட்ட ஜெபங்கள் பெருமையினால் அல்ல, மிகுந்த மனத்தாழ்மையினால் ஏறெடுக்கப்பட வேண்டும். (லூக். 18:9-14) உண்மையான இராஜாவாக இருந்த தேவனை புறக்கணித்த அவிசுவாசமுள்ள இஸ்ரயேல் ஜாதிக்காக ஜெபங்களை ஏறெடுத்த சாமுயேல், நமக்கு முன் சிறந்த மாதிரியாக நிறுத்தப்படுகிறார். "நானும் உங்களுக்காக விண்ணப்பம் செய்யாதிருப்பேனாகில் கர்த்தருக்கு விரோதமாகப் பாவஞ்செய்கிறவனாயிருப்பேன்; அது எனக்குத் தூரமாயிருப்பதாக; நன்மையும் செவ்வையுமான வழியை நான் உங்களுக்குப் போதிப்பேன்" (1 சாமு. 12:23) என்று சாமுயேல் கூறினார்.

நம்முடைய எதிராளிகளுக்காக ஏன் ஜெபிக்க வேண்டும்? ஏனெனில், அகாபே அன்பின் உச்சக்கட்ட நிலையின் ஒருமாதிரியாக இக்காரியம் காணப்படுகிறது. "இவனை சிலுவையில் அறையும், சிலுவையில் அறையும்" என்று இயேசுவை கொல்ல சொன்ன ஜனங்களுக்காகவும் இயேசு பாடுபட்டு மரித்தார். (மாற். 15:13, 14) "அவனோ, முழங்காற்படியிட்டு: ஆண்டவரே, இவர்கள்மேல் இந்தப் பாவத்தைச் சுமத்தாதிரும் என்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான். இப்படிச் சொல்லி, நித்திரையடைந்தான்" (அப். 7:60) என்று ஸ்தேவானை கல்லெறியும் போது அவர் கதறினார். தன்னை அடிமையாக விற்றுப் போட்ட சகோதரர்களை யோசேப்பு மன்னித்து (ஆதி. 45:4-7) அவர்களை முத்தமிட்டு (வசனம்-15) கோசேன் என்ற செழிப்பான தேசத்தை அவர்கள் குடியிருக்கும்படி கொடுத்தார். (ஆதி. 46:34) பூமியின் வருங்கால நியாயாதிபதிகளாகவும், ஆசாரியர்களாகவும், இராஜாக்களாகவும் இருப்பதற்கு இன்று கிறிஸ்துவின் சீஷர்கள் தங்களை ஆயத்தப்படுத்திக் கொண்டால், (வெளி. 20:6; 1 கொரி. 6:2) இந்த பூமியின் மேல் இவர்கள் மிகுந்த அன்புள்ளவர்களும் எல்லா குறைகளையும் மன்னிக்கக்கூடிய மனநிலையை

முழுமையாக பெற்றிருக்க வேண்டும். கிறிஸ்தவ குணங்களில் மிகச் சிறந்தது இந்த அன்பே. (1 கொரி. 13:13)

அகாபே. அன்பின் உச்சக்கட்ட நிலையாகும். நம்மிடத்தில் வெளிப்படுத்தப்பட்ட தேவனுடைய அன்பு. ஒரு பலியின் அன்பாகும். அவர் நம்மை நேசிக்க வேண்டும் என்ற எந்த நிபந்தனையும் இல்லை. அல்லது தன்னுடைய நோக்கங்களில் எந்தவிதமான சுயநலமும் இல்லை. (ரோ. 5:18) கடமைக்காக செலுத்தப்படும் அன்பு - "நம்முடைய குடும்பங்களையும் நண்பர்களையும் உட்படுத்தும். ஆனால் அகாபே அன்பை பொருத்த வரைக்கும். நம்முடைய எதிராளிக்கு நம்முடைய அன்பை பெறுவதற்கு எந்தவிதமான உரிமையில்லாதபோதிலும் நாம் அவர்களை நேசிக்கிறோம். ஆம். "தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத் தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்." (யோவா. 3:16)

**2.அறுவடை வேலைக்காக ஜெபித்தல். மத்.9:37, லூக்.10:2**

"தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால், அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்." (மத். 9:37, 38) பிரதான அறுவடையாளராகிய நம்முடைய ஆண்டவராம் இயேசு. தம்முடைய சீஷர்களின் சிந்தையிலும். இருதயங்களிலும். முயற்சிகளிலும் தாம் செய்யக்கூடிய வேலையை மையப்படுத்த வேண்டும் என்று விரும்பினார். "தண்டில் சேவகம்பண்ணுகிற எவனும், தன்னைச் சேவகமெழுதிக்கொண்டவனுக்கு ஏற்றவனாயிருக்கும்படி, பிழைப்புக்கடுத்த அலுவல்களில் சிக்கிக்கொள்ளமாட்டான்" (2 தீமோ. 2:4) என்று உண்மையாக அறுவடை வேலையில் ஈடுபட்டுக் கொண்டு அதற்காக மனஉருக்கத்தோடு ஜெபிக்கக்கூடியவர்களுக்கு பவுல் கூறுகிறார்.

யூத அறுவடை வேலைகளில் இயேசுவின் நோக்கத்தை கவனிக்கலாம். "அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி," (மத். 9:36) தொலைந்துபோனவர்களைக் குறித்து அவர் எந்தவிதமான கோபத்தையோ. தீர்ப்பையோ வெளிப்படுத்தவில்லை. சில கிறிஸ்தவர்கள் தங்களுடைய மேட்டிமையினிமித்தம் அவிசுவாசிகளை கடிந்து கொண்டும், கண்டனம் செய்து கொண்டும் சுவிசேஷத்தை பிரசங்கிப்பதைக் காணலாம். ஆனால் நாமோ நம்முடைய ஆண்டவரைப் போல. சுவிசேஷ அறுவடை வேலைகளுக்காக ஜெபிக்கையில் குருடாக்கப்பட்ட ஜனக்கூட்டத்தை எண்ணி மனதுருக வேண்டியவர்களாய் இருக்கிறோம். இப்படிப்பட்ட அறுவடை வேலைகளுக்கு நம்முடைய ஜெபத்தினால் முழு ஆதரவளித்து முடிந்தவரையில் கிடைக்கும் வாய்ப்புகளை திறமையாக பயன்படுத்தி நம்முடைய வெளிச்சம் பிரகாசிக்கப்படுவதற்கு முயற்சி செய்வோம்.

**3. சகோதரர்களுக்கான ஜெபம். யாக்.5:14-18**

"உங்களில் ஒருவன் வியாதிப்பட்டால், அவன் சபையின் மூப்பர்களை வரவழைப்பானாக; அவர்கள் கர்த்தருடைய நாமத்தினாலே அவனுக்கு எண்ணெய் பூசி, அவனுக்காக ஜெபம்பண்ணக்கடவர்கள். அப்பொழுது விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்; கர்த்தர் அவனை எழுப்புவார்; அவன் பாவஞ்செய்தவனானால் அது அவனுக்கு மன்னிக்கப்படும். நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது. எலியா என்பவன் நம்மைப்போலப்பாடுள்ள மனுஷனாயிருந்தும், மழைபெய்யாதபடிக்குக் கருத்தாய் ஜெபம்பண்ணினான், அப்பொழுது மூன்றுவருஷமும் ஆறுமாதமும் பூமியின்மேல் மழை பெய்யவில்லை. மறுபடியும் ஜெபம்பண்ணினான், அப்பொழுது வானம் மழையைப் பொழிந்தது, பூமி தன் பலனைத் தந்தது." (யாக். 5:14-18)

"விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளிகளை இரட்சிக்கும்" யாக்கோபு உடல் ரீதியான வியாதியைக் குறித்து பேசுகிறார் என்று சிலர் தவறாக

எண்ணுகிறார்கள். 14-ம் வசனத்தில், பிணியாளி என்ற வார்த்தை (Strongs #770) ஆவிக்குரிய வியாதி அல்லது உடல் ரீதியான வியாதியை சூழ்நிலைக்கு ஏற்றவாறு பயன்படுத்தலாம். 1 கொரி. 8:12-ல் பயன்படுத்தப்பட்ட அதே வார்த்தை - "பலவீனமான மனசாட்சி" ரோ. 14:1 - "விசுவாசத்தில் பலவீனம்" அதைபோல "விசுவாசமுள்ள ஜெபம் பிணியாளியை இரட்சிக்கும்" என்ற வசனத்தில் சொல்லப்படும் பிணியாளி என்ற வார்த்தைக்கு சோர்வு அல்லது களைப்பு (Strongs #2577) என்று பொருள் கூறுகிறது. இதே வார்த்தை எபி. 12:3-ம் வசனத்தில் பயன்படுத்தப்பட்டுள்ளது. "ஆகையால் நீங்கள் இளைப்புள்ளவர்களாய் உங்கள் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, தமக்கு விரோதமாய்ப் பாவிகளால் செய்யப்பட்ட இவ்விதமான விபரீதங்களைச் சகித்த அவரையே நினைத்துக்கொள்ளுங்கள்."

ஆனால் யாக்கோபு இங்கு ஆவிக்குரிய வியாதியை பற்றியே பேசுகிறார். ஏனெனில், "நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம் பண்ணுங்கள்." இது உடல் ரீதியான வியாதியாக இருந்தால் பாவங்களுக்காக மன்னிப்பை கேட்கும்படி யாக்கோபு சொல்லியிருக்க வேண்டியதென்ன? ஏனெனில், உடல் ரீதியான வியாதிக்காக ஒருவரையொருவர் பாவமன்னிப்பு கேட்க வேண்டிய அவசியம் இல்லையே. (மத்.18:15; லூக். 17:3) இப்படிப்பட்ட பாவங்கள் தேவனிடத்தில் மட்டுமே அறிக்கையிடப்பட வேண்டும். (1 யோவா. 1:9) ஆயினும், பொதுவாக அனைவரும் அறிந்தபடி பாவங்கள் நடப்பிக்கப்பட்டிருந்தால் அதாவது ஆண்டவரோடு கொண்டிருக்கும் உறவு முறிக்கப்படுவதற்கு ஏதுவாக இருந்தால், நாம் மீண்டும் சகோதரரோடு ஒப்புரவாகுவதற்கு பொதுவாக மனம்வருந்தி பாவத்தை அறிக்கையிடுதல் அவசியம். (மத். 18:15-17; யாக். 5:19, 20)

இப்படிப்பட்ட சூழ்நிலைகளில் பாவத்தினால் வியாதிப்பட்டவர்கள் தங்களுடைய பாவத்தை உணர்ந்து, சபையில் உள்ள மூப்பர்களை அழைத்து குற்றங்களை அறிக்கையிட வேண்டும். அப்பொழுது சபையின் மூப்பர்கள் அவர்களை சோதனையிலிருந்து விடுவிக்க ஜெபிக்காமல், அநேக பாடங்களை அந்த அனுபவத்திலிருந்து கற்றுக் கொள்ளும்படியாக ஜெபிக்க வேண்டும். (எபி. 12:5-13) மேலும், அவர்களின் பாவமன்னிப்புக்காக மூப்பர்கள் ஜெபிக்க வேண்டும். (யாக். 5:15) இறுதியாக, அவர்களுக்குள் ஆவிக்குரிய கனிகள் வளர்ச்சியடையும்படியாக ஜெபிக்க வேண்டும். (கலா. 5:22, 23) ("அவனுக்கு எண்ணெய் பூசி") (யாக். 5:14) இங்கு எண்ணெய் பரிசுத்த ஆவியின் செயல்பாட்டை குறிக்கிறது. (2 கொரி. 1:21, 22; 1 யோவா. 2:27) "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும்" (எபி. 12:11) என்று பவுல் கற்பிக்கிறார்.

மூப்பர்கள் எப்பொழுதும் இப்படிப்பட்ட ஆவிக்குரிய சுகமளிக்கும் காரியங்களை மிகுந்த அன்போடும், இரக்கத்தோடும் நடப்பிப்பது மிக அவசியம். ஏனெனில், ஒருவரை சுகப்படுத்துவதினிமித்தம் பெருமை மற்றும் நியாயத்தீர்ப்பின் மேன்மையான உணர்வுகளை மூப்பர்கள் பெற்று விடக்கூடாது. அவ்வாறு பெற்றால், நன்மையை காட்டிலும் தீமையான விளைவுகளை சந்திக்க நேரிடும். ஆகவே, சகோதரர்களுக்காக ஜெபிப்பது மட்டுமே ஒரு மூப்பர்களின் பொறுப்பாக இருப்பதில்லை. ஒவ்வொருவருடைய சோதனைகளிலும், பிரச்சனைகளிலும் தேவன் அவர்களை பலப்படுத்தி ஊக்குவித்து, சகல அனுபவங்களையும் அவர்களுடைய நன்மைக்காக பெறுவதற்கு ஜெபிக்க வேண்டும். ஆவிக்குரிய வாழ்க்கையில் சோர்வுற்று தளர்ந்துபோன ஒவ்வொருவருக்கும் நம்முடைய ஜெபங்களும், உற்சாகமூட்டும் வார்த்தைகளும் அவர்களுக்கு புத்துணர்வை ஊட்டி, உற்சாகப்படுத்த வேண்டும். இதுவே நம்முடைய ஆண்டவர் ஒவ்வொரு புது சிருஷ்டிகளுக்கும் கொடுத்திருக்கும் விசேஷித்த பொறுப்பாகும். கிறிஸ்துவின் ஒவ்வொரு அங்கத்தினரும், ஒவ்வொருவருடைய வளர்ச்சியில் அன்போடு அக்கறை கொள்ளக்கூடியவர்களாய் இருக்கிறார்கள். (1 கொரி. 12:25, 26; எபி. 4:15, 16; 1 யோவா. 3:14-16) சில நேரங்களில் ஜெபத்தின் வழியாக மட்டுமே நாம் மற்றவர்களை ஊக்குவிக்க முடியும்.

**4. பரிசுத்த ஆவிக்காக ஜெபித்தல். லூக்.11:13**

"பொல்லாதவர்களாகிய நீங்கள் உங்கள் பிள்ளைகளுக்கு நல்ல ஈவுகளைக் கொடுக்க அறிந்திருக்கும்போது, பரமபிதாவானவர் தம்மிடத்தில் வேண்டிக் கொள்ளுகிறவர்களுக்குப் பரிசுத்த ஆவியைக் கொடுப்பது அதிக நிச்சயம் அல்லவா என்றார்." (லூக். 11:13), "உங்களில் தகப்பனாயிருக்கிற ஒருவனிடத்தில் மகன் அப்பங்கேட்டால், அவனுக்குக் கல்லைக் கொடுப்பானா? மீனைக் கேட்டால் மீனுக்குப் பதிலாய்ப் பாம்பைக் கொடுப்பானா?" (லூக்.11:11) என்று இயேசு கேட்கிறார். அன்பான பெற்றோர்கள் தங்களுடைய குழந்தைகளுக்கு ஏற்ற மாம்சத்திற்குரிய உணவை கொடுப்பதற்கு விருப்பம் உள்ளவர்களாக இருப்பது போல, நம்முடைய பரம பிதாவும், நம்முடைய ஆவிக்குரிய வாழ்க்கை வளர்ச்சியடைவதற்கு தேவையான ஆவிக்குரிய உணவுகளை தருவதற்கு அவர் மிகுந்த விருப்பம் உள்ளவராய் இருக்கிறார். அவர் கொடுக்கும் ஆவிக்குரிய உணவுகள், தேவனுடைய வார்த்தைகளை புரிந்து கொள்வதினிமித்தம் வெளிப்படும் அவருடைய பரிசுத்த ஆவியாய் இருக்கிறது.

அதிகமான பரிசுத்த ஆவியை தொடர்ந்து கேட்பதே ஒரு புது சிருஷ்டியின் கடமையாய் இருக்கிறது. இல்லாவிட்டால் அந்த புத்தியில்லாத கன்னிகைகளைப் போல, நம்மிடத்தில் பரிசுத்த ஆவி குறைவாகக் காணப்படும். (மத். 25:3, 8) அந்த உவமையில், புத்தியுள்ளவர்கள், புத்தியில்லாதவர்களைப் பார்த்து, "நீங்கள் கடையில் போய் விற்கிறவர்களிடத்தில் வாங்கிக் கொள்ளுங்கள்" என்று அறிவுரை கூறினார்கள் (அனுபவத்தின் வழியாக பரிசுத்த ஆவியின் வழிநடத்துதலை பெறுதல்) ஏனெனில், அந்நாள் வரைக்கும் புத்தியுள்ளவர்கள் தேவனுடைய பரிசுத்த ஆவியை இவ்வாறு பெற்றுக் கொண்டிருந்தார்கள். (ரோ. 8:9; கலா. 5:16, 25; எபே. 3:16-19; 5:18)

ஆயினும் நாம் தேவனுடைய ஆவிக்காக ஜெபித்தால் மட்டும் போதாது, தொடர்ந்து நாம் உண்மையோடு வேதாகமத்தை வாசித்து, ஆண்டவரையும் அவருடைய ஜனங்களையும் விசுவாசத்தோடு சேவிக்க வேண்டும். இல்லாவிட்டால் நாம் கிறிஸ்துவுக்குள் குழந்தைகளாக இருந்துவிடுவோம். தேவனுடைய திட்டத்திற்குரிய நம்முடைய அறிவோடு பரிசுத்த ஆவி இணைக்கப்படும் பொழுது, நாம் கிறிஸ்துவின் குணநலன்களில் அதிகமாக வளர்ச்சியடைய செய்யும். சத்திய வசனங்களை புரிந்து கொள்வதற்கும், அதை நம்முடைய வாழ்க்கையில் நடைமுறைபடுத்துவதற்கும், நாம் பெறக்கூடிய பரிசுத்த ஆவி அதிகமாக உதவி செய்யும். அப்பொழுது நம்முடைய ஆவிக்குரிய வளர்ச்சி சீராக அதிகரிக்கும். ஆகவே கிறிஸ்துவுக்குள் சீராக வளர்ச்சியடைவதற்கு நாம் பெற்ற ஆவியை அவித்துப்போட வேண்டாம் என்றும், (1 தெச. 5:19) அல்லது துக்கப்படுத்த வேண்டாம் என்றும், (எபே. 4:30) நமக்கு ஆலோசனை கூறப்படுகிறது. எனவே, நம்முடைய வாழ்க்கையில் தேவனுடைய பரிசுத்த ஆவியை அவித்துப் போடக்கூடிய எந்தவிதமான உலக இச்சைகள், சுயநலன்கள், மாம்சத்தின் சிற்றின்பங்கள் அனைத்தையும் எவ்வளவு விலை கொடுத்தாகிலும் நம்முடைய வாழ்க்கையிலிருந்து களைந்து போட வேண்டும்.

நம்முடைய பகுதியில் எந்தவிதமான முயற்சியும் இன்றி பரிசுத்த ஆவிக்காக ஜெபித்து நாம் மகிழலாம் என்பது கூடாத காரியம். மாறாக நாம் தேவனிடத்தில் பரிசுத்த ஆவிக்காக ஊக்கமாக ஜெபிக்கையில், 1. நாம் பெற்ற ஆவியை முற்றிலும் வெறியேற்றி, தேவன் கொடுக்கும் ஆவியை அதிகமாய் பெறுவதற்கு ஆயத்தப்பட வேண்டும். 2. தேவன் கொடுக்கும் ஆவிக்குரிய வழி நடத்துதலுக்கு நம்முடைய வாழ்க்கையில் முடிந்தவரைக்கும் நம்முடைய மாம்சத்தை அதற்கு கீழ்ப்படுத்த வேண்டும்.

சில நேரங்களில் சவாலான அனுபவங்களின் வழியாக ஆவிக்குரிய வளர்ச்சியடைவதற்கு ஆண்டவர் நமக்கு உதவி செய்யலாம். "எந்தச் சிட்சையும் தற்காலத்தில் சந்தோஷமாய்க் காணாமல் துக்கமாய்க் காணும்; ஆகிலும் பிற்காலத்தில் அதில் பழகினவர்களுக்கு அது நீதியாகிய சமாதான பலனைத் தரும். ஆகையினால், நெகிழ்ந்த கைகளையும் தளர்ந்த

முழங்கால்களையும் நீங்கள் திரும்ப நிமிர்த்தி, முடமாயிருக்கிறது பிசகிப்போகாமல் சொஸ்தமாகும்படிக்கு, உங்கள் பாதங்களுக்கு வழிகளைச் செவ்வைப்படுத்துங்கள்." (எபி. 12:11-13)

**5. அந்தரங்க ஜெபம். மத்.6:6**

தங்களுடைய நற்கிரியைகள் மற்றும் ஜெபங்களின் வழியாக பொது மக்களின் கவனத்தை ஈர்த்த மாய்மாலக்காரர்களின் வேஷத்தை இயேசு வெளியரங்கமாக்கினார். (மத். 6:5) இவர்கள் தேவனோடு பெறும் ஐக்கியத்திற்காக அல்ல. மனுஷருடைய புகழ்ச்சியை எதிர்பார்த்தார்கள். நம்முடைய கூடுகைகளிலும் மனுஷரை வசீகரப்படுத்தும் கவிதை நடைகளிலுள்ள கவர்ச்சிகரமான நீண்ட ஜெபங்களை தவிர்க்க வேண்டும். பிதாவினிடத்தில் ஜெபிப்பதற்கு இயேசு எப்போதும் தனிமையை விரும்பினார். (மாற். 1:35; லூக். 5:16) "நீயோ ஜெபம்பண்ணும்போது, உன் அறைவீட்டிற்குள் பிரவேசித்து, உன் கதவைப் பூட்டி, அந்தரங்கத்திலிருக்கிற உன் பிதாவை நோக்கி ஜெபம்பண்ணு; அப்பொழுது, அந்தரங்கத்தில் பார்க்கிற உன் பிதா வெளியரங்கமாய் உனக்குப் பலனளிப்பார்." (மத். 6:6)

நம்முடைய நம்பிக்கைகள், பயங்கள், கவலைகள் மற்றும் நம்முடைய இருதயத்தின் சகல பாரங்களையும் தேவனுடைய பாதத்தில் ஊற்றுவதற்கு ஜெபம் மட்டுமே ஒரு வாய்ப்பாக இருக்கிறது. தனிப்பட்ட ஜெபத்தில் மட்டுமே சிறந்த முறையில் நாம் இதை செயலாற்றலாம். அங்கு நம்முடைய தந்தையோடு தனித்து நம்முடைய உள்ளத்தின் ஆழத்தில் இருக்கும் சிந்தனைகளையும் பகிர்ந்து கொண்டு புது சிருஷ்டியாகிய நாம் வளர்வதற்கு ஏதுவான பலத்தையும், புத்துணர்வையும் வேண்டி பெற்றுக் கொள்ள முடியும். இதன் காரணமாகவே நம்முடைய ஆண்டவரும் தனித்து ஜெபித்தார். மன ரீதியாக இடைவிடாமல் ஒருநாள் முழுவதிலும் தேவனுடைய வழிநடத்துதலுக்காக நாம் ஜெபிக்கலாம். (1 தெச. 5:17) நெகேமியா இராஜாவுக்கு முன் நிற்கும்போது. தன்னுடைய சிந்தையில் இரகசியமாக தேவனிடத்தில் உதவி வேண்டி ஜெபித்தார். (நெகே. 2:4)

எல்லா ஜெபங்களும் அந்தரங்கமாக இருக்கக்கூடாது. மரணத்திலிருந்து லாசருவை இயேசு உயிர்பித்த போது, தந்தையிடம் வெளிப்படையாக ஜெபித்தார். தேவன் அவரை அனுப்பினார் என்பதை ஜனங்கள் அறிய வேண்டும் என்பதை அவருடைய நோக்கமாய் இருந்தது. (யோவா. 11:41, 42) தானியேலும் எல்லாரும் காணும்படியாக வெளிப்படையாக ஜெபித்தார். (தானி. 6:10) (மரண தீர்ப்பளிக்கும் புதிய பிரமாணம் பிறப்பிக்கப்பட்டிருந்த போதிலும்) யூதஜனங்களுக்கு முன் தேவன் மேல் விசுவாசத்தையும், தைரியத்தையும் கொண்டிருந்து ஒரு சிறப்பான மாதிரியை முன் வைப்பதே அவருடைய நோக்கமாய் இருந்தது. வெளிப்படையாக ஏறெடுக்கப்படும் ஜெபங்கள் நியாயமானதாக இருந்தாலும், தேவனோடு நாம் கொண்டிருந்த ஐக்கியத்தை நாம் பலப்படுத்தி நம்முடைய இருதயத்தின் சிந்தனைகள் அவரோடு இசைந்து இருப்பதற்கு அந்தரங்கமான ஜெபம் சிறந்ததாகும்.

**6. மீட்புக்காக ஜெபித்தல். மத்.6:13**

வியாதிகளிலிருந்தும், பண கஷ்டங்களிலிருந் தும், பிரச்சனைகளிலிருந்தும் தேவன் நம்மை மீட்க வேண்டும் என்று எதிர்பார்ப்பது இயல்பு. நம்முடைய தலையிலுள்ள முடிகள் எண்ணப்பட்டிருப்பதாக இயேசு வாக்களித்திருக்கிறார். தேவ ஜனங்கள் சார்ந்திருக்கக்கூடிய தேவனுடைய பாதுகாப்பைக் குறித்து தாவீது பேசினார். "நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்; என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர்." (சங். 32:7) இயேசுவுக்கு கையளிக்கப்பட்ட பரலோக சேனைகள் அவர் சொல்லும் வேலையை செய்ய காத்துக் கொண்டிருந்தது. அவரை இரட்சித்து கொள்ள இந்த சேனைகளுக்காக விண்ணப்பித்திருந்தால் நிச்சயமாக அவர்கள் வந்திருப்பார்கள். (மத். 26:53) ஆனாலும், அவர் அப்படி செய்யவில்லை.

புதிய சிருஷ்டி ஆவிக்குரிய பயமுறுத்துதலின் அபாயத்தில் அகப்படுகிறது. நம்முடைய மிகப் பெரிய எதிரி சாத்தான். ஆகவே அவன் அவ்வழியில் வந்தாலும் அதை உணர்ந்து எதிர்ப்பதற்கு தேவையான தெய்வீக வழிநடத்துதலை

பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், நம்முடைய பலமும், அறிவும் குறைவுள்ளது. இயல்பான மனுஷனை காட்டிலும் சாத்தான் மிகவும் வல்லமையும் ஞானமுள்ளவனுமாய் இருக்கிறான். ஆகவே அவனுடைய தந்திரங்களை மேற்கொள்ளுவதற்கு நிச்சயமாகவே நமக்கு தெய்வீக உதவி தேவை.

ஆகவே, "நீங்கள் பிசாசின் தந்திரங்களோடு எதிர்த்து நிற்கத் திராணியுள்ளவர்களாகும்படி, தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தையும் தரித்துக்கொள்ளுங்கள். ஏனெனில், மாம்சத்தோடும் இரத்தத்தோடுமல்ல, துரைத்தனங்களோடும், அதிகாரங்களோடும், இப்பிரபஞ்சத்தின் அந்தகார லோகாதிபதிகளோடும், வானமண்டலங்களிலுள்ள பொல்லாத ஆவிகளின் சேனைகளோடும் நமக்குப் போராட்டம் உண்டு" (எபே. 6:11, 12) என்று பவுல் கூறுகிறார். கண்ணுக்குப் புலப்படாத வல்லமைகளோடு போர் செய்வதற்கும், தங்களுடைய ஆவிக்குரிய நிலையை காத்துக் கொள்வதற்கும் தேவன் இந்த சர்வாயுத வர்க்கங்களைக் கொடுத்திருக்கிறார். (எபே. 6:13-18) இதில் விசுவாசத்தின் கேடகம், இரட்சிப்பின் தலைச்சீரா, நீதி என்னும் மார்க்கவசம், ஆவியின் பட்டயம், சமாதானத்தின் நற்செய்தியை அறிவிக்கும் பாதரட்சைகள் மற்றும் சத்தியத்திற்கென்று நம்மை நாம் அர்ப்பணித்த பணியை அடையாளப்படுத்தும் நம்முடைய கச்சை அடங்கும். (எபே. 6:13-17) தேவனுடைய பிரசன்னத்தில் பிரவேசித்து அவருடைய வழிநடத்துதலுக்கு விண்ணப்பிப்பதற்கும் சிறப்புரிமையை இந்த சர்வாயுதவர்க்கத்தின் ஒரு பகுதியாகும். "எந்தச் சமயத்திலும் சகலவிதமான வேண்டுதலோடும் விண்ணப்பத்தோடும் ஆவியினாலே ஜெபம்பண்ணி,"(எபேசி. 6:18)

தேவன் கொடுத்த சர்வாயுதவர்க்கமும் நாம் ஏறெடுக்கக்கூடிய ஜெபங்களும் நம்மை ஆவிக்குரிய பயமுறுத்தல்களிலிருந்து பாதுகாக்கிறது. ஆயினும் வியாதிகளிலிருந்தும், பண கஷ்டங்களிலிருந்தும் மீட்கப்படுவதற்கு ஜெபிக்க வேண்டுமா? "சோதனைக்கு உட்படாதபடிக்கு விழித்திருந்து ஜெபியுங்கள்" (மத். 14:38) என்ற நம்முடைய இயேசுவின் எச்சரிப்பை நினைவு கூறுவோம். நாம் அளவுக்கு மீறி தகாதவைகளை புசித்து, குடித்து வியாதிபடும் பொழுது, தேவன் உங்களை சொஸ்தப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்கக் கூடாது. உங்கள் வரவுக்கு மிஞ்சி செலவு செய்துவிட்டு கடன்களை தேவன் அடைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. உங்கள் நண்பர்களோடு ஒரு அபாயமான இடத்திற்கு சுற்றுலா பயணம் செல்லும்போது, நடக்கும் அசம்பாவிதங்களிலிருந்து தேவன் உங்களை மீட்க வேண்டும் என்று எதிர்பார்க்கக்கூடாது. (யாக். 4:3)

"விழித்திருந்து ஜெபிக்கையில்" அநேக உபத்திரவங்களை நாம் தவிர்த்துக் கொள்ளலாம். ஆயினும், தேவ பக்தியாய் நடக்க விரும்பும் யாவரும் துன்பப்படுவார்கள். (2 தீமோ. 3:12) எரிகிற அக்கினி ஜுவாலையில் அந்த மூன்ற எபிரெயர்களும் தப்பித்துவிடாமல் தூக்கிப்போடப்பட்டார்கள். ஆயினும் அதற்கு பின் தேவன் அவர்களை விடுவித்தார். (தானி. 3:27) அப். பவுலும், எந்த உபத்திரவங்களிலிருந்தும் தப்பிக்கவில்லை. அவர் அடிக்கப்பட்டு, கல்லெறியப்பட்டு, திருடப்பட்டு, கப்பற்சேதங்களில் அகப்பட்டு, காவல்களில் வைக்கப்பட்டு, குளிரிலும், பசியிலும், தாகத்திலும், நிர்வாணத்திலும் அகப்பட்டு, கள்ளசகோதரர்களின் மோசங்களிலும் அகப்பட்டார். (2 கொரி. 11:23-27) இந்த உபத்திரவங்களில் பவுல் அகப்பட்டாலும், அதிலிருந்து பவுலை ஜீவனோடு தேவன் விடுவித்தார். "அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்" (சங். 91:15) என்று நாம் வாசிக்கிறோம். தேவனுடைய அனந்த ஞானத்தில் நமக்கு வரும் துன்பங்கள் நாம் நன்மையான வளர்ச்சியடையும் வரைக்கும் அனுமதிக்கிறார். "மேலும் காணப்படுகிறவைகளையல்ல, காணப்படாதவைகளை நோக்கியிருக்கிற நமக்கு, அதிசீக்கிரத்தில் நீங்கும் இலேசான நம்முடைய உபத்திரவம் மிகவும் அதிகமான நித்திய கனமகிமையை உண்டாக்குகிறது" (2 கொரி. 4:17) என்று பவுல் நம்மை ஊக்குவிக்கிறார்.

நாம் உபத்திரவத்திற்குள் அனுமதிக்கப்பட மாட்டோம் என்று தேவன் வாக்குத்தத்தம் செய்யவில்லை. மாறாக, ஏற்ற வேளையில் உபத்திரவத்திலிருந்து தப்பித்துக் கொள்ளும் போக்கை தம்முடைய பிள்ளைகளுக்கு உண்டு

பண்ணுவேன் என்று வாக்களிக்கிறார். (1 கொரி. 10:13) உபத்திரவத்தின் மத்தியிலும் நாம் கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதற்கு இருதயத்திற்கு உண்டான ஆறுதலையும் அவருடைய நீடித்த கிருபைகளையும் கட்டளையிடுகிறார். (2 கொரி. 4:6-18; 12:9, 10; ஏசா. 43:1, 2) பவுல் மற்றும் சீலா அடிக்கப்பட்டு காவலில் வைத்திருக்கப்படும்போது, தேவனை புகழ்ந்து பாடும் அளவுக்கு அவர்கள் மகிழ்ச்சி கொண்டிருந்த காரியம் இதற்கொரு சிறந்த எடுத்துக் காட்டாகும். தேவன் கொடுத்த ஆறுதலினிமித்தம் கிறிஸ்துவுக்காக பட்டபாடுகளின் மத்தியில் அவர்களால் மகிழ்ச்சியோடு களிக்கூற முடிந்தது.

ஆயினும் நம்முடைய வியாதிகள் பொருளாதார பற்றாக்குறைகள் போன்ற காரியங்களுக்காக ஏறெடுக்கப்படும் விண்ணப்பங்கள் பதிலளிக்கப்படும் என்று எதிர்பார்த்துவிடக்கூடாது. ஆயினும் நம்முடைய சோதனைகளின் மத்தியில் தேவன் தம்முடைய வார்த்தைகளின் மூலமாகவும், வாக்குத்தத்தங்களின் மூலமாகவும் நமக்கு ஆறுதலையும், உதவிகளையும், வழிநடத்துதலையும் கொடுத்து நம்மை ஊக்குவிக்கிறார். (1 பேது. 1:7; 1 யோவா. 5:4)

**7.மன்னிப்புக்காக ஜெபித்தல் லூக்.11:4**

"எங்கள் பாவங்களை எங்களுக்கு மன்னியும்" (லூக். 11:4) என்று இயேசு ஜெபிக்க கற்றுக் கொடுத்தார். மேலும், "நீங்கள் நின்று ஜெபம் பண்ணும்போது, ஒருவன் பேரில் உங்களுக்கு யாதொரு குறை உண்டாயிருக்குமானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதா உங்கள் தப்பிதங்களை உங்களுக்கு மன்னிக்கும்படி, அந்தக் குறையை அவனுக்கு மன்னியுங்கள். நீங்கள் மன்னியாதிருப்பீர்களானால், பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவும் உங்கள் தப்பிதங்களை மன்னியாதிருப்பார் என்றார்" (மாற். 11:25, 26) என்றும் அவர் கூறினார்.

நமக்கெதிராக குற்றம் செய்தவர்களின் பாவங்களை மன்னிக்க மனதில்லாமல், தேவனிடத்தில் நம்முடைய பாவங்களுக்காக மன்னிப்பு கேட்பது எவ்வளவு பரிதாபம். "இரக்கம் உள்ளவர்கள் பாக்கியவான்கள், அவர்கள் இரக்கம் பெறுவார்கள்" (மத். 5:7) இந்த குறிப்பை வலியுறுத்தும்படி இயேசு இரக்கமற்ற ஊழியக்காரன் பற்றின ஒரு உவமையை சொன்னார். (மத். 18:21-35)

நாம் திருப்பி செலுத்த முடியாத கடன்களை நம்முடைய பரலோக பிதா கிறிஸ்துவின் மூலமாக நமக்கு மன்னித்திருக்கிறார் - ஆதாமின் மரணத்தீர்ப்பு. இரக்கமற்ற ஊழியக்காரனைப் போல, நாமும் கொடூரமாக நடந்து, நம்முடைய சகோதரர்களுக்கு அவர்களின் பாவங்களை மன்னியாமல் போனால், நம்முடைய பரமபிதா நம்முடைய குற்றங்களை என்றும் மன்னிக்க மாட்டார்.

நம்முடைய தப்பிதங்களுக்கு நாம் குருடாக்கப்பட்டதினால் மேட்டிமை சிந்தை கொண்டு, தேவனிடத்தில் மன்னிப்பை கேட்காதவர்களின் நிலை பரிதாபமானது. (1 யோவா. 1:8) நம்முடைய பாவங்களை நாம் நன்கு உணர வேண்டும். அவைகளை இயேசுவின் உதவியினால் மேற்கொள்ள வேண்டும். (எபி. 4:15, 16) "நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்" (1 யோவா 1:9) என்று யோவான் கூறுகிறார். நாம் தேவனிடத்தில் நெருங்கி நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு அவைகளுக்காக மன்னிப்பை கோரி, இறுதியாக மற்றவர்களை மன்னிப்பதற்கான வல்லமையை விண்ணப்பிப்பதற்கு தேவன் இந்த ஜெபத்தை ஒரு முக்கிய கருவியாக கொடுத்திருக்கிறார்.

மற்றவர்களிடத்தில் நம்முடைய கோபம், கசப்பு, வைராக்கியம் போன்ற உணர்வுகளை வெளிப்படுத்தாமல் இரக்கம், அன்பு, பரிவு போன்ற காரியங்களை வெளிப்படுத்துவதே நாம் பிறருக்கு கொடுக்கக்கூடிய உண்மையான மன்னிப்பாகும். இப்படிப்பட்ட உண்மையான குணத்தை நமக்குள் வளர்ச்சியடைய செய்வதற்கு ஜெபத்தின் மூலம் தேவனுடைய உதவியை நாட வேண்டும்.

மாயவித்தைக்காரனாகிய சீமோன், பரிசுத்த ஆவியை பெற்றுக் கொள்வதற்கு அப்போஸ்தலரிடம் பணத்தைக் கொடுத்தான். "நீ கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறதாகக் காண்கிறேன் என்றான்" (அப். 8:23) என்று பேதுரு கூறினார். ஆனாலும், "ஆகையால் நீ உன் துர்க்குணத்தைவிட்டு மனந்திரும்பி, தேவனை

நோக்கி வேண்டிக்கொள்; ஒருவேளை உன் இருதயத்தின் எண்ணம் உனக்கு மன்னிக்கப்படலாம்" (வசனம்-22) என்று பேதுரு ஒரு தீர்வையும் கொடுத்தார். பேதுரு இரக்கமற்றவராக நடந்து கொள்ளவில்லை. மாறாக, அந்த பாவி மனம் திரும்புவதற்கு வாய்ப்பளித்து ஜெபத்தின் வழியாக தேவனிடத்தில் மன்னிப்பை வேண்டிக்கொள்ளும்படி கற்பித்தார்.

**நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும்-என்பதற்கான இறுதி சிந்தனைகள்**

**ஞானம்:** "உங்களில் ஒருவன் ஞானத்தில் குறைவுள்ளவனாயிருந்தால், யாவருக்கும் சம்பூரணமாய்க் கொடுக்கிறவரும் ஒருவரையும் கடிந்துகொள்ளாதவருமாகிய தேவனிடத்தில் கேட்கக்கடவன், அப்பொழுது அவனுக்குக் கொடுக்கப்படும்." (யாக். 1:5) சாலொமோன் ஞானத்தை விண்ணப்பித்தபோது, தேவன் மகிழ்ச்சியடைந்தார். (1 இரா. 3:9, 10) ஆகவே சாலொமோன் தேவனால் அருளப்பட்ட நீதிமொழிகள் என்னும் புத்தகத்தை எழுதினார்.

**விசுவாசம்:** "ஆனாலும் அவன் எவ்வளவாகிலும் சந்தேகப்படாமல் விசுவாசத்தோடே கேட்கக்கடவன்; சந்தேகப்படுகிறவன் காற்றினால் அடிபட்டு அலைகிற கடலின் அலைக்கு ஒப்பாயிருக்கிறான். அப்படிப்பட்ட மனுஷன் தான் கர்த்தரிடத்தில் எதையாகிலும் பெறலாமென்று நினையாதிருப்பானாக." (யாக். 1:6, 7; மத். 21:22) நாம் தேவனை நம்பவில்லை என்றால், அவர் நம்மை நம்பாமல் நம்முடைய ஜெபங்களுக்கு அவர் காது கேளாதவராய் இருப்பார்.

**தேவைகள்:** "அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார்" (மத். 6:8) என்று இயேசு கூறுகிறார். நம்முடைய தேவைகளுக்காக விண்ணப்பிக்க வேண்டும் என்று இயேசு சொல்லாமல், நம்முடைய தேவைகளை பிதா முன்னறிந்திருக்கிறார் என்று உறுதி கூறுகிறார். உண்மையில், "எங்களுக்கு வேண்டிய ஆகாரத்தை இன்று எங்களுக்குத் தாரும்" (மத். 6:11) என்று அவர் கூறுகையில் நம்முடைய போஜனத்தைக் குறித்தும், பானத்தை குறித்தும், உடைகளைக் குறித்தும் கவலைப்படுவதற்காக அவர் கூறாமல், (மத். 6:25-33) அவைகளை பரலோக தந்தை கொடுப்பார் என்ற விசுவாசத்தோடு நாம் ஜெபிக்கும்படி கற்பித்தார். நம்முடைய தேவைகளுக்காக (விருப்பங்களுக்காக அல்ல) தேவன் கொடுப்பார் என்று விசுவாசிக்க வேண்டும். (பிலி. 4:6)

நாம் வேலைக்கு செல்வதற்கு ஒரு வாகனம் தேவைப்பட்டால், தேவனிடத்தில் ஒரு நாலு சக்கர வாகனத்திற்காக விண்ணப்பிப்பது பாவமல்ல. ஆயினும், "உம்முடைய சித்தத்தின் படியே " என்று விண்ணப்பிப்பது நலமாயிருக்கும். (1 யோவா. 5:14; லூக். 22:42) ஒருவேலை இல்லாமல் குடும்பத்தை எவ்வாறு கவனிப்பது? "ஒருவன் தன் சொந்த ஜனங்களையும் விசேஷமாகத் தன் வீட்டாரையும் விசாரியாமற்போனால், அவன் விசுவாசத்தை மறுதலித்தவனும், அவிசுவாசியிலும் கெட்டவனுமாயிருப்பான்" (1 தீமோ. 5:8) என்று பவுல் கூறுகிறார்.

**சோதோமிலுள்ள நீதிமான்களை விடுவிப்பதற்காக ஆபிரகாம் ஏறெடுத்த விண்ணப்பத்தை, தேவன் நினைவு கூர்ந்தார். (ஆதி.19:29)**

"நீங்கள் சொஸ்தமடையும்படிக்கு, உங்கள் குற்றங்களை ஒருவருக்கொருவர் அறிக்கையிட்டு, ஒருவருக்காக ஒருவர் ஜெபம்பண்ணுங்கள். நீதிமான் செய்யும் ஊக்கமான வேண்டுதல் மிகவும்பெலனுள்ளதாயிருக்கிறது." (யாக். 5:16) தேவனுடைய சித்தங்களை ஏற்றுக் கொண்டதின் அடிப்படையில் நாம் தேவனிடத்தில் விண்ணப்பிக்கும் பொழுது, அது நியாயமானதாக அங்கீகரிக்கப்படும். நாம் தவறு செய்தால், நமக்கு தேவை என்று நாம் எண்ணி தேவனிடத்தில் விண்ணப்பித்த காரியத்தை அவர் கொடுக்காமல், நம்மை திருத்த முயற்சிப்பார். ஆயினும், "கேளுங்கள், அப்பொழுது உங்களுக்குக் கொடுக்கப்படும்; தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; தட்டுங்கள், அப்பொழுது உங்களுக்குத் திறக்கப்படும்;" (மத். 7:7) என்று இயேசு கூறுகிறார். நம்முடைய பிள்ளைகள் நம்மிடத்தில் காரியங்களைக் கேட்கும் வரைக்கும், நாம் காத்திருந்து அவர்களுக்கு கொடுப்பதுபோல, நாம் விண்ணப்பிக்கும் காரியங்களின் மகத்துவங்களை புரிந்து கொள்ளும்படிக்கு தேவனும் சில

பதில்களுக்கு தாமதமாய் இருக்கிறார். நாம் தேவனிடத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய அனைத்துக் காரியங்களையும் அவருக்கு முன் வைக்க வேண்டும் என்று எதிர்பார்க்கிறார். (நீதி. 3:6)

**மனித விருப்பங்கள்** - நாம் விரும்பக்கூடிய யாவற்றையும் தேவன் கொடுப்பதற்கு அவர் கிறிஸ்துமஸ் தாத்தா அல்ல. "நீங்கள் விண்ணப்பம்பண்ணியும், உங்கள் இச்சைகளை நிறைவேற்றும்படி செலவழிக்கவேண்டுமென்று தகாதவிதமாய் விண்ணப்பம்பண்ணுகிறபடியினால், பெற்றுக்கொள்ளாமலிருக்கிறீர்கள்" (யாக். 4:3) என்று யாக்கோபு நம்மை எச்சரிக்கின்றார்.

மீண்டுமாக பார்வையடையும்படிக்கு அப். பவுல், சரீரப்பிரகாரமான சுகத்திற்கு ஜெபிக்கவில்லையா? "அது என்னைவிட்டு நீங்கும்படிக்கு, நான் மூன்றுதரம் கர்த்தரிடத்தில் வேண்டிக்கொண்டேன். அதற்கு அவர்: என் கிருபை உனக்குப்போதும்; பலவீனத்திலே என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார். ஆகையால், கிறிஸ்துவின் வல்லமை என்மேல் தங்கும்படி, என் பலவீனங்களைக்குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மைபாராட்டுவேன். அந்தப்படி நான் பலவீனமாயிருக்கும்போதே பலமுள்ளவனாயிருக்கிறேன்; ஆகையால் கிறிஸ்துவினிமித்தம் எனக்கு வரும் பலவீனங்களிலும், நிந்தைகளிலும், நெருக்கங்களிலும், துன்பங்களிலும், இடுக்கண்களிலும் நான் பிரியப்படுகிறேன்." (2 கொரி. 12:8-10)

பவுலின் பலவீனமான மாம்சத்தில் ஆவிக்குரிய பலம் பூரணப்பட்டது. அவருடைய இருதயத்திற்குள் மேட்டிமையான சிந்தை மேற்கொள்வதை அந்த பலவீனம் தடுத்தது. மாறாக, கிறிஸ்தவ குணங்களில் வளர்ச்சியடைவதற்கு அந்த பலவீனம் அவரை தழுவியது. இந்த குறைபாடின்றி மேலும் அதிகமான ஊழியம் செய்திருக்கக்கூடும் என்று பவுல் எண்ணியிருக்கலாம். ஆயினும் தேவனுடைய சித்தத்தை அவர் மனப்பூர்வமாக ஏற்றுக்கொண்டார். ஆகவே நம்முடைய எல்லா விண்ணப்பங்களிலும் "உம்முடைய சித்தம் ஆகக்கடவது" (மத். 6:10) என்ற வார்த்தைகளை நாம் கேட்க வேண்டும். மேலும் சாதகமற்ற நமக்கு விருப்பம் இல்லாத அல்லது எதிர்பாராத எந்த ஒரு தேவனுடைய சித்தத்தையும் மனப்பூர்வமாய் ஏற்றுக் கொள்ளக்கூடிய மனநிலையை நாம் பெற்றிருக்க வேண்டும். (லூக். 22:42)

**ஆவிக்குரிய விண்ணப்பங்கள்** - ஞானம் (யாக். 1:5), பரிசுத்த ஆவி (மத். 7:11) மற்றும் சகோதரர்களின் ஆவிக்குரிய நலன் (யாக். 5:14-18) போன்ற ஆவிக்குரிய விண்ணப்பங்களை ஏறெடுப்பது ஏற்றதாய் இருக்கும்." நாம் எதையாகிலும் அவருடைய சித்தத்தின்படி கேட்டால், அவர் நமக்குச் செவிகொடுக்கிறாரென்பதே அவரைப் பற்றி நாம் கொண்டிருக்கிற தைரியம்." (1 யோவா. 5:14) நாம் எதற்காக ஜெபிக்க வேண்டும் என்று தேவன் எதிர்பார்க்கிறாரோ, அதற்காக மட்டுமே நாம் ஜெபிக்க வேண்டும். நாம் என்ன வேண்டிக்கொள்ள வேண்டும் என்பதை அவருடைய வார்த்தைகளிலிருந்து அறிந்து கொள்கிறோம் - அடிப்படையான ஆவிக்குரிய காரியங்கள்.

யோவான் 17-ம் அதிகாரத்தில் இயேசுவின் ஜெபம்



# சுயநலமற்ற ஓர் ஜெபம்

"இயேசு இவைகளைச் சொன்னபின்பு தம்முடைய கண்களை வானத்துக்கு ஏறெடுத்து" (யோவா. 17:1)

**Bill Dutka**

இயேசுவின் ஜெபத்தில் நம்முடைய கவனத்தை ஈர்க்கக்கூடிய ஒரு முக்கிய குணநலன் - முற்றிலும் சுயநலமற்றது. இயேசு தம்மை மகிமைப்படுத்தும் படியாக இந்த சம்பாஷணையை தம்முடைய பரலோக தந்தையிடம் துவங்குகிறார். ஆயினும் தேவனுடைய நாமம் மகிமை படவேண்டும் என்ற நோக்கத்திற் காகவே இயேசு இதை விரும்பினார். மனித குடும்பத்திற்கு மேல் எல்லா அதிகாரத்தையும் பரலோக பிதா தமக்கு கொடுத்திருப்பதை அவர் வெளிப்படுத்தினார். ஆயினும் தேவன், இயேசுவுக்கு தந்தவர்கள் மட்டுமே அவர்களுடைய உயிர்த் தெழுதலில் நித்திய ஜீவனைப் பெறுவார்கள்.

ஆ. சகோதரரே, நித்திய ஜீவன் - என்பதை குறித்து நம்முடைய சிந்தையில் என்னென்ன உணர்வுகள் நிரப்பப்படுகிறது! "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நித்தியஜீவனைப் பற்றிக்கொள்; அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய்; அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாயிருக்கிறாய்." (1 தீமோ. 6:12) தன்னிறைவு பெற்றவர்கள் நித்திய ஜீவனை பரிசாக பெறுவதற்கு வாய்ப்பில்லை. இதற்கு மிகுதியான கிரியைகளையும், அதிகமான தைரியமும், எல்லா காரியங்களிலும் கவனமும், நெருங்கிய சகோதர ஐக்கியமும், மனத்தாழ்மையுள்ள ஜெப வாழ்க்கையும் மிக அவசியம்.

நித்திய ஜீவனை நாம் எவ்வாறு பற்றிக்கொள்வது? அற்பமான முயற்சிகளினால் இவைகளை நாம் பெறமுடியாது. அவர் நம்மை பலப்படுத்தினால் மட்டுமே நாம் நல்ல போராட்டத்தைப் போராட முடியும். ஜீவனுள்ள தேவனுடைய குமாரனாகிய இயேசுவின் மேல் நாம் வைக்கும் விசுவாசத்தின் வழியாக நித்திய ஜீவனை பற்றிக் கொள்ளலாம். நித்திய ஜீவனைப் பெறுவதற்கு இதுவே வழி. நம்முடைய ஆண்டவராம் இயேசுவே மேசியா என்ற நம்பிக்கையில் நம்முடைய விசுவாசத்தை வளர்ச்சியடைவதற்கு எப்பொழுதும் உறுதுணையாயிருக்கிறது. ஆயினும் இந்த பூமியிலுள்ள வெகு சிலரே மேசியாவின் வல்லமையை உண்மையான இருதயத்தோடு ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள்.

"இயேசு அவளை நோக்கி: நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்;" (யோவா. 11:25) என்று இயேசு கேட்கிறார். தாமதமின்றி ஆம்! அல்லது ஆமென் என்று நாம் பதிலளிக்கிறோம். பரலோக பிதாவையும் அவருடைய ஒரே பேறான குமாரனையும் விசுவாசிப்பவர்களுக்கு நித்திய ஜீவன் அளிப்பதாக இவ்வசனம் வாக்களிக்கிறது.

**தேவனை மகிமைப்படுத்தல்**

தேவனுடைய ஜனங்களுக்கு நித்திய ஜீவனை அளித்த பின் அவர்கள் என்ன செய்வார்கள்? வசனங்களில் பூமிக்குரிய இராஜ்யத்தில் வாக்குத்தத்தங்கள் நிரப்பப்பட்டிருப்பதைக் காணலாம். இயேசு மரித்த பின் அவர் தம்முடைய சீஷர்களுக்கு காட்சியளித்த போது, "ஆண்டவரே, இக்காலத்திலா ராஜ்யத்தை இஸ்ரவேலுக்குத் திரும்பக் கொடுப்பீர் என்று கேட்டார்கள்" (அப். 1:6) என்று இயேசுவிடம் கேட்டார்கள். இதுவே தீர்க்கதரிசிகளும், முற்பிதாக்களும், விசுவாசமுள்ள இஸ்ரயேலர்களும், உண்மையான இயேசுவின் சீஷர்களும் கொண்டிருந்த நம்பிக்கையாயிருந்தது. "உம்முடைய இராஜ்யம் வருவதாக, உம்முடைய சித்தம் பரலோகத்தில் செய்யப்படுவதுபோல, பூமியில் செய்யப்படுவதாக" என்று நாமும் ஜெபிக்கிறோம். இராஜ்யத்தில் இந்த முழு உலகத்தில் மனுக்குலத்தின் இருதயத்தில் நீதியை ஸ்தாபிப்பதற்கு தேவனுடைய பிரமாணங்களை ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு கற்றுக் கொடுத்ததை நம்முடைய மனக்கண்களுக்கு

முன்பாக சாட்சியாக காண்கிறோம். (மத். 8:11) தேவனோடு கூட எப்பொழுதும் நடந்து அவர் கொடுக்கும் சத்தயமாகிய ஜீவ தண்ணீரை அதிகமாக பருகும்போது, அவருடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களின் ஞானத்தையும், சிறப்பையும் அதிகமதிகமாக கண்டுணரலாம். பழைய ஏற்பாட்டின் விசுவாச வீரர்கள் பல சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டு, "வேறுசிலர் நிந்தைகளையும் அடிகளையும் கட்டுகளையும் காவலையும் அநுபவித்தார்கள்; கல்லெறியுண்டார்கள், வாளால் அறுப்புண்டார்கள், பரீட்சைபார்க்கப்பட்டார்கள், பட்டயத்தினாலே வெட்டப்பட்டு மரித்தார்கள், செம்மறியாட்டுத் தோல்களையும் வெள்ளாட்டுத் தோல்களையும் போர்த்துக்கொண்டு திரிந்து, குறைவையும் உபத்திரவத்தையும் துன்பத்தையும் அநுபவித்தார்கள்; உலகம் அவர்களுக்குப் பாத்திரமாயிருக்கவில்லை; அவர்கள் வனாந்தரங்களிலேயும் மலைகளிலேயும் குகைகளிலேயும் பூமியின் வெடிப்புகளிலேயும் சிதறுண்டு அலைந்தார்கள். இவர்களெல்லாரும் விசுவாசத்தினாலே நற்சாட்சிபெற்றும்; வாக்குத்தத்தம்பண்ணப்பட்டதை அடையாமற்போனார்கள்." (எபி. 11:36-39)

பிதாவாகிய தேவன் இந்த மனுகுலத்தின் மேல். ஆட்சி பொறுப்பை கிறிஸ்துவுக்கும், அவருடைய விசுவாசமுள்ள சபைக்கும் வாக்களித்திருக்கிறார். இந்த யுகத்தில் விசுவாசத்தோடு இயேசுவை பின்பற்றக்கூடியவர்களுக்கு வரக்கூடிய மேசியாவின் யுகத்தில் மனுக்குலத்தை தேவனோடு ஒப்புரவாக்குவதற்கான வாய்ப்பைப் பெறுவார்கள். ஆகவே இடைக்காலத்தில் உள்ள சுவிசேஷ யுகம் - இயேசுவின் மேல் விசுவாசமுள்ள சீஷர்களை தேர்வு செய்து, பயிற்சியளித்து, கிறிஸ்துவின் மணவாட்டியாக முழுமையடைய செய்கிறது. இவர்களின் விசுவாசத்திற்குரிய பரிசாக மணவாளனும், மணவாட்டியும் இணைந்து இந்த மனுக்குலத்தை தேவனுடைய பிள்ளைகளாக மாற்றுவார்கள். இந்த மனுக்குலம் சிந்தையிலும், சரீரத்திலும் பூரணப்படும்போது, தேவனுடைய சித்தத்தை நிறைவேற்றுவார்கள்.

சபையில் இந்த பொறுப்பை பவுல் 1 கொரி. 6:2-ல் உறுதிபடுத்துகிறார். "பரிசுத்தவான்கள் உலகத்தை நியாயந்தீர்ப்பார்களென்று அறியீர்களா? உலகம் உங்களால் நியாயந்தீர்க்கப்படுவதாயிருக்க, அற்ப வழக்குகளைத் தீர்க்க நீங்கள் அபாத்திரரா?" தேவனுடைய திட்டத்தை விசுவாசத்தோடு செய்து முடித்தால், இந்த உலகத்தை நியாயம் தீர்க்கக்கூடிய பொறுப்பை பரிசாக பெறுவோம். ஒருவரை ஜீவனுக்கோ அல்லது மரணத்திற்கோ தீர்ப்பளிப்பது நியாயந்தீர்ப்பதற்கான பொருளல்ல. மாறாக, ஆதாமின் பாவத்தில் பிறந்த பிள்ளைகளை சீர்பொருந்த உதவி செய்து மரண நிலையிலிருந்து உயர்த்தி, அன்போடும், இரக்கத்தோடும், கிருபையோடும் தேவனோடு நீதியில் இசைந்திருக்கும்படி வழிநடத்துவதே நியாயத்தீர்ப்பாகும். அனைவரும் நீதியின் பாதையில் நடக்ககூடிய முழு வாழ்க்கை பெற்றபின் ஒருவர் நித்திய ஜீவனை பெறுவதும் அல்லது நித்திய மரணத்தை பெறுவதும், ஆயிரவருட ஆட்சியின் முடிவில் இறுதி தீர்ப்பாக கொடுக்கப்படும்.

"அவர்களுடைய கண்ணீர் யாவையும் தேவன் துடைப்பார்; இனி மரணமுமில்லை, துக்கமுமில்லை, அலறுதலுமில்லை, வருத்தமுமில்லை, முந்தினவைகள் ஒழிந்துபோயின என்று விளம்பினது" (வெளி. 21:4) என்று கூறப்படுகிறது. அப்பொழுது தேவன் ஜாதிகளை இனி ஒருபோதும் மோசம் போக்காதபடி சாத்தானை முழுமையாக கட்டிவிடுவார்.

"இரட்சிக்கப்படுகிற ஜனங்கள் அதின் வெளிச்சத்திலே நடப்பார்கள். பூமியின் ராஜாக்கள் தங்கள் மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். அங்கே இராக்காலம் இல்லாதபடியால், அதின் வாசல்கள் பகலில் அடைக்கப்படுவதே இல்லை. உலகத்தாருடைய மகிமையையும் கனத்தையும் அதற்குள்ளே கொண்டுவருவார்கள். தீட்டுள்ளதும் அருவருப்பையும் பொய்யையும் நடப்பிக்கிறதுமாகிய ஒன்றும் அதில் பிரவேசிப்பதில்லை; ஆட்டுக்குட்டியானவரின் ஜீவபுஸ்தகத்தில் எழுதப்பட்டவர்கள் மாத்திரம் அதில் பிரவேசிப்பார்கள்" (வெளி. 21:24-27) என்று யோவான் கூறுகிறார்.

இப்படிப்பட்ட அருமையான சூழ்நிலைகளுக்காக நித்தமும் நாம் ஜெபிக்கிறோம். "உம்முடைய

ராஜ்யம் வருவதாக; உம்முடைய சித்தம் பரமண்டலத்திலே செய்யப்படுகிறதுபோலப் பூமியிலேயும் செய்யப்படுவதாக." (மத். 6:10) தேவனுடைய இராஜ்யம் வந்துவிட்டதா? அவருடைய திட்டம் பூமியில் செய்யப்படுகிறதா? இல்லை. அவருடைய சித்தம் இன்னும் நடைபெறவில்லை. ஆனால் வெகு சீக்கிரத்தில் இந்த பூமியில் ஒழுங்கை ஸ்தாபிப்பதற்கு மகிமையின் ஆண்டவர் தம்முடைய பரிசுத்தவான்களோடு வெளிப்படுவார்.

**பக்தியுள்ள ஒரு வாழ்க்கை**

ஆண்டவருடைய அடிச்சுவடுகளை விசுவாசத்தோடு பின்பற்றக்கூடியவர்களுக்கு இந்த பூமியை மீண்டும் தேவனுடைய ஒழுங்குக்கு சீர்படுத்தக்கூடிய பொறுப்பு பரிசாக அளிக்கப்படுகிறது. இயேசுவின் வாழ்க்கை முழுமையாக கீழ்ப்படிதலுக்கு ஒப்புக் கொடுக்கப்பட்டது. இந்த கீழ்ப்படிதலினால் இயேசு தேவனை இந்த பூமியின் மேல் மகிமைப்படுத்தினார். "பூமியிலே நான் உம்மை மகிமைப்படுத்தினேன்; நான் செய்யும்படி நீர் எனக்கு நியமித்த கிரியையைச் செய்துமுடித்தேன்." (யோவா. 17:4)

பரலோக பிதாவின் சித்தத்திற்கு அவருடைய முழுமையான ஒருங்கிணைப்பு எல்லா வசனங்களையும் சிந்தைக்கு கொண்டுவருகிறது. "என் சித்தத்தின்படியல்ல, என்னை அனுப்பினவருடைய சித்தத்தின்படி செய்யவே நான் வானத்திலிருந்திறங்கிவந்தேன்." (யோவா. 6:38) இயேசு தம்முடைய சொந்த விருப்பத்தை முற்றிலுமாய் புறக்கணித்து தேவனுடைய திட்டங்களை மட்டுமே நிறைவேற்றுவதை நோக்கமாய் கொண்டிருந்தார். அவருடைய விசுவாசத்தின் ஆதாரமானது, பரிசுத்த ஆவியினால் நம்மை வழிநடத்தி, பாதுகாத்து, சுத்திகரிக்கிறது. அவருடைய வாழ்க்கை ஒரு பலியின் ஜீவியமாக இருந்தது.

சாத்தானை போல, இயேசு எப்பொழுதும் பரலோக பிதாவின் அதிகாரத்தைப் பெறுவதற்கு முயற்சிக்கவில்லை. பவுல் இதை குறித்து மிகத் தெளிவாக, பிலி. 2:6-8-ல் கூறுகிறார். "அவர் தேவனுடைய ரூபமாயிருந்தும், தேவனுக்குச் சமமாயிருப்பதைக் கொள்ளையாடின பொருளாக எண்ணாமல், தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து, மனுஷர் சாயலானார். அவர் மனுஷரூபமாய்க் காணப்பட்டு, மரணபரியந்தம், அதாவது சிலுவையின் மரணபரியந்தமும் கீழ்ப்படிந்தவராகி, தம்மைத்தாமே தாழ்த்தினார்."

பரலோக பிதாவின் சித்தத்திற்கு உடன்பாடாக இருக்கும் எந்த ஒரு காரியத்திற்கும் தம்மை விலக்கிக் காத்துக் கொண்டு பரலோக பிரகாரத்தை விட்டிறங்கி, பூரண மனுஷனாக தம்மை தாழ்த்தி, சிலுவையின் மரணபரியந்தம் தாழ்மையோடு சகல அவமானங்களையும் சகித்தார். இம்மாதிரியான குணநலன் விசுவாசத்தின் முத்திரையாக ஒவ்வொரு தேவனுடைய ஜனங்களின் இருதயங்களிலும் பதிய வேண்டும்.

**வல்லமைக்கான விருப்பம்**

சாத்தானுடைய எண்ணங்களைக் குறித்து, ஏசாயா தீர்க்கதரிசி, நமக்கு ஒரு சிறிய கண்ணோட்டத்தைக் கொடுக்கிறார். அவனுக்குள் இருந்த இறுமாப்பான சிந்தை உன்னதமானவருக்கு ஒப்பிடும்படியான விருப்பத்தை அவனுக்குள் ஏற்படுத்தியது. அடிப்படையாக சாத்தானுடைய எண்ணம் அதிகமான வல்லமையை பெறுவதாகவே இருந்தது. களிமண்ணுக்கு குயவன் மேல் வல்லமை இருந்தது என்று அவனால் எப்படி சிந்திக்க முடியும்? வல்லமை! வல்லமை கெடுத்தது.

முழுமையான வல்லமை முழுமையாக கெடுத்தது. சாத்தான் இந்த உலக மனுக்குலத்தை முழுமையாகக் கட்டுப்படுத்தி, அவர்களை கீழ்ப்படியாமை என்னும் பாதையில் வழிநடத்தி, மரணத்தை சுதந்தரிக்கும்படி செய்தான்.

இயேசுவின் ஊழியத்தின் துவக்கத்தில் சாத்தான் அவரை சோதிக்கும்படி உட்பட்டான். நாற்பது நாள் முடிந்த பின்பு, "அவர்களைப்போல நீங்கள் செய்யாதிருங்கள்; உங்கள் பிதாவை நோக்கி நீங்கள் வேண்டிக் கொள்ளுகிறதற்கு முன்னமே உங்களுக்கு இன்னது தேவை என்று அவர் அறிந்திருக்கிறார். நீங்கள் ஜெபம்பண்ணவேண்டிய விதமாவது: பரமண்டலங்களிலிருக்கிற எங்கள் பிதாவே, உம்முடைய நாமம் பரிசுத்தப்படுவதாக " (மத். 6:8, 9) என்று மத்தேயு கூறுகிறார்.

**பலியின் ஜீவியம்**

இதற்கு முரண்பாடாக யோவான் 17-ம் அதிகாரத்தில் பரலோக பிதாவினிடத்தில் இயேசு ஏறெடுத்த ஜெபத்தில், - பிதாவின் சித்தத்தை தம்முடைய சித்தமாக ஏற்று, மற்ற எல்லாவற்றையும் தாழ்மையோடு பலிசெலுத்தும் நோக்கத்தோடு விண்ணப்பத்தை ஏறெடுப்பதைக் காணலாம். அவருடைய ஜெபங்கள் பயனற்றதாக இருக்கவில்லை. "நான் அவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; உலகத்துக்காக வேண்டிக்கொள்ளாமல், நீர் எனக்குத் தந்தவர்களுக்காக வேண்டிக்கொள்ளுகிறேன்; அவர்கள் உம்முடையவர்களாயிருக்கிறார்களே. என்னுடையவைகள் யாவும் உம்முடையவைகள், உம்முடையவைகள் என்னுடையவைகள்; அவர்களில் நான் மகிமைப்பட்டிருக்கிறேன். நான் இனி உலகத்திலிரேன், இவர்கள் உலகத்திலிருக்கிறார்கள்; நான் உம்மிடத்திற்கு வருகிறேன். பரிசுத்த பிதாவே, நீர் எனக்குத் தந்தவர்கள் நம்மைப்போல ஒன்றாயிருக்கும்படிக்கு, நீர் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொள்ளும். நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்; நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக் கொண்டுவந்தேன்; வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின் மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை." (யோவா. 17:9-12)

அவர் தம்மை மிக உயர்ந்த நிலைக்கு உயர்த்துவதற்கு விண்ணப்பிக்காமல், அவர் முன்பிருந்த நிலைக்கே உயர்த்தும்படி விண்ணப்பம் பண்ணினார். "இப்பொழுதிருக்கிற பொல்லாத பிரபஞ்சத்திலிருந்து" தேவன் அவருக்குக் கொடுத்தவர்களைக் குறித்த கவலை அவருக்குள் அதிகம் காணப்பட்டது. அவர்களுக்குத் தேவையான பாதுகாப்பையும், வழிநடத்துதலையும் குறித்து வேண்டினார்.

எவ்வளவு சுயநலமற்ற காரியம்! இவ்வசனங்களிலிருந்து நாம் எவ்வளவாக ஊக்குவிக்கப்படுகிறோம். இவர்கள் ஜெபத்தினால் இந்த தீமையான நாட்களிலிருந்து நாம் பாதுகாக்கப்படுவதற்கு விசேஷித்த சிறப்புரிமை பெற்றிருக்கிறோம். "இருளின் அதிகாரத்தினின்று நம்மை விடுதலையாக்கி, தமது அன்பின் குமாரனுடைய ராஜ்யத்திற்கு உட்படுத்தினவருமாயிருக்கிற பிதாவை ஸ்தோத்திரிக்கிறோம். (குமாரனாகிய) அவருக்குள், அவருடைய இரத்தத்தினாலே, பாவமன்னிப்பாகிய மீட்பு நமக்கு உண்டாயிருக்கிறது." (கொலோ. 1:13, 14) இப்படியாக நாம் தேவனுடைய பாதுகாப்பையும், வழிநடத்துதலையும், கட்டளைகளையும் பெற்றிருக்கிறோம் என்பதற்கு உத்தரவாதம் பெற்றிருக்கிறோம். இக்காரியங்கள் நமக்கு எவ்வளவு ஆறுதலையும், தேறுதலையும் நமக்குக் கொடுக்கிறது.

**இருளிலிருந்து மீட்கப்படுதல்**

இருளின் இராஜ்யத்திலிருந்து தேவன் தம்மை எவ்வாறு மீட்டெடுத்தார்? போராட்டங்களிலிருந்து மட்டுமே அவர் நம்மை விடுவித்ததில்லை. "நீர் அவர்களை உலகத்திலிருந்து எடுத்துக் கொள்ளும்படி நான் வேண்டிக்கொள்ளாமல், நீர் அவர்களைத் தீமையினின்று காக்கும்படி வேண்டிக்கொள்ளுகிறேன்" (யோவா. 17:15) என்று இயேசு கூறுகிறார். இங்கு தெளிவான குறிப்பை காணலாம். இந்த உலகத்தை விட்டும், அதின் எல்லா விதமான நிகழ்ச்சிகளிலிருந்து தப்பி ஓடக்கூடிய முயற்சிகள் இயேசுவின் ஜெபத்திற்கு முரண்பாடாய் இருக்கும். நாம் ஒரு துறவியைப் போல மடத்தில் வாழ வேண்டும் என்று பொருளல்ல, மாறாக நம்முடைய ஒளி இந்த உலகத்தின் மத்தியில் பிரகாசிக்க வேண்டும்.

"இவ்விதமாய், மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக்கடவது." (மத். 5:16) ஆம், அன்பானவர்களே, சுவிசேஷ யுகத்தில் நம்முடைய வெளிச்சம் பிரகாசிப்பதற்காக கிடைக்கப்படும் வாய்ப்புகள் நாம் பெற்றிருக்கும் சிறப்புரிமை ஆகும். தேவனை மகிமைப்படுத்த இது பூமிக்குரிய வாய்ப்பாக இருக்கிறது.

**அவர்கள் உம்முடையவர்கள் :**

பரலோக பிதாவும் ஆண்டவராம் இயேசு கிறிஸ்துவும், தேவ பிள்ளைகளை பராமரித்து ஆதரிக்கக்கூடிய காரியங்களை சகோ. ஸ்பர்கியான் (Spurgeon) தன்னுடைய பிரசங்கத்தில் விவரிக்கிறார். இயேசு இந்த உலகத்திற்காக ஜெபிக்காமல், தம்முடைய சீஷர்களுக்காக மட்டும் ஜெபிப்பதை அவர் விவரிக்கும்போது,

"அவர்கள் உம்முடையவர்கள் - இவர்கள் பிதாவினுடையவர்கள் ஆனதால், இயேசுவுக்கு நெருக்கமானவர்கள் என்று பொருள்படுகிறது. ஆகவே, - நான் இந்த உலகத்திற்காக வேண்டிக்கொள்ளாமல் நீர் எனக்கு தந்தவர்களுக்காக வேண்டிக் கொள்கிறேன் என்று இயேசு கூறினார்" "----------" என்றும் இயேசு சொல்லியிருக்கலாம் என்று சிந்திப்பதற்கு வாய்ப்புண்டு. இவ்வார்த்தை உண்மையாக இருந்தாலும், இயேசு ஏறெடுத்த விண்ணப்பத்தில் அவருடைய இருதயத்தின் நோக்கம் மிக அழகாக எடுத்து காட்டப்படுகிறது. "நாம் தேவனுடையவர்களாக இருப்பதினால், இயேசு நம்மை அதிகம் நேசிக்கிறார். ஆகவே, நமக்காக கிருபாசனத்தண்டையில், இயேசு ஒவ்வொரு முறையும் முழு உணர்வோடு நமக்காக பரிந்து பேசுகிறார்."

ஆம், அன்பானவர்களே, நாம் பரலோக பிதாவுக்கு மிகவும் நெருக்கமானவர்கள். அவர் நம்மை அதிகமாக நேசித்து, அவருடைய திட்டங்களின் நோக்கங்களையும் அவர் நம்மோடு பகிர்ந்து கொண்டு, அவருடைய குமாரனுடைய அடிச்சுவடுகளை பின்பற்றும்படி அழைத்திருக்கிறார். ஆகவே நாமும் அவருடைய குமாரனாகிய இயேசுவை போல அவருடைய சித்தத்தை செய்து இந்த பூமியின் மேல் பூமியை மகிமைப்படுத்தி பிதாவின் குமாரனும் ஒருமித்து இருப்பதை போல, நம்முடைய சிந்தையிலும், சித்தத்திலும் அவர்களோடு ஒருமித்திருப்போமாக.

அன்பானவர்களே, இந்த ஒரு தரிசனத்தை நம்முடைய இருதயங்களிலும், சிந்தைகளிலும் பதிய வைப்பவர்களாக நம்மை அழைப்பவருக்கு முடிவுபரியந்தம் விசுவாசத்தோடு காணப்படும்படியாக அப்.பவுலை போல, இக்காலத்து பூமிக்குரிய காரியங்கள் அனைத்தையும் அற்பமும், குப்பையுமாக எண்ணி நம்மை அழைத்தவருடைய சித்தத்தை தொடர்ந்து நிறைவேற்றுவோமாக. ஆமென்.

**தீர்க்கதரிசனத்தில் இன்று**

# போப் மார்க்கத்தின் மாற்றம்

"தீர்க்கதரிசிகளுடைய இரத்தமும் பரிசுத்தவான்களுடைய இரத்தமும் பூமியில் கொல்லப்பட்ட அனைவருடைய இரத்தமும் அவளிடத்தில் காணப்பட்டது என்று விளம்பினான்." வெளி. 18:24

போப் பெனிட் அவர்கள், அவருடைய உடல் மற்றும் மனரீதியான காரணங்களைக்கூறி இராஜினாமாவை அறிவித்தபோது, கத்தோலிக்க திருச்சபை ஸ்தம்பித்துப்போனது. 700 வருடங்களுக்குள் தானாகவே இராஜினாமா செய்த முதல் போப் இவர்தான். கத்தோலிக்க மக்களின் வாழ்வில் குடியேறிக் கொண்டிருந்த அர்த்தமற்ற எண்ணங்களை மாற்றமுடியும் என்ற நம்பிக்கையில்தான் அவர் அந்த பதவி ஏற்றார் என்று "நியுயார்க் டைம்" என்ற பத்திரிக்கையின் கட்டுரை ஒன்று கூறுகிறது. அவருடைய பல ஆதரவாளர்கள் திருச்சபை எதிர்பார்த்திருந்த எழுச்சியை அவர் கொண்டுவர தவறிவிட்டார் என்று கூறுகின்றனர். அவருடைய ஆட்சி சபையின் உருவத்தை இன்னும் சீர்குலைய செய்தது என்று விமர்சகர் கூறுகின்றனர். எடுத்துகாட்டாக, அவர் ஆளுகையின்போது, கத்தோலிக்க கிறிஸ்தவ குருமார்கள் இடையில் நடந்த பாலின ஊழல்கள், இலத்தீன் மொழி சார்ந்த சமய சடங்குகளை மறுபடியும் கொண்டுவருவதில் ஏற்பட்ட தோல்வி வெளியரங்கமாய் இஸ்லாமை ஒரு மதசார்ந்த தத்துவ ஞான சாஸ்திரமாய் ஒப்புக்கொண்டது போலாகும்.

சில கத்தோலிக்க வல்லுநர் பெனிட்டின் இந்த இராஜினாமாவை அடுத்து வரக்கூடிய போப்புகளின் முடிவுகளை வலுவிழக்கச் செய்யும் என்றும், விமர்சகர்கள் மேல் விவாதமாகிய - "சபையில் நடக்கும் எல்லா பிரச்சனைகளுக்கும் போப் தனிப்பட்ட முறையில் பொறுப்பாவார்" என்ற கூற்றும் வலுவடையும் என குறிப்பிடுகிறது.

## போப் மரியாதையில் சில மாற்றங்கள்

கத்தோலிக்க திருச்சபை மீது இன்னும் போப்புக்கு முழு அதிகாரம் இருந்தாலும், முன்பு இருந்ததுபோல் வரம்பு மீறின அதிகாரம், வாட்டிகன் தலைநகரில் இப்பொழுது இல்லை என்று சமீபகால நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகிறது. சட்டங்கள் மீறுவதற்கான எந்தவித தண்டனையும் இப்பொழுது போப்பால் வழங்க முடியாது.

பிப்ரவரி 2013, ஒரு அமைப்பை நடத்தும் திறன் அவரிடம் இல்லை என்பது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. எடுத்துகாட்டாக, பெனிட்டினிடம் வேலை செய்த ஒருவர், அவருக்கு சில முக்கியமான கடிதங்களை திருடிக் கொடுத்தது மட்டுமல்லாமல், அதை பத்திரிக்கையிலும் வெளிவரச் செய்தார். இச்செயலுக்காக அந்த வேலையாள் தீர்ப்புக்குள்ளானார். இந்த நிகழ்வு புதிதாக வரும் போப்பிற்கு ஒரு ஒழுங்கற்ற நிலையை உருவாக்கித்தந்தது.

வாட்டிகனில் இருக்கும் சக்தி வாய்ந்த அமைப்பு ஒன்றுதான் பல முக்கியமான முடிவுகளை எடுத்துவருகின்றது. அதாவது, திருச்சபைக்கு கண்காணியை நியமனம் செய்வது, திருமணத்தின் சட்டதிட்டங்கள், குருக்களின் ஒழுங்குமுறைகள் போன்ற காரியங்களை அந்த அமைப்பே முடிவெடுக்கின்றது. ரோமாபுரியிலிருக்கும் ஒரு அமைப்பு, சீஷர்களின் என்னென்ன ஜெபங்கள் ஏறெடுக்கப்பட வேண்டும் என்று முடிவு செய்து, அதை பல மொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுகிறது. பிற திருச்சபையிலிருந்து வரும் நன்கொடைகள் எல்லாம் வாட்டிகனில் ஒரு வண்டியில் சேர்க்கப்படுகிறது. அந்த வண்டியானது, பொருளாதார நிலையை வெளியரங்கமாக வெளிப்படுத்தாததால், ஐரோப்பிய ஐக்கிய நாடுகள் மற்றும் வாட்டிகனில் மிகுந்த வாக்குத்தத்தங்களை தூண்டியுள்ளது. முப்பத்தைந்து வருடங்களாய் போப் மார்க்கத்தை பல "அறிஞர்கள்" ஆண்டு கொண்டு இருந்ததால், அவர்கள் திருச்சபையின் ஆட்சிமுறையை சரிவர கவனிக்கவில்லை. ஆகையால், இப்பொழுது தேர்வு செய்யப்போகும் போப், பல சிக்கலான முடிவுகளையும் எடுப்பவராய், இருக்க வேண்டும் என்ற கருத்துக்கள் திகழ்கின்றன.

"வாட்டிகனில் பணிபுரிபவர்கள் மட்டும் போப்பிற்கு இடையே ஒழுங்கு முறைகள் இருக்க வேண்டும், ஒரேமாதிரியான எண்ணங்கள் சிந்தனைகள் இருக்க வேண்டும்" என்று 2010-ம் ஆண்டு வாட்டிகனிலிருந்து ஓய்வு பெற்ற ஜெர்மனியைச் சேர்ந்த Cardinal Walter Kasper என்பவர் தன்னுடைய கருத்தைக் கூறுகிறார்.

முன்னொரு காலத்தில் வாட்டிகன் அமைப்பு ஒரு வழக்க மன்றமாகவும், அதில் போப் முழுமையான வல்லமை பெற்ற அரசனாகவும், எதையும் செய்ய செயல்திறன் பெற்றவராகவும் மற்றும் சட்டம் சார்ந்த நீதிமன்றத்தின் சகல அதிகாரங்களை உடையவராகவும் இருந்தார். இவ்வாறு ஒரு அமைப்பு இருப்பதாக வெளிப்புறத்தில் தோற்றமளித்தது. ஆனால், நிஜத்தில் எப்படி உள்ளது என்றால், திருச்சபையில் உள்ள 400,000 குருக்களை

கண்காணிக்க ஒரு சட்டரீதியான அலுவலகம், ஒரு பொருளாதார அலுவலகம் மற்றும் உள்துறை அலுவலகம் செயல்பட்டுக் கொண்டிருக்கிறது. திருச்சபைக்குரிய வழக்குகளை மூன்று நியாயசபைகள் கண்காணித்துக் கொண்டிருக்கின்றன. மேலும், ஆவிக்குரிய நிகழ்வுகளையும் பலமடங்காக இத்துறை கவனித்துவருகின்றன. 1988-ல் போப் ஜான்பால், வாட்டிகனில் உள்ள பலதரப்பட்ட குருக்களுக்கு "Pastor Bonus" என்ற ஒரு அரசியல் நிர்ணயத்தை வெளியிட்டார்.

## ஆவிக்குரிய பார்வையில் போப்மார்க்கம்

போப் மார்க்கத்தின் வரலாற்றை ஆராய்ந்து பார்த்தால் அது ஒரு பெரிய ஊழல் வாய்ந்த ஒழுங்கற்ற தன்னுடைய எதிராளிகளுக்கு தண்டனை வழங்கும் அரசாங்கத்தைப் பயன்படுத்திய ஒரு அமைப்பாகவே திகழ்கிறது. பலவித அக்கிரமமான தண்டனைகளை பலருக்கு வழங்கியுள்ளது. யூதர்கள் மற்றும் கிறிஸ்தவர்கள் இணைந்து ரோம நகருக்கு பாபிலோன் என்று பெயரிட்டார்கள். பாபிலோன் என்பது, பெரிய அதிகாரங்களைக் கொண்ட ரோம பேரரசு என்றும், பூமியில் இராஜாக்கள் மேல் இராஜ்யபாரம் பண்ணுகிற மாநகரம் என்றும் (வெளி. 17:18) ஏழு மலைகளின் மேல் உட்கார்ந்திருக்கிறது என்றும் (வெளி. 17:9), பூமியின் வர்த்தகத்துறை என்றும், (வெளி. 18:3), பூமியின் குடிகளை கெடுத்து (வெளி. 17:2), பரிசுத்தவான்களை தண்டனைக்குள்ளாக்கியது (வெளி. 17:6) என்றும் கூறப்படுகின்றது.

ரோம பேரரசன் கான்ஸ்டன்டைனால் துவங்கிய ரோம கத்தோலிக்க திருச்சபை, இந்த பூமியிலுள்ள எல்லா சாம்ராஜ்யங்களுடன் தன்னை இணைத்துக் கொண்டு, தன்னையே கிறிஸ்துவின் உண்மையான மணவாட்டி என்று கூறிக்கொண்டது. ஆனால், வேதாகமம் இவ்வாறு கூறுகிறது - "வேறொரு தூதன் பின்சென்று: பாபிலோன் மகா நகரம் விழுந்தது! விழுந்தது! தன் வேசித்தனமாகிய உக்கிரமான மதுவைச் சகல ஜாதிகளுக்கும் குடிக்கக் கொடுத்தாளே! என்றான்." (வெளி. 14:8) "மேலும், இரகசியம், மகா பாபிலோன், வேசிகளுக்கும் பூமியிலுள்ள அருவருப்புகளுக்கும் தாய் என்னும் நாமம் அவள் நெற்றியில் எழுதியிருந்தது." (வெளி. 17:5) என்று யோவான் எழுதுகின்றார். அடையாளமான இந்த பாபிலோன், தன்னுடன் தொடர்பு கொண்ட அனைவரையும் கெடுத்தது என்று யோவான் கூறுகின்றார். "அந்த ஸ்திரீ இரத்தாம்பரமும் சிவப்பான ஆடையுந்தரித்து, பொன்னினாலும் இரத்தினங்களினாலும் முத்துக்களினாலும் சிங்காரிக்கப்பட்டு, தன் வேசித்தனமாகிய அருவருப்புகளாலும் அசுத்தத்தாலும் நிறைந்த பொற்பாத்திரத்தைத் தன் கையிலே பிடித்திருந்தாள்." (வெளி. 17:4)

பழைய ஏற்பாட்டில் பாபிலோன் பற்றின நிழலான கருத்துக்களைச் சார்ந்தது என்றும் யோவான் கூறுகின்றார். (எரே. 25:15, 16) எரேமியா 20 தேசங்களை வரிசைப்படுத்தி இவ்வாறு கூறுகிறார் (எரே. 25:27, 28). பாபிலோனின் இறுதி வீழ்ச்சி, வெளி. 18:21-ல் கூறப்படுகிறது. "அப்பொழுது, பலமுள்ள தூதனொருவன் பெரிய ஏந்திரக்கல்லையொத்த ஒரு கல்லை எடுத்துச் சமுத்திரத்திலே எறிந்து: இப்படியே பாபிலோன் மகாநகரம் வேகமாய்த் தள்ளுண்டு, இனி ஒரு போதும் காணப்படாமற்போகும்."

பலர் ஒப்புக்கொள்ளும் உண்மை என்னவெனில், தீர்க்கதரிசனத்தின்படி போப் மார்க்கம் மற்றும் அதனோடு பங்கேற்றுக் கொண்டிருக்கும் பல அமைப்புகளின் கையில் இருக்கும் சொத்துக்கள் அனைத்தும் அவர்களிடமிருந்து பறிக்கப்பட்டு பொதுவான விஷயங்களுக்காகப் பயன்படுத்தப்படும் - "அதின் வியாபாரமும், அதின் பணையமும் கர்த்தருக்குப் பரிசுத்தமாக்கப்படும்; அது பொக்கிஷமாய்ச் சேர்க்கப்படுவதும் இல்லை; பூட்டி வைக்கப்படுவதும் இல்லை; கர்த்தருடைய சமுகத்தில் வாசமாயிருக்கிறவர்கள் திருப்தியாகச் சாப்பிடவும் நல்ல வஸ்திரங்களைத் தரிக்கவும் அதின் வியாபாரம் அவர்களைச் சேரும்." (ஏசா. 23:18)

இப்பொழுது கத்தோலிக்க திருச்சபையில் நடந்துகொண்டிருக்கும் பிரச்சனைகளின் மூலம் நாம் உணர்ந்து கொள்ள வேண்டியது என்னவெனில், மதத்தின் பேரில் நடந்து கொண்டிருக்கும் இந்த தவறான அமைப்புகளெல்லாம் வீழ்ச்சியை நோக்கியே செல்கின்றன. தேவனுடைய இராஜ்யத்தில் இந்த அமைப்புகள் மாற்றப்பட்டு வேறொரு உண்மையான அமைப்பு உருவாகும். இந்த அமைப்பில் சிக்கி பலியானவர் அநேகர் கத்தோலிக்கர்களே. கிறிஸ்துவின் ஆயிரம் வருடம் ஆட்சியில் அவர்களுக்கு ஒரு புதிய துவக்கம் உருவாகும். அறியாமையால் இந்த சபையின் போதகங்களைப் பின்பற்றிவந்த களங்கமற்ற ஜனங்கள், ஒரு புதிய துவக்கத்தைக் காண்பார்கள் என்று - "அதிலே தேவாலயத்தை நான் காணவில்லை; சர்வவல்லமையுள்ள தேவனாகிய கர்த்தரும் ஆட்டுக்குட்டியானவருமே அதற்கு ஆலயம்." (வெளி. 21:22) யோவான் கூறுகிறார். அங்கு ஒரே சபை நிறுவப்படும். மேலும், விசுவாசிப்பவர்கள் அனைவரும் உண்மையான ஒரே தேவனை வழிபடுவார்கள். என்ன ஒரு மகிமையான இராஜ்யமாக அது விளங்கும்!